ஈஸ்ரர் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 06 | திகதி : 09.04.2023 | விலை : 75.00




## காவலன் வாசக நெஞ்சங்களுக்கு
## ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்
## 2023

இயேசு அன்று சிலுவை சுமந்தார்
மனுக்குல விடுதலை வேண்டி...
எம்மீது இன்று சிலுவைகள் சுமத்தப்படுகின்றன
முப்பதாண்டு போர்ச் சிலுவை
முள்ளி வாய்க்கால் நோக்கிய
நெருப்பாற்றில் நீந்திய கல்வாரிப்பயணமானது
போதையும் பாலியல் வன்முறையும்
சமூகச் சீரழிவுகளும் குடும்பப் பிறழ்வுகளும்
சிலுவைகளாக எம் மீது சாய
வாழ்க்கைப் பாடானது
கொல்கொதா மேடானது
நச்சுயிரி சிலுவையில் எம்தலை
நசுக்கியதால் மூன்று முறையல்ல
முந்நூறு முறை முகம் குப்புற விழுந்தோம்
வலப்பக்கக் கள்வனும் இடப்பக்கக் கள்வனும்
கூட்டுச் சேர்ந்ததால்
வறுமைத் தீயில் தேசம் சுடுகாடாக
பிலாத்து கைகழுவிய தண்ணீர் கேட்டு
நாம் "தாகமாய் இருக்கிறோம்"
கழுத்துச் சங்கிலியில்
தங்கச் சிலுவை சுமப்பவர்களுக்கும்
வெள்ளிச் சிலுவை சுமப்பவர்களுக்கும்
மரச்சிலுவையின் பாரம் உறுத்துவதில்லை
இயேசுவின் பாடுகள் தெரிவதில்லை
அயலவரின் துன்பம் புரிவதில்லை
மனக்கல்லறைகளை மூடியிருக்கும்
மாயக் கற்களைப் புரட்டிக்கொண்டு
மனிதம் உயிர்த்தெழ உயிர்த்தவரோடு உயிர்ப்போம்
இயேசுவைப் போல் அல்லாது
இயேசுவாகவே...

- ஆசிரியர் வசீகரன்

## யாழ்.ஆயரின் ஈஸ்ரர் செய்தி



***"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)*** என்னும் இறைவார்த்தை வழியாக மரணத்தை வென்ற மாவீரன் இயேசு எம் மனித வாழ்வின் முடிவு மரணம் அல்ல, அது ஆண்டவருடன் கூடிய நிலை வாழ்வின் ஆரம்பம் என்பதை எடுத்தியம்புகின்றார். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பின் நம்பிக்கைச் செய்தியே எமது வாழ்வுக்கு உயிரூட்டம் கொடுக்கின்றது. நாம் இறக்காவிடில் மீட்பு இல்லை என்பதையே இயேசுவின் உயிர்ப்பின் செய்தி எமக்கு வெளிப்படுத்துகின்றது.

எமது நாளாந்த தனிப்பட்ட, சமூக பாவ வாழ்வில் மரணிக்க வேண்டியவர்களாக உள்ளோம். எமது பல பாவங்களுக்குக் காரணியாகவுள்ள 'நான்' என்ற ஆணவத்துக்குள் இறக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

*ஆயரின் முழுமையான ஈஸ்ரர் செய்தியைப் பக்கம் 2இல் பார்க்க*




**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## குடியேற்றங்களும் புத்தர் சிலைகளும் நல்லிணக்கமல்ல.

மக்கள் வாழாத ஆனால் வடக்குக் கிழக்கு மற்றும் தமிழ் நாட்டுக் கத்தோலிக்க சமயத்தவர்கள் வழிபடுகின்ற அந்தோனியார் ஆலயம் ஒன்று இருக்கும் யாழ் கச்சைதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை பலருக்கும் ஆச்சரியத்தையும் இனவாத செயற்பாடுகளின் அதி உச்சமான தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது.

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு குடியேற்றங்களும் புத்தர் சிலைகளும் வைக்கப்பட்டு வரும் நிலையில், கச்சைதீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை இரு நாடுகளுக்கிடையே பகைமையை உருவாக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் உண்டு.

அதேநேரம் முல்லைத்தீவில் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் மறைமுகமாகவும் நேரடியாகவும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மணலாற்றின் கற்தூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சத்தமில்லாமல் பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது குறித்துப் பிரதேச தமிழ் மக்கள் தமிழ் அரசியல் பிரதி நிதிகளிடம் முறையிட்டிருக்கின்றனர். தமிழர்களின் பூர்வீக மணலாற்றின் கற்தூண்பகுதியை மகாப்பிட்டிய என்னும் பெயரிலும், வண்ணாமடுப் பகுதியை வண்ணாமடுவ என்னும் பெயரிலும், அக்கரைவெளி பகுதியை அக்கர வெலிய என்னும் பெயரிலும் பௌத்த பிரதேசமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதேபோல் மணற்கேணிப் பகுதியையும் அவ்வாறே பௌத்த பிரதேசமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1984ஆம் ஆண்டு தமிழ்மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்பு கற்தூண்பகுதியில் வைரவர் ஆலயம் இருந்ததாகவும், அக்கரைவெளியில் முனியப்பர் ஆலயமொன்று இருந்ததாகவும், அவ்வாறு இருந்த கோவில்களை உடைத்தழித்துத் தற்போது அந்த இடங்களைப் பௌத்த பகுதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மணற்கேணிப் பகுதியில் இருந்த சைவ வழிபாட்டு அடையாளங்கள் உடைக்கப்பட்டு அங்கும் பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அப்பகுதித் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.
அக்கரைவெளியில் 1984 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இருந்துள்ளது.

இந்த நிலையில் அக்கரைவெளிப் பகுதியில் கொக்கிளாய்ப் பகுதியிலுள்ள தமிழ் மக்களும், கற்தூண் பகுதியில் கொக்குத்தொடுவாய் பகுதித் தமிழ் மக்களும், மணற்கேணி மற்றும், வண்ணாமடுப் பகுதிகளில் கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களும் விவசாயச் செய்கையில் ஈடுபட்டாலும் தென்பகுதியில் இருந்து வந்த சிலரால் தடுக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான கிராமங்களில் பன்னிரெண்டு கிலோமீற்றர் நீளமான கடற்கரையுடன் இணைந்த கிராம மக்களின் சுமார் ஆயிரம் ஏக்கர் பூர்வீக நிலங்கள் கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் கவனயீர்ப்புப் போராட்டங்களிலும் மக்கள் ஈடுபட்டனர்.

சிங்களக் குடியேற்றங்களாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும், மகாவலி எல் வலயத்தாலும், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற அரச இயந்திரங்களின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பாலும் இருப்புக் கேள்விக்குள்ளாகி வரும் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களில் மேலதிகமாகக் கனிய மணல் கூட்டுத்தாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையைத் தென்பகுதியைச் சேர்ந்த குழுவினர் ஆரம்பித்துள்ளதாகவும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

1979ம் ஆண்டில் 23வது சட்ட மூலமாக மகாவலி அதிகாரசபை உருவானது. 1988ம் ஆண்டில் ஒரு விசேட வர்த்தமானி மூலம் மகாவலி 'டு' வலயம் தாபிக்கப்பட்டது. அதன் பின் 2007 இல் இன்னொரு வர்த்தமானியில் அது மேலும் விரிவாக்கப்பட்டது. இதன் மூலம் தமிழர் தாயகப் பிரதேச காணிகள் அபகரிக்கப்படும் நிலை உருவாகி இன்று அதாவது 2009 இற்குப் பின்னரான அரசியல் சூழலில் கொழும்பை மையமாகக் கொண்ட அரச அதிகாரிகள் குழுவினரால் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன.

ஆகவே போருக்கு ஒத்துழைத்த வல்லரசுகள் இந்த விடயத்தில் நேர்மையாக வாய் திறந்து பேச வேண்டும் என்பதையே இந்த விடயங்கள் பகிரங்கப்படுத்துகின்றன.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ் ஆயரின் ஈஸ்டர் செய்தி

**இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!**

உயிர்த்த இயேசு சீடர்களுக்குத் தோன்றிக் கூறிய வார்த்தை **'உங்களுக்கு அமைதி உரித்தாகுக'** (யோவான் 20:21) என்பதாகும். அதே உயிருள்ள வார்த்தை உங்கள் குடும்பங்களிலும் இல்லங்களிலும் தங்கி உயிர்த்த இயேசுவின் நம்பிக்கையைக் கொடுக்க ஆசிக்கின்றேன்.

**'உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்'** (யோவான் 11:25) என்னும் இறைவார்த்தை வழியாக மரணத்தை வென்ற மாவீரன் இயேசு எம் மனித வாழ்வின் முடிவு மரணம் அல்ல, அது ஆண்டவருடன் கூடிய நிலை வாழ்வின் ஆரம்பம் என்பதை எடுத்தியம்புகின்றார். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பின் நம்பிக்கைச் செய்தியே எமது வாழ்வுக்கு உயிரூட்டம் கொடுக்கின்றது. நாம் இறக்காவிடில் மீட்பு இல்லை என்பதையே இயேசுவின் உயிர்ப்பின் செய்தி எமக்கு வெளிப்படுத்துகின்றது.

நாம் அம்மீட்பின் வாழ்வை அடைவதற்குப் பல நிலைகளில் இறக்க வேண்டியவர்களாக உள்ளோம். **'கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்'** (யோவான் 12:24) என்னும் இறைவார்த்தைக்கு அமைவாக எமது நாளாந்த தனிப்பட்ட, சமூக பாவ வாழ்வில் மரணிக்க வேண்டியவர்களாக உள்ளோம். எமது பல பாவங்களுக்குக் காரணியாகவுள்ள 'நான்' (Ego) என்ற ஆணவத்துக்குள் இறக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

இயேசுவின் உயிர்ப்புக் காட்டும் விடுதலை வாழ்வு பாவம் தவிர்ந்த தூய வாழ்விற்கு எம்மை அழைத்துச் செல்ல வேண்டும்.

நாம் தவக்காலத்தை ஆரம்பித்தபோது பல நற்பரித்தியாகங்களை மேற்கொண்டு அதன்வழி பிறர்நல உதவிகளைப் புரிந்துள்ளோம். உயிர்ப்பு விழா இப்பரித்தியாகப் பகிர்வு வாழ்வுக்கு முற்றுப்புள்ளியாகிவிடாது அவை எமது குடும்ப - அன்பிய வாழ்வில் தொடர்ந்து வாழப்படவேண்டும்.

எம் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து சற்றுத் தலைநிமிரத் தொடங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. சில பொருட்களின் விலை இறக்கம், இறக்குமதித் தடை நீக்கம் என்பன வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு ஆறுதலாக அமையும். இருப்பினும் இந்நிலை நீடிய வளர்ச்சியை ஏற்படுத்துமா? என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. காரணம் எமது நாட்டின் அரசியல் நிலைமையில் நிலையான நேர்மையான போக்கு இல்லாமையே! மக்களின் விருப்புப்படி ஓர் சிறந்த அரசியல் அமைப்பினைக் கொண்டு வர ஏதுவாகத் தேர்தலைக்கூட திட்டமிட்ட படி நடாத்த முடியாத நிலை இலங்கை அரசியலின் அவல நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

மறுபுறம் கடந்த சில நாட்களாக மதங்களுக்கு இடையே புரிந்துணர்வில்லா நிலைமைகள் தோன்றி மறைந்தமை வேதனைக்குரியது. பல்சமய சக வாழ்வுக்காகப் பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அவற்றில் எம்மை ஈடுபடுத்தி உழைக்கவும் பல சமய சமூக உறவில் நிலைத்திருந்து வாழவும் இறை வேண்டல் செய்யவேண்டியவர்களாக உள்ளோம்.

சமய சமூகப் பணிகளில் ஈடுபடுபவர் பிரிவினையைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது. சகோதர மனப்பாங்குடன் வாழ்வதன் வழியாக ***'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக'*** எனக் கூறும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ்வோமாக.


உங்கள் எல்லோருக்கும் இறை ஆசீருடன் கூடிய ஈஸ்டர் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### புனித வார வழிபாட்டு நேர ஒழுங்குகள்
### யாழ் மரியன்னை பேராலயம்
### 2023

| நாட்கள் | வழிபாடுகள் | நேரம் |
|---|---|---|
| ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு 02.04.2023 | குருத்தோலை ஞாயிறு திருப்பலிகள்<br>செபஸ்ரியார் ஆலயம் | காலை 5.30 மணி<br>காலை 7.00 மணி<br>மாலை 5.00 மணி<br>(காலை 7.00 மணி) |
| திருத்தைலம் மந்திரித்தல் புனித வாரத் திங்கள் 03.04.2023 | திருத்தைலம் மந்திரித்தல் திருப்பலி | மாலை 4.30 மணி |
| ஆண்டவரின் இராவுணவு புனித வியாழன் 06.04.2023 | திருப்பலி<br>பொது வழிபாடு | மாலை 5.00 மணி<br>இரவு 9.30 மணி |
| ஆண்டவரின் திருப்பாடுகளின் வெள்ளி 07.04.2023 | சிலுவைப்பாதை புனித வெள்ளி வழிபாடு | காலை 6.00 மணி<br>மாலை 5.00 மணி |
| பாஸ்காத் திருவிழிப்பு புனித சனி 08.04.2023 | திருவிழிப்பு வழிபாடு | இரவு 10.30 மணி |
| ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு 09.04.2023 | திருப்பலி<br>செபஸ்ரியார் ஆலயம் | காலை 5.30 மணி<br>காலை 7.00 மணி<br>(காலை 7.00 மணி) |

# துயர் பகிர்கின்றோம்

அமெரிக்காவில் பணியாற்றும் அருட்பணி ஆ.செபஸ்தியான் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி ஜக்கோவா ஜோசப்** அவர்கள் கடந்த 24.03.2023 அன்று இறைபதமடைந்தார். இவர் கிளிநொச்சி உதவிப்பங்குத்தந்தை அருட்பணி நிலான் யூலியஸ் அடிகளாரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தையர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.



# இத் தவக்காலத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் திருவாய் மொழிந்தவை

## தவக்காலப் பாதையில் இறைவேண்டல், உண்ணா நோன்பு, இரக்கம்

இறைவேண்டல், உண்ணா நோன்பு, இரக்கத்தின் செயல்களை ஆற்றுதல் ஆகியவையே தவக்காலப்பாதை எனக் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம் இதயங்களைக் கறைப்படுத்தியிருக்கும் அனைத்துத் தூசிகளையும் அகற்றவேண்டிய தேவை உள்ளது. எப்படியெனில், இறைவேண்டல், உண்ணா நோன்பு, இரக்கத்தின் செயல்கள் போன்றவை வழியாகவே. ஏனெனில், இது தவக் காலப் பாதை எனத் தன் டுவிட்டர் செய்தியில் எழுதியுள்ளார் திருத்தந்தை.

## இதயங்களை விழித்தெழ வைக்க இறைவனுக்கு வாய்ப்பளிப்போம்

நம் பாதைக்கு ஒளியை வழங்கும் இறைவார்த்தைகள் அடங்கிய நற்செய்தியைத் திறப்பதன் வழி, நம் இதயங்களை மீண்டும் விழித்தெழ வைக்க இறைவனுக்கு ஒரு வாய்ப்பளிப்போம் எனக் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்தத் தவக்காலத்தில் இறைவனின் ஒளிக்கு முன் நம்மை நிறுத்துவதற்கு முன்பாக நம் அறையின் விளக்குகளை அணைப்பது நல்லதல்ல எனக் கூறியுள்ளதுடன், நம் பாதைக்கு ஒளியை வழங்கும் இறைவார்த்தைகள் அடங்கிய நற்செய்தியைத் திறப்பதன் வழி, நம் இதயங்களை மீண்டும் விழித்தெழ வைக்க இறைவனுக்கு ஒரு வாய்ப்பளிப்போம்' எனவும் விண்ணப்பித்துள்ளார்.

இத்தவக்காலத்தில் இரவு தூங்கப் போவதற்கு முன்னர் இறைவன் முன் நம்மை நிறுத்தி, நற்செய்தியை ஒருமுறை திறந்து படிப்போம் என்பதாகத் திருத்தந்தையின் செய்தி உள்ளது.

## இயேசுவோடு தங்கியிருப்பதே நமது அடிப்படை

இத்தாலியின் கலாபிரியா பகுதியின் ஆயர்கள், குருத்துவப் பயிற்சி இல்ல அதிபர்கள், பயிற்சி வழங்குவோர், மற்றும் குருத்துவப் பயிற்சி மாணவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்த திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு, குருத்துவ மாணவர்களுக்கு என எடுக்கப்பட்டிருக்கும் தலைப்பை மையமாக வைத்து உரை வழங்கினார்.

புனித யோவான் நற்செய்தி முதல் பிரிவு, இறைவார்த்தை 39ல் காணப்படும் 'அவர்கள் அவரோடு தங்கினார்கள்' என இயேசுவின் முதல் சீடர்களைப் பற்றிக் கூறும் வார்த்தைகள் இவ்வாண்டின் கலாபிரியா பகுதி குருத்துவ மாணவர்களின் வழிநடத்தலுக்கு எடுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவோடு தங்கியிருப்பதே நமது அடிப்படை எனத் தலத்திருஅவை அதிகாரிகளிடம் கூறினார்.

தன்னைப் பின்தொடர்ந்த யோவானின் சீடர்களை நோக்கி, "என்ன தேடுகிறீர்கள்?" என இயேசு கேட்ட கேள்வியை இன்று குருத்துவப் பயிற்சி மாணவர்களையும் அருட்பணியாளர்களையும் நோக்கி இறைவன் கேட்கிறார் என அவர்களிடம் உரைத்தார் திருத்தந்தை.

மனித குலத் துன்பங்களோடு இணைந்து நடத்தல், இயேசுவைப்போல் தந்தையாம் இறைவனின் கனிவை வெளிப்படுத்துதல் போன்றவைகளை குருத்துவ மாணவர்களுக்கு முன்வைத்த திருத்தந்தை, இளையோருக்கு நற்செய்தி அறிவித்தலின் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார்.

ஒவ்வொருவரையும் அன்பு கூர்ந்து அனைத்தையும் பிறரன்பில் ஆற்றுங்கள் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைத்தும் பிறரன்பிலும், ஒன்றிப்பிலும், உடன்பிறந்த உணர்வுடனும் ஆற்றப்படவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார்.

## புனித பவுலின் நற்செய்தி அறிவிப்பு பேரார்வம்

புனித பவுல் குறித்து நோக்குவோம். சட்டத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்டவராக வாழ்ந்த புனித பவுல், தமஸ்கு செல்லும் வழியில் கிறிஸ்துவைச் சந்தித்தபின், இயேசுவின் நற்செய்தியை எடுத்துரைப்பதில் பற்றார்வம் கொண்டவராக மாறினார். பாஸ்கா மறையுண்மையில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பு நிறை இரக்கத்தின் நற்செய்தியை எடுத்துரைப்பவராக மாறினார். அதாவது, சட்டத்தின் மீது பெரும்பற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களைக் கடுமையாகத் துன்புறுத்தி வந்த புனித பவுல், நற்செய்தி அறிவிப்பில் பெரும் ஆவல் கொண்டவராகச் செயற்பட்டார். மரணம் மற்றும் உயிர்ப்பின் உண்மையான அனுபவமாக இருந்த அவரின் மனமாற்றம்,கிறிஸ்துவில் மறுபிறப்பு எடுக்க வைத்ததாக, புது படைப்பாக (2கொரி 5:17) அவரை மாற்றியது. மேலும், நாடுகள் முழுமைக்கும் நம் மீட்பைக் குறித்து நற்செய்தியை அறிவிக்கும் பேரார்வத்தை அவருக்குள் நிரப்பியது. மறைப்பணி ஆர்வத்தின் இதயமாக, உயிர்த்த கிறிஸ்துவுடனான நம் உயிர்துடிப்புடைய சந்திப்பு உள்ளது. நற்செய்தி அறிவிப்பிற்கான பேரார்வம் என்பது, இரக்கத்தின்இறைவன் பெயரால் சித்திரவதைகளையும் வன்முறைகளையும் நியாயப்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்காது. இரக்கத்தின் இறைவனாம் ஆண்டவர், தன் மகனாம் இயேசுவின் நற்செய்தியில் நாம் நம்பிக்கை கொள்வதன் வழி புதிய வாழ்வு என்னும் கொடையை எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிப் பெற்றுக்கொள்ள நம்மை அழைக்கிறார்.

## நாம் எழுந்து மீண்டும் நடைபோடுவதையே இயேசு எதிர்பார்க்கிறார்

குழந்தையாக நாம் நடக்கக் கற்றுக் கொண்டபோது எப்படியிருந்தோமோ, அதுபோல்,தற்போதும் இறைவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, அவரின் வழி நடத்தலில் நடைபோடுவோம் என உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"கட்டுகளை அவிழ்த்து அவனைப் போக விடுங்கள்" என இலாசரை இயேசு உயிர்ப்பிக்கும் நிகழ்வை விவரிக்கும் நற்செய்தி வாசகம் குறித்து தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்குத் தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்ட திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு சிரமமான வேளையிலும் நாம் எழுந்து நின்று மீண்டும் நடைபோடுவதையே இயேசு எதிர்பார்க்கிறார் எனக் கூறினார்.

அனைத்தையும் இழந்துவிட்டதாக எண்ணி நாம் மனம் சோர்ந்துபோகும் நிலையில், இறைவன் தன் அளவற்ற வல்லமையால் நம்மை மீட்டெடுக்கிறார் என உரைத்த திருத்தந்தை, அனைத்து நம்பிக்கைகளும் இழந்துவிட்ட நிலையிலும், இலாசரை உயிர்ப்பித்த இயேசு, நம்மையும் காக்கிறார் என உரைத்தார்.

வலி தரும் இழப்புகளாலும், நோயாலும், கசப்பான ஏமாற்றங்களாலும், நம்பிக்கைத் துரோகம் போன்றவைகளாலும் நாம் நம்பிக்கையிழக்கும்போதும்,நம்பிக்கையிழந்த மக்களைச் சந்திக்கும்போதும், ஒரு மூடப்பட்ட கல்லறைக்குள் இருளின் நடுவில் இருப்பதுபோல்தோன்றலாம், ஆனால், உண்மையில் நாம் தனியாக இல்லை, இயேசு இத்தருணங்களில் நம் அருகில் இருந்து நமக்கு வாழ்வளிக்கிறார் என உரைத்தார்.

எதிர்மறை எண்ணங்களால் நாம் ஒரு நாளும் நசுக்கப்படக் கூடாது, ஏனெனில், கடவுளை விசுவசிப்பது, மற்றும் அவரில் நம்பிக்கைக் கொள்வது என்பது இதிலிருந்து நம்மைக் காக்கும் எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கல்லைப் புரட்டுங்கள், அதனுள் உள்ளவை அனைத்தையும் என்னிடம் நம்பிக்கையுடன் அச்சமின்றித் தாருங்கள், நான் உங்களுடன் உள்ளேன், உங்களை வாழவைப்பேன், என நம் ஒவ்வொருவரிடமும் இயேசு கூறுகிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாம் பலவேளைகளில் எழும்பி நடக்கும் சக்தியின்றி மனம் தளர்ந்திருக்கிறோம், ஆனால், நாம் நடந்து முன்னேறிச் செல்லவேண்டும், என ஊக்கமளித்து, நான் உன்னுடன் இருக்கி றேன் என இயேசு நம் ஒவ்வொருவரையும் நோக்கிக் கூறுகிறார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்பிக்கையின்மை, அச்சம், சோக அனுபவங்கள், போன்று நம்மைத் தளர வைக்கும் கட்டுக்களை அறுத்தெறிந்து, நம்பிக்கையை இறக்க விடாமல், வாழ்வுக்குத் திரும்புங்கள் எனப் புனித பேதுரு பெருங் கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளிடம் அழைப்புவிடுத்தார்.

இதயத்தில் சுமைகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், இயேசுவை நோக்கி அவைகளைத் திறந்து, அவர் அன்பினைக் கண்ணாடி ஒளியில் பெற்று, அதனை நம் வாழ்வின் நடவடிக்கைகளிலும் வார்த்தைகளிலும் பிரதிபலிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

பாவிகளாயிருக்கும் நாம் அனைவரும், கடவுள் நம்மை மன்னிப்பதுபோல், நாமும் ஒருவர் ஒருவரை மன்னிக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார் திருத் தந்தை பிரான்சிஸ்.

## தொழில் நுட்பம் என்பது மனிதனை மையம் கொண்டதாக வேண்டும்

கல்வி மற்றும் கலாசாரத்திற்கான திருப்பீடத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்கள், நன்னெறியாளர்கள், இறையியல்வல்லுனர்கள் மற்றும் திருப்பீட உயர்அதிகாரிகளுடன் இடம் பெற்ற மினர்வா கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நன்னெறிகள் மற்றும் பொறுப்புணர்வுடன் தேர்வு செய்யப்படுபவைகளின் கனியே தொழில்நுட்ப வளர்ச்சியாக இருக்கவேண்டும் என உரைத்த திருத் தந்தை, ஒரு மனிதனின் மதிப்பு என்பது, முன்சார்பு எண்ணங்களுடன் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களால் நிர்ணயிக்கப்பட முடியாது என எடுத்துரைத்தார்.

நன்னெறி, அறிவியல், கலை, வாழ்வின் அர்த்தம் போன்றவை குறித்த அடிப்படைக் கேள்விகளுக்கு, மத நம்பிக்கையாளர்களுக்கும் மதநம்பிக்கையற்றவர்களுக்கும் இடையே இடம்பெறும் கலந்துரையாடல்கள் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும், மனித குல ஒன்றிணைந்த வளர்ச்சிக்கும் பயன்தரவல்லவை எனத் தான் உறுதியாக நம்புவதாகவும் கூறினார்.

தொழில்நுட்பம் என்பது மனிதனை மையமாகக் கொண்டதாகவும், அவனுக்குப் பயன்தருவதாகவும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனிதகுல மாண்பை முன்னேற்றும் நோக்கத்தில் ஒன்றிணைந்த, அனைவரையும் உள்ளடக்கிய கலந்துரையாடல்கள் அவசியம்என்பதையும் வலியுறுத்தினார். இன்றைய தொழில் நுட்ப முன்னேற்றமும் சரிநிகரற்ற நிலைகளும், சமுதாய பொருளாதாரத் தீர்மானங்களில் இரக்கத்தை உள்ளடக்குதல், அனைவரையும் உள்ளடக்கிய கலந்துரையாடல்கள் பன்முகத்தன்மையை வளமையாக நோக்குதல் போன்றவை குறித்தும் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# நம்பிக்கையின் நல்வழி



**அருட்பணி வின்சன் பற்றிக்**

கடல் நடுவே ஓடவிடப்பட்ட காகிதக் கப்பல் இலகுவில் அதன் உருவை இழந்துவிடும். மழை நீரில் நனைய விடப்பட்ட மண்வீடோ எளிதில் கரைந்துவிடும். இவ்வரிசையில் மனித வாழ்க்கை ஒரு நீர்க்குமிழிக்கு ஒப்பாகின்றது. நீர்க்குமிழி நிலைத்து நிற்பது ஒரு சில நிமிடங்களே. மனித வாழ்க்கையும் நிலையில்லாதது தான் இதனை நிர்மூலமாக்கப் பல சக்திகள் காத்திருக்கின்றன. இவற்றுள் நம்பிக்கையின்மையே அபாரமானது. 'யாரைத் தான் நம்புவதோ பேதை நெஞ்சம்" என்று அங்கலாய்க்கும் மனிதன் ஆரம்பத்தில் தன்னைத்தானே நம்பாது தத்தளிக்கின்றான். தன்னகத்தே உள்ள சக்திகளில், தனது ஆற்றல்களில் சதா சந்தேகம் கொள்பவன் தன்னையே நம்பமாட்டான்.

தனது சொந்த ஆற்றல்களில் அவநம்பிக்கை கொண்டு வாழ்வின் 'பிடிப்பை"க் குறைத்துக்கொள்வான், இவ்விதமாகத் தன்னம்பிக்கை இழந்த தனிமனிதன் படிப்படியாக மற்றவர்களை நம்ப மறுப்பதன் நிமித்தம் விரக்தியினால் ஆட்கொள்ளப்படும் அவலநிலைக்கு ஆளாகின்றான்.

மகாபாரதத்திலே ஒரு சுவையான கட்டம். அன்றொரு நாள் கர்ணன் பள்ளி அறையிலே துரியோதனனது மனைவியுடன் கூடிக் கதைத்துக் கொண்டிருந்த பொழுது அவளது கழுத்து ஆரம் சிதறியது. அவன் பள்ளி அறைக்குள் நுழைந்தான். ஆரங்கள் சிதறிக் கிடந்ததைக் கண்டான். வெம்பிச் சிவக்க வேண்டிய அவனுடைய முகம் புன்னகை பூத்தது. **“நண்பா, இந்தக் கல்லைப் பொறுக்கவோ அந்தக் கல்லைப் பொறுக்கவோ**” என்று கூறிக் கர்ணனோடு கூடி அந்தக் கற்களை எடுத்துக் கோர்த்து முழுமாலையைக் கட்டினான். இவ்வாறு துரியோதனன் தான் பொறுப்புள்ள கணவன் என்பதையும் நம்பிக்கைக்குரிய நண்பன் என்பதையும் வெளிப்படுத்தினான்.

சிலவேளைகளில் சில குடும்பங்களில் உறவு மாறாட்டங்களும் உரிமைப் போராட்டங்களும் ஏற்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு மனைவி தன் கணவனிலே சந்தேகம் கொண்டவளாய் அதனை ஊர்ஜிதப்படுத்தத் தன் சொந்த மகனையே வேவு பார்க்க அனுப்பி வைக்கின்றாள். இதனால் தகப்பனுக்கும் மகனுக்கும் இடையேயுள்ள உறவு, கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவு பலவீனப்படுத்தப்படுகின்றது. தப்புச் செய்யாத கணவனின் நடத்தையினைத் துப்புத் துலக்க முனைகின்றமனைவி அவள் உரிமைக்காகப் போராடிக்கடமையினை மறந்து விடுகிறாள். (சிலவேளைகளில் கணவன் தப்புச் செய்திருந்தாலும் கூட கரவு பார்க்கும் மோசடி குடும்பப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கும்). சந்தேகம் கொண்டவரது நெஞ்சினில் சஞ்சலம் வளர அமைதி அருகி விடும். “நான் அன்பு செய்யும் ஒருவர் என்னோடு மட்டும் அளவளாவிப் பேசவேண்டும். என்னோடு மட்டும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்க வேண்டும்” என எண்ணுவது ஒருவரது தன்னல உணர்விலிருந்து எழுகின்ற வேட்கையேயாகும். சுயநல அன்பு நிலையானதல்ல.

நிபந்தனையில்லாத (unconditional) தியாக அன்பே நிலையானது. அவனை அவனாக, அவளை அவளாக எந்தநிலை யிலும் தான் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று ஒரு கணவனும் மனைவியும் கூறும் பொழுது அல்லது இரு இணை பிரியா நண்பர்கள் கூறும் பொழுது அங்கே உண்மையான அன்பு, உள்ளங்கள் இணைந்த அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

**நான் பேச நினைப்பதெல்லாம் நீபேச வேண்டும்... நான் காணும் பொருள் யாவும் நீயாக வேண்டும்** என்ற மனநிலையில் கண்ணும் கண்ணும் பேச, உள்ளமும் உள்ளமும் பேச ஒன்று சேர்ந்த இருவர், “தன் துணைவர் துரோகம் செய்யலாம்” என்று கனவிலும் கற்பனை செய்யமாட்டார். ஆழமான உறவிலே ஆளுமை சிதைவுறுவதில்லை; ஆணவம் அடிமைப்படுத்துவதில்லை; அந்தரங்கங்கள் அம்பலமாவதில்லை. சந்தேகங்கள் சஞ்சரிப்பதில்லை. மாறாக, தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்படும்; சமத்துவம் வளர்க்கப்படும்; சமதர்மம் மதிக்கப்படும்; சம உரிமை உயர்வாக்கப்படும். தனது துணைவர் தனக்கு மட்டுமே உரியவர் என்ற தன்னலப் போக்கில் அவருடைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி வைப்பது அன்புக் குறைவினையே எடுத்துக்காட்டுகின்றது. பூரணமான அன்புடைய இருவரிடையே எப்பொழுதும் பூரணமான சுதந்திரமான செயற்பாடுகளே பரிணமிக்கும்.

“என்னுடையதெல்லாம் உன்னுடையதே; உன்னுடையதெல்லாம் என்னுடையதே” என்ற பரஸ்பரப் பரிமாற்றமே இவர்களிடையே காணப்படும். ஒருவரை ஒருவர் குறைநிறைகளோடு உள்ளவாறே ஏற்று, ஒருவரை ஒருவர் விளங்கிக் கொண்டு வாழ முற்படும்பொழுது அங்கே அமைதியும் ஆனந்தமும் பெருகிக் காணப்படும். மாறாக, என்னுடையதெல்லாம் என்னுடையதே; உன்னுடையதும் என்னுடையதே” என்ற மனப்போக்கு முற்றிலும் சுயநலமேயாகும். தனது துணைவரது உடற் தேவைகளைப் பற்றிச் சற்றுமே புரிந்து கொள்ளாது, அவற்றிற்கு மதிப்பளிக்காது தனது சொந்த ஆசை, அபிலாசைகளை மட்டுமே நிறைவு செய்ய அல்லது சமூக அந்தஸ்தை, கௌரவத்தை நிலைநாட்ட அவனோ(ளோ)டு தொடர்பு கொள்ளும்பொழுது அவன்(ள்) ஒருபொருளாகவே பயன்படுத்தப்படுகின்றான் (ள்).

*“பொருட்கள் பாவனைக்கு; ஆட்கள் அன்பு செய்யப்படுவதற்கு ”* என்கிறார் அறிஞர் ஜோண்பவல். ஆனால், நடைமுறையில் இன்று பல குடும்பங்களில், “பொருட்கள் அன்பு செய்யப்படுவதற்கு; ஆட்கள் பாவனைக்கு” என்ற தலைகீழ் மாற்றமே நிகழ்கின்றது. இத்தகைய உறவுச் சிக்கல் வேண்டப்படாத விபரீதத்திற்கு வழி வகுக்கின்றது. நாணயமற்ற உறவுப் பரிமாற்றம் நியாயமான எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யமாட்டாது. அதேவேளை, நாணயமான உறவுப் பரிமாற்றம் நியாயமற்ற எதிர்பார்ப்புக்களை வேண்டி நிற்காது. இது ஒரு வீட்டின் கதை. பெரியோர், பெற்றோரின் பேச்சின்படி முன்பின் ஒருவரை ஒருவர் தெரியாத, ஒருவர் ஒருவரது குணநலன்களைப் புரியாத விஜயன், ராஜி இருவர்க்கிடையே திருமணம் நடைபெறலாயிற்று. இருவரும் இரு முரண்பட்ட பாத்திரங்கள் என்பது திருமணத்தின் பின்னரே தெரியவந்தது. விஜயன் ஒரு தனிப்போக்கு. அவனுக்கு நண்பர்கள் எவருமே கிடையாது. எவருடனும் கதைத்துச் சிரிப்பதில்லை. குறிப்பாக எதிர்ப்பாலாரை ஒதுக்கி வாழ்ந்து வந்தான். தானும் தன்வேலையும் என்றிருப்பான். மாறாக, விஜி சோஸியலாக, திறந்த மனப்பான்மையுடன் எல்லோருடனும் கதைத்துச் சிரிக்கும் பழக்கமுடையவள். இவளது சரளமாகப் பேசும் சுபாவத்தால் பல இளம் உள்ளங்கள் இவளது உள்ளத்திற்கு சொந்தம் கொண்டாடின.

விஜயனோ அவளது உடல் மட்டுமே தனக்குச் சொந்தம் என்ற வகையில் செயற்பட்டான். எனினும் நான்கு மாதங்களின் பின்னர் அவள் கர்ப்பமாகியது தெரிந்ததும் அவளது கற்பினைச் சந் தேகித்து, அவளைச் சித்திரவதைப்படுத்து கின்றான். நான்கு மாதங்களாக அவளது சோஸி யல் செயற்பாடுகளைப் பற்றி எதுவுமே பேசாதிருந்தவன் எரிமலைபோல் சீறினான். முடிவு? உடலாலும் உள்ளத்தாலும் மாசுபடுத்தப்படாத ராஜி, “படி தாண்டினாலும் பத்தினி பத்தினிதான்” என்று தன் பிறந்த வீட்டிற்குப் போகின்றாள்.

(தொடர்ச்சி 13ம் பக்.)



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

(சென்றவாரத் தொடர்ச்சி)

### கிறிஸ்தவரல்லாதோருடன் உறவு

அங்கு தமது உரையில்,“ பக்தி வைராக்கியம் நிறைந்த வாலிபர் தம்மைத் தேவனுடன் இன்னும் கூடிய முறையில் இணைக்கும் பொருட்டும் இவ்விணைப்பின் மூலம் நம் நாட்டின் மேலும், நமது சனங்களின் மேலும் தேவனின் விசேஷ ஆசீர்வாதங்களைக் கொண்டுவரப்பண்ணும் நோக்கத்துடனுமே இந்த நிலையம் காலம் சென்ற வண. தோமஸ் சுவாமியாரால் உருவாக்கப்பட்டது.

தேவனுடன் இணைப்பை ஏற்படுத்தும் பொருட்டு சுவாமியார் உபயோகித்த வழிகள் மூன்று. அவை செபம், தியானம், தபம் ஆகும்.” (ரோசரி அல்போன்ஸ் இ.த. ஆசியாவில் ஓர் அதிசயம் பெங்களூர் 1996, பக். 340) என்று கூறிப் பௌத்த மக்கள் மத்தியில் மகாநாயகதேரோ புரிந்து வரும் பணிகளுக்காகத் தோலக்கட்டி சகோதரர்கள் விஷேடமாகச் செபிப்பார்கள் என்றும் கூறினார்.

இவ்விதமாகப் பல பேருடன் ஆழமான உறவில் இணைந்திருந்தாலும், பலர் இவரது நட்பைத்தமது சுயநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியதால் மாந்தை கெபிப் பிரச்சினை ஆயரின் இறுதிக்காலம் வரை தீர்க்கப்படாததாக இருந்தது. இறுதியில் வங்காலை மண்ணின் கத்தரின் மார்க் என்ற பெண்ணின் விடாமுயற்சியே இது சுமூகமாகத் தீர்க்கப்படுவதற்குக் காலாய் அமைந்தது.

இதனால் இக்கெபி 1950.05.19இல் இவரால் திறந்து வைக்கப்பட்டிருந்தாலும் 1970இன் பின்பே வழிபாடுகள் இடம்பெற முடிந்தது. எல்லை கடந்து உதவும் நட்பு இவரது ஆழுமையில் விளங்கிய இன, மொழி, மத பேதங்களைக் கடந்த சகோதர உணர்வு ஏனைய மதங்களின் மற்றும் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களுடன் நல்லுறவைப் பேணும் அளவிற்கு இவரைத் தூண்டியிருந்தது. இத்தலைவர்களுடன் இவர் கொண்டிருந்த உறவு சமய, சமூக, இன, சாதி, மொழித் தடைகளைத் தாண்டியதோர் நட்பு ரீதியான உறவாக ஒருபுறமும் கத்தோலிக்க திருச்பையின் தப்பபிப்பிராயங்களைக் களையும் உறவாக மறுபுறமும், உலகின் பிரதான மறைகள் தமது மறை நூல்களில் கொண்டிருக்கும் மீட்புப் பற்றிய செய்தியை அனைவருக்கும் அறிவிப்பதாக இன்னொரு புறமும் ஒன்றாகச் சேர்ந்து முழுமானிட மீட்புக்காகப் பணியாற்றும் குறிக்கோளைக் கொண்டதாக வேறோரு புறமும் அமைந்திருந்தது. இவ்வுறவு நிலை, இவர் கத்தோலிக்கப் பாடசாலைகளின் முகாமையாளராகப் பணியாற்றிய போது, ஏனையமுகாமையாளர்களுடன் கொண்டிருந்த உறவின் அனுபவங்களேயெனலாம்.

இவ்வுறவு இவருடைய நெருக்கடியான தேவைகளில் அவர்களை உதவி செய்யவும் வைத்தது. ஏனெனில் 1960இற்குப் பின்பு அரசாங்க உதவியின்றிப் பராமரிக்கும்படி, இவரின் வேண்டுகோளுக்கிணங்கி விடப்பட்ட ஐந்து பாடசாலைகளை நடாத்துவதற்கு, நிதிப் பற்றாக்குறையாக இருந்தவேளை, கத்தோலிக்கர் அல்லாதோர் பலர் கடனாகவோ, அன்பளிப்பாகவோ உதவி செய்யும் அளவிற்கு, அந்த நண்பர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தார். ஏனெனில் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் நிதி நிலமை மிகவும் மோசமானது என்பதை அறிந்திருந்த காரணத்தால் பெரிதாக யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க மக்களின் பங்களிப்பில் இவர் தங்கியிருக்கவில்லை.

எடுத்துக்காட்டாக, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. எஸ்.ஏ.ஈ. இரட்ணராஜா, கல்லூரி முதல்வர் அருட்தந்தை எவ்.ஜே. ஸ்ரனிஸ்லொஸ் அ.ம.தி. விடுமுறையில் சென்றிருந்த போது, 1970 டிசெம்பர் மாதம், கிறிஸ்மஸ் விசேட கொடுப்பனவு, ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்காக ஆயரை அணுகினார். ஆயரிடம் பணம் இருக்கவில்லை. அதிபரைச் சந்திப்பு அறையில் உட்காரும்படி கூறிவிட்டு, யாருடனோ தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சற்று நேரத்தில் நல்லை ஆதீன கர்த்தா ஒரு பையுடன் வந்து ஆயரின் அறைக்குள் உரிமையுடன் சென்று நட்புறவுடன் உரையாடி, மேசையில் பையை வைத்துவிட்டுச் சென்றதை அதிபர் கண்டார். உடனடியாகவே இவர் அதிபரை அழைத்துப் பையுடன் பணத்தை எடுத்துச் செல்லும்படி பணித்தார். இச்சம்பவம் இவர்களுக்கிடையேயான நம்பிக்கையையும், ஆழமான உறவையும் தமக்கு உணர்த்தியதாக அதிபர் என்னிடம் கூறினார்.

(ஆயரின் நெருங்கிய உறவினராகிய அதிபர் திரு. எஸ்.ஏ.ஈ. இரட்ணராஜாவுடன் நேர்காணல், 2001.01.30, மாலை 5.30மணி)

*(தொடரும்...)*

காவலன் கலசம்

# விடியலை நோக்கி

இன்றைய சமூகத்தில் பலர் மன அழுத்தத்தால் (stress) பாதிக்கப படுகின்றனர். மனஅழுத்தம் என்பது அனைவருக்கும் ஏற்படும் ஒரு சாதாரண மனித எதிர்வினை. நாம் சவால்களைச் சந்திக்கும் போது எமது உடல் மற்றும் உளம் பதில் களை உருவாக்குகின்றன.

மன அழுத்தம் இல்லாத வாழ்வைக் கற்பனை செய்து பார்க்க இயலாது. ஒரு அளவு வரை மன அழுத்தம் இருப்பது சீரான வளர்ச்சிக்குத் தேவைப்படவும் கூடும்.

பெரும்பாலான இளையோர் தங்களிடம் உள்ள பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசப் பயப்படுகின்றனர். இதனால் மனக்குழப்பம், மன அழுத்தம், மனச் சோர்வு ஏற்படு கின்றன.

## மன அழுத்தத்தால் ஏற்படும் விளைவுகள்

உடல்ரீதியான அறிகுறிகளை ஆராயும்போது : படபடப்பு, நடுக்கம், குளிர் அல்லது வியர்த்து வழிதல், இறுக்கமான தசைகள், வயிற்று உபாதைகள், பற்களைக் கடித்தல் போன்றவையாகும்.

உள ரீதியான அறிகுறிகளை அவதானிக்கும்போது: கவனம் செலுத்துவதில் சிரமம், தன் நம்பிக்கை இழத்தல், அடக்க முடியாத ஆசைகள், அதீத பயம் போன்றவையாகும்.

இதன் விளைவாக ஒரு- வரது செயற்பாட்டிலும் அபாயகரமான மாற்றங்கள் இடம்பெறலாம். அதிகமாகப் புகைபிடித்தல், மது அல்லது போதைப்பொருள் அருந்துதல், ஞாபக மறதி, மற்றும் வன்முறைச் செயல்களுக்குத் தூண்டப்படுதல் போன்றவையாகும்.

## மன அழுத்தத்தைச் சமாளித்தல்

மன அழுத்தத்தை நிர்வகிப் பதும் அதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பொதுவாக நாம் எமது நடத்தைக்கு நாம் பொறுப்பேற்பது கிடையாது. அதற்கான காரணத்தை அறிந்து கொண்டால் சில இயற்கையான வழிமுறைகளைக் கையாளலாம். ஓய்வு, இயற்கை அழகை இரகசித்தல், சுய ஏற்பு, பேராசையைத் தவிர்த்தல், நல்ல நண்பரின் தோழமை போன்று எவரும் கடைப்பிடிக்கக்கூடிய "சிறு வழிகளை" செயற்படுத்தல் மூலம் சமாளித்துக் கொள்ளலாம்.

## மன அழுத்தம் பலவிதம்

பள்ளியில் படிக்கும் மாணவர் திறமையான சித்தி பெற உழைக்கும் போது அவரது ஆற்றலுக்கு அதிகமாக முயற்சி செய்வாரானால் அவருக்கு மன அழுத்தம் ஏற்படும். அவ்வாறே குடும்ப வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், மனைவி கணவன் உறவில் ஏற்படக்கூடிய விரிசல்கள் ஒருவருக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம். வேலைத்தளத்தில் முன்வைக்கப்படும் இலக்குகளை எட்டுவதற்காக அதிக பழுவைச் சுமப்பதால் ஒருவர் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார். அன்பரின் திடீர் இழப்பு அல்லது தீராத நோய் இவற்றை எதிர்கொள்ள முடி யாமை ஒருவர் மன அழுத்தத்தால் பாதிப்புக்கு உள்ளாகலாம். இப்படி எல்லா நிலையில் உள்ளவரும் பற்பல காரணிகளால் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். உளவியல் நோக்கில் மனஅழுத்தம் ஒரு மனநோய் அல்ல. ஆயினும் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் போது பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

## இயேசுவும் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார்

இயேசுவினுடைய வாழ்க்கை அனுபவத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவரது அன்புக்குரிய சீடர் கள் இயேசுவின் போதனை வாழ்வைப் புரிந்துகொள்ளாமையும், அவர்களது எதிர்பார்ப்புகள் இயேசுவுடைய போத னைக்கு வெகு தொலைவில் இருந்தமையும் **இயேசுவின் மனதை வெகுவாகப் புண்படுத்தியது.**



பரிசேயர், சட்டவல்லுனர், பல யூதர்கள் தொடர்ச்சியாக இயேசுவுக்கு நெருக்கடி கொடுத்து, குற்றம் கண்டுபிடித்து, வாக்குவாதம் செய்து இறுதியாக அநீத முறையில் அவருக்கு மரணதண்டனை பெற்றுக் கொடுத்தது **இயேசுவின் மனதை வெகுவாகப் புண்படுத்தியது.**

அவருடைய பாடுகளை முன் அறிந்து காட்டிக் கொடுக்கப்படுவதையும், மறுதலிக்கப்படுவதையும் கசைக- ளால் அடிக்கப்பட்டு, சிலுவை சுமந்து ஒரு கள்வனைப் போன்று சிலுவை மரணத்தைச் சந்திப்பது **இயேசுவின் மனதை வெகுவாகப் புண்படுத்தியது.**

கெத்சமனித் தோட்டத்தில் இயேசு திகிலும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர், *"எனது உள்ளம் சாவு வருமளவிற்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது." (மாற்கு – 14:34)* என்று குறிப்பிடுகின்றார் மாற்கு நற்செய்தியாளர்.

லூக்கா 22: 44 இல் "அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போலத் தரையில் விழுந்தது". தனது சாவையும் அவர் அனுபவிக்க இருந்த வேதனைமிக்க பாடுகளையும் எதிர் கொண்ட போது இயேசு மனிதன் என்ற முறையில் **பெரும் மன நெருக்கடிக்கு உள்ளானார்.**

## இயேசு எப்படிப் பதில் வழங்கினார்?

இயேசு மனக் கலக்கம் அடைந்த போது சூழலை மாற்றிக் கொள்ள முயல வில்லை: நியதியை விட்டு ஓடி ஒழிந்து கொள்ளவில்லை: தனது பலத்தையும் வளங்களையும் துஷ்ப்பிரயோகம் செய்யவில்லை: அவரது பாடுகளோடு பின்னிப் பிணைந்த அவமானத்தை யும், கேலிகளையும் தவிர்த்துக் கொள்ளவில்லை.

அந்த இரவு பெரும் நெருக்கடியான இரவு தமக்கு நெருக்கமான சீடர்களுடன் மனம் திறந்து பேசினார். தம்முடன் தங்கி விழித்திருங்கள் என்று கேட்டுக்கொண்டார். பின்பு தம் இறை தந்தையிடம் இரந்து மன்றாடினார். *"உருக்கமாய் இறைவனி டம் வேண்டிக் கொண்டார்" லூக் 22:44.*

> *"எனது உள்ளம் சாவு வருமளவிற்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது."*
> *(மாற்கு 14:34)*

அருட்தந்தை ஜீவா போல் அமதி

தம் விருப்பத்தையும் இயலாமையையும் வெளிப்படுத்தினார். ஆனாலும் தம் தந்தை யின் கரங்களில் தம்மை ஒப்படைத்து வேண்டினார். கால் தடுமாறும் குழந்தை தன் தந்தையிடம் கரம் நீட்டி ஆபத்தில் உதவுமாறு மன்றாடியது போன்று இயேசுவின் விண்ணப்பம் அமைந்திருந்தது. *"என் தந்தையே, முடிந்தால் இத் துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும் ஆனாலும் என் விருப்பபடி அல்ல, உம் விருப்பபடியே நிகழட்டும்" (மத் 26:39)* இங்கு தமது உள் உணர்வையும் , ஏக்கத் தையும், தவிப்பையும் மனம் திறந்து தமது இறை தந்தைக்கு வெளிப்படுத்தினார். ஆனாலும் அவருக்கு இருந்த ஆழ்ந்த நம்பிக்கையையும் உண்மையான அன்பை யும், வலுவான பிரமாணிக்கத்தையும் கைநெகிழவிடவில்லை.

### *மன அழுத்தம் ஆன்மீகம் சார்ந்தது*

மனஅழுத்தமும் , ஆழ்ந்த கவ லையும் வெறுமனே ஒரு உளவியல் பிரச்சினை அல்ல அது ஆன்மீகம் சார்ந்த தாகும். இவ் உண்மையை கிறிஸ்து மிக மிகத் தெளிவாகப் போதித்தார். கடவுளை நம்புங்கள். வானத்துப் பறவைகளுக்கு உணவு அளிப்பவர், காட்டு மலர்களை அழகுபடுத்துபவர். உங்கள் தேவைகளை நன்கு உணரும் உங்கள் விண்ணகத் தந்தை உங்களுக்கு இன்னும் அதிக மாகச் செய்வார். ஆகவே கவலை கொள்ளாதீர்கள் என்று போதித்தார். (மத் 6:25-34)

பெருஞ்சுமை சுமந்து சோர்ந் திருப்பவர்களே , நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்ற ஆறு தல் வார்த்தைகளைக் கூறித் தனது கனிவை யும், இரக்கத்தையும் முன்வைத் துப் போதித்தார் இயேசு.

எமது வாழ்வில் சில கட்டங்கள், சில மணித்துளிகள் கூட எமது எதிர் காலத்தை நிர்ணயிக்கும் வேளை- களாகும். *"இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை"* என்பதை அன்னை மரியாள் நம்பினார். அதனால் "ஆகட்டும் என்று தன்னை இறைவன் கரங்களில் அர்ப்பணித்தாள்.

விதியை மதியால் வெல்லக் கூடியவர் மனிதர். வரலாற்றை மாற்றி அமைக்க கூடியவரும் மனிதர். அதனால் பாடுகளையும், சாவையும் மன உறுதியுடன் இயேசு எதிர் கொண்டார். *"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்"* என்று இயேசு உரத்த குரலில் கூறி தம்உயிர் துறந்தார். இதைக் கண்ட நூற்றுவத்தலைவர் *"இவர் உண்மையாகவே நேர்மையாளர்"* என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.

மனக் கலக்கமும் ஆழ் துயர மத்தியிலும் கடவுளைத் தம் தந்தையாக ஏற்றுக் கொண்ட இயேசு வாழ்வின் வி- டியலை தமது உயிர்ப்பினால் எழுச்சியுறச் செய்தார் உயிர்ப்பு வாழ்வில் எழுச்சியுற்ற இயேசு எமக்குப் பெரும் உதாரணமாக விளங்குகின்றார்.

பல நூற்றுக்கணக்கான நம்பிக்கையாளர் இறைவனிடம் வேண்டுதல் புரிகின்றனர். மன்றாட்டும் ஒரு ஆற்றல் மிக்க சிகிச்சை என்கின்றனர் பல உளவியலாளர். •


இங்கு இயேசு தமது இறைத் தந்தையில் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை எமது வாழ்வில் ஊன்றி இருக்க வேண்டும். இறைவனோடு மனம் திறந்த பேசுவதன் மூலம் எமது உண்மையான நிலைப்பாட்டை நாம் புரிந்து கொள்வோம். எம்மை இறைவ- னது வல்லமை மிக்க பர ாமரிப்பில் எம்மைக் கையளித்து மன்றாடுவதன் மூலம் எமது தேவையற்ற ஆசைகளைக் களைந்து நன்மையானதை விரும்பவும், நடப்பதனை ஏற்றுக் கொள்ளவும் எமது மனதைப் பண்படுத்திக் கொள்வோம். குறுகிய காலத்தில் துன்பம் வரினும் நீண்ட கால நோக்கில் அனைத்தும் நன்மைக்கே என்ற ஆறுதல் பெறுவோம்.

இயேசுவின் சிலுவை வழியில் விடியல் என்னும் உயிர்ப்பு எமக்காகக் காத்திருக்கின்றது என்பது எமது அசைக்க முடியாத எதிர்நோக்கு ஆகும். •

## கிறிஸ்துவுடன் உயிர்ப்போம் இவ்வையகத்தில்

தெருவிளக்குகள் எரிந்து
வீதியெங்கும் ஒளிகொடுக்க
எம் மனங்கள் சுவாலையென
பொங்கி எழுகின்றன
கேட்பாரும் பார்ப்பாருமில்லையே
கையேந்தி நிற்கின்றோம்
தெருவோரம் அவலங்களைத் தாங்கி
அன்று உம் சிலுவை சுமக்க
திருமுகத்தைத் துடைத்திட
ஆறுதல் கூறி அன்பைத் தர
சீரேனூர் சீமோனும் வெரோணிக்காவும்
கூடவே ஜெருசலேம் மகளீரும்
துணை நின்றதால் சுகமாகச் சுமந்தீர்
உம் தோளில் சிலுவைதனை
இன்றுகூடவர சீமோனுமில்லை
முகம் துடைத்தி வெரோணிக்கவுமில்லை
வழியோரம் விழிநிரைச் சுரந்து
விம்மியழுவோரை ஆற்றிட ஜெருசலேம்
மகளீரையும் காணவில்லையே
அன்று உம் உயிர்ப்பை மெய்ப்பிக்க
அகிலமே மௌனமானது
மூன்று நாட்களாய்
இன்று எம்மவரின் உயிர்ப்பிற்கு
எல்லையே இல்லாது தொலைது/ரம்
நீண்டு செல்கிறது கானல் நிருாய்
உம் உயிர்ப்பைக் கொண்டாடி மகிழ
ஊரே கூடிவரும் பொழுது
எம் அவங்கள் அகன்று நாமும்
உயிர்பெற உதவிடுவீர்
ஊனக் கண்களைத் திறந்து
உண்மைகளை உரைத்திடவும்
உயிர்ப்பின் மகிமையை அறிவிக்க
எம் வாழ்வால் சான்று பகர்வோம்
ஊர்போன்றும் உத்தரைப் போற்றி
உவகை கொள்வோம்
உயிர்ப்போம் கிறிஸ்துவுடன்
சாட்சிகளாய் நாமும் இவ்வையகத்தில்

சேரூபன் அருள்மதி



## சிக்கல்கள்

கயிற்றில் போட்ட முடிச்சுக்களைக் காட்டி 'இதை அவிழ்க்க முயலுங்கள்' என்றார் புத்தர். 'அதற்கு முன் முடிச்சு போடுவதை நான் பார்க்க வேண்டும்' என்றார் அவரது சீடர். பாராட்டிய புத்தர் சொன்னார் 'ஒரு சிக்கல் ஏற்படுகிறதென்றால் அதற்குள் எப்படி மாட்டிக்கொண்டோம் என்பதைக் கண்டுபிடியுங்கள். அப்போது அதிலி ருந்து வெளிவரும் வழி தானாக தெரியவரும்' பலரும் சிக்கல்களைத் தீர்க்கும் அவசரத் தில் அவை உருவான விதத்தை உணர்வதேயில்லை. சிக்கல்களைத் தீர்க்க சீரான மனதும், காரணத்தை ஆராயும் அமைதியான ஆய்வுமே தேவை. ஒவ்வொரு பிரச்சினைக்குள்ளுமே அதற்கான தீர்வும் உள்ளது.

# தொழில்நுட்பத்துள் தொலைந்து போகாது...

*சிலந்தி தானாக வலைக்குள் சிறைப்பட்டுள்ளதா? அல்லது சிலந்திவலை சிலந்தியை சிறைப்பிடித்துள்ளதா?*

உலகம் உள்ளங் கைக்குள் வந்துவிட்டது. உலகம் சுருங்கி விட்டது என்றெல்லாம் கூறிக்கொண்டு அறிவியல் உலகம் அசுர வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அவசரங்கள் அபசுரங்களாக அரும்ப அபாய சமிக்ஞைகள் எங்கும் தெரிகின்றன. இதுவே நிதர்சனம்.

இன்றைய உலகம் தொழில்நுட்ப உலகின் விரல்களில் அகப்பட்டுக் கிடக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும்.

"அதிகாலையில் உன் கடவுளைத் தேடு" என்பது பழைய மொழி ஆகிவிட்டது. விடிந்தும் விடியாமலும் வாட்ஷப்பின் மீது விரல்கள் தேய்த்தும், முகநூலின் மீது முகம் புதைத்தும் இன்றைய பொழுது விடிகிறது. அன்பு, ஒப்புரவு, பகிர்வு போன்ற வார்த்தைகள் இன்று காலாவதியாகிவிட்டது.

தொலை தூரத்தில் இருக்கின்ற சொந்தங்களுக்கு டிஜிட்டல் வணக்கம் செலுத்திவிட்டு, அருகில் இருக்கும் சொந்தங்களுக்கு ஒரு புன்னகை கூட பூக்காமல், அயலவர் மட்டில் நல்ல சமாரியன் போல் நடவாது லேவியன் போல் நகர்ந்து செல்லப் பழகிவிட்டோம்.

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை எல்லாம் ஸ்மார்ட் போன் வருவதற்கு முன்பு தான் இருந்தது. இப்போதெல்லாம் குனிந்த நடை, கூன்கொண்ட பார்வை என்று தான் சொல்ல வேண்டும். இதனால் ஏற்படுகின்ற விபத்துகள் பலவகை, பல ரகம். நற்கருணைப் பவனிகளும், புனிதர்களின் திருச்சொரூப பவனிகளும் வலம்வரும் போது ஒரு காலத்தில் கைகளைக் கூப்பி பக்தியுடன் உயர்த்தினோம். இப்போதும் கைகள் உயர்கின்றன - கைத்தொலைபேசிகளுடன்.

தொழில்நுட்பம் உச்சம் பெறும் காலத்தில் உலகம் அழிந்து விடும் எனப் பலர் சொல்வதுண்டு. அது எந்த அளவுக்கு உண்மை என் பது தெரியாது. காரணம், தொழில் நுட்பத்தின் உச்சம் எது என்பதை எப்படி நிர்ணயம் செய்வது? வேட்டையாடிய மனிதனுக்கு ஈட்டி கிடைத் தது தொழில்நுட்பத்தின் உச்சம், ஈட்டியால் குத்தி மீன் பிடித்துக்கொண்டி ருந்தவன் வலைக்கு மாறியதுதொழில்நுட்பத்தின் உச்சம், குகைகளில் உழன்றவன் கோபுரங்களில் தவழ்ந்தது தொழில்நுட்ப உச்சம். இப்படித் தொழில் நுட்பத்தின் உச்சம் என்பது காலம் தோறும் மாறிக் கொண்டேதான் இருக்கிறது.

கணினி வந்தபோது இதுவே தொழில்நுட்பத்தின் உச்சம் என்றார்கள், இன்றைக்கு அது தொழில்நுட்பத்தின் முதற்படி என்கிறார்கள். செயற்கை அறிவியல் எனப்படும் செயற்கை அறிவை நோக்கி உலகம் வேகமாக ஓடுகிறது. எதிர்காலத்தில் அதையும் கடந்து இன்னொன்றைத் தேடி ஓடும். இயற்கையோடு இணையாவிட்டால் இயற்கையால் அழிவோம்.

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது இறைவன் எதிர்பார்ப்பது தான். உலகைப் படைத்தவர் இறைவன். மனிதனை தனது சாயலாகப் படைத்தார். தன்னைப் போல் உருவான மனி தன் புதிய படைப்புகளை உருவாக்குவதில் வியப்பு இல்லையே ! உலகை ஆளவும், அதில் வாழவும் தான் மனிதனை இறைவன் படைத்தார். எனவே, அவன் ஆளுகை செய்வதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் எந்தக் கணத்தில் அவன் கர்வம் கொள்கிறானோ இறைவனை மறக்கின்றானோ அப்போது அவனுடைய வீழ்ச்சி அசுர வேகமாய் மடியும். விண்ணக தேவதூதன் கர்வம் கொண்ட போது அவன் பாதாளத்தின் அரக்கனாய் மாறியது போல, தொழில் நுட்பம், படைப்பாளிக்கு கர்வம் தரும்போது அவனுடைய வாழ்க்கை அர்த்தம் இழக்கும்.

வேதாகமம் தொழில்நுட்பத்தைப் பேசு கிறது. "காயீன் ஒரு நகரை உருவாக்கினான்" ( ஆதி 4:17). தொழில்நுட்பத்தின் தொடக்கம் அதுவாக இருக்க வேண்டும். பாபேல் கோபுரம் கட்டுமானக் கலையின் உச்சம் தொட்ட நாளாய் இருந்திருக்க வேண்டும். சாலமோனின் காலத்தில் அது பிரமிப்பின் உச்சத்தில் இருந்திருக்கலாம். நோவா செய்த பேழை தொழில்நுட்பத்தின் வளர்ச்சி.அதற்கு இறைவனே கட்டுமான நிபுணராக இருந்து நோவாவை வழிப்படுத்தினார்.



உசியா மன்னனைப் பற்றி, "அம்பு எய்வதற்கும், பெரிய கற்களை வீசுவதற்கும் திறமை மிக்கோரால் கண்டு பிடிக்கப்பட்ட ஏவுகணைகளை எருசலேமில் செய்து கொத்தளங்கள் மேலும், கோட்டைகளின் மூலைகள் மேலும் அவற்றை நிறுவினான்." என்கிறது வேதாகமம்.

இவையெல்லாம் தொழில்நுட்ப வளர்ச்சியின் படிகளே. இவையெல்லாம் மனித வரலாற்றின் பதிவுகளே. இவற்றைத் தவிர்க்க முடியாது. இறைவன் விரும்பும் காலம்வரை இந்த வளர்ச்சி தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

இந்த வளர்ச்சியை எப்படி நமது ஆன்மீக வாழ்வுக்கான வழியாக மாற்றுகிறோம் என்பதில் தான் நமது வெற்றி அடங்கியிருக்கிறது. மனித நேயத்தையும், மனித உணர்வுகளையும் தொழில்நுட்பம் நீர்த்துப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரும்பு இயந்திரங்களின் வருகை, இதயங்களை இரும்பாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்ப உறவுகளிடையே உள்ள நெருக்கத்தை தொழில்நுட்பம் களவாடாமல் இருக்க வேண்டும். மாலை நேரங்களில் இயந்திரங்களுக்கும், கருவிகளுக்கும் முழுமையான ஓய்வு கொடுத்து குடும்பமாக இணைந்து பேசுவதும், திருச்செபமாலை செபிப்பதும், விளையாடுவது மான நேரங்கள் உருவாக வேண்டும். தொலைக்காட்சி நாடகங்களில் தொலைந்து போகக்கூடாது.

தொழில்நுட்பம் தகவல்களை எளிதில் பெற்றுத் தருகிறது. கிறிஸ்தவ இலக்கியங்கள், விளக்கங்கள் போன்றவை விரல் நுனியில் கிடைக்கின்றன. அதை நமது ஆன்மீக வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். ஆவியின் கனிகளை சுவைக்க தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். மென் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மாணவர்கள், சிறுவர்களுக்கு ஊக்குவிக்கலாம். கணனி விளையாட்டுக்களில் (Video Games) போன்றவற்றிலிருந்து குழந்தைகளை திசைதிருப்பும் முயற்சியாக இது அமையும்.

ஆரோக்கியமான தொலை தொடர்புகள், பகிர்வுகள் போன்றவற்றிற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம். உலகெங்குமுள்ள கிறிஸ்தவ நண்பர்கள், கிறிஸ்தவ குழுக்கள் போன்றவற்றில் இணைந்து பயன் பெறலாம். "எதைச் செய்தாலும் இறை மகிமைக்காகவே செய்ய வேண்டும்" எனும் இறை வார்த்தைக்கேற்ப தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். சமூகத்திலிருந்தும், குடும்பங்களிலிருந்தும் இவை நம்மைத் தனிமைப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இன்னொரு நபர் எமக்கருகிருந்து உரையாடும்போது, தொழிலில் கடமையில் இருக்கும்போது, நிகழ்வுகளில் கலந்து கொண்டு இருக்கும்போது, திருப்பலி வழிபாடுகளில் சங்கமித்துதிருக்கும்போது கைத்தொலைபேசி பயன்படுத்துவது நாகரிகம், கௌரவம் என பலரும் நினைத்து செயற்படுவது உண்மையில் வேதனைக்குரியதும், அநாகரிகமான செயலுமாகும்.

> பாபேல் கோபுரம் கட்டுமானக் கலையின் உச்சம் தொட்ட நாளாய் இருந்திருக்க வேண்டும். சாலமோனின் காலத்தில் அது பிரமிப்பின் உச்சத்தில் இருந்திருக்கலாம். நோவா செய்த பேழை தொழில்நுட்பத்தின் வளர்ச்சி. அதற்கு இறைவனே கட்டுமான நிபுணராக இருந்து நோவாவை வழிப்படுத்தினார்.

இயந்திரங்களின் வருகை மனிதனுக்கு வேலையற்ற சூழலை உருவாக்குகிறது. அத்தகைய சூழல்களில் சக மனிதர்களுக்கு தோள்கொடுப்பதும், உடனிருப்பதும், உதவுவதும் முக்கியமான தேவைகள். இயந்திரங்களும், தொழில்நுட்ப வளர்ச்சியும் அழிவுக்கான பணியைச் செய்யாமல் கவனமாய் இருக்க வேண்டும்.

நமது எல்லைக்குட்பட்ட விடயங்களில் நாம் ஆக்கபூர்வமாக தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த உறுதி எடுக்க வேண்டும். இயந்திர வாழ்க்கை உடல் உழைப்பை குறைத்து ஆரோக்கியத்தை வலுவிழக்கச் செய்கிறது. இது பல்வேறு உடல் நோய்களுக்கும், மன நோய்களுக்கும் நம்மை இட்டுச் செல்லும். எனவே ஆரோக்கியம் பேணுவதில் கவனம் தேவை.

பாவம் செய்பவன் பாவத்துக்கு அடிமை என்பதைப் போல, தொழில்நுட்பத்தை அதிகமாய்ப் பயன்படுத்துபவர்கள் அதன் அடிமைகளாகிப் போகிறார்கள். நமக்கும் இறைவனுக்கும் இடையேயான உரை யாடலையோ, அன்பு உறவையோ தொழில்நுட்பம் எடுத்துக் கொள்ளும் போது அது பாவத்தின் கருவியாக மாறிப் போகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சியும், இயந்திரங்களின் விஸ்வரூபமும் நம்மை இறைவனின் அன்பிலிருந்து பிரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே பிறர் அன்பிலிருந்தும் எம்மைப் பிரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தொழில் நுட்பங்கள் நமக்கு போதையாய் மாறும் கணத்தில் இறைவன் அதைப் பலியிடச் சொல்கிறார். நாம் அதைப் பலியிட்டு இறைவனைப் பற்றிக் கொள்கிறோமா? அல்லது இறைவனை விட்டு தொழில் நுட்பச் சாதனங்களைப் பற்றிக் கொள்கிறோமா என்பதை வைத்து நமது விசுவாசத்தை அளவிடலாம். தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவோம். இறைவனையும் அயலவரையும் மட்டுமே அன்பு செய்வோம்.

தவக்காலம் முடிந்து உயிர்ப்பு நாளைக் கொண்டாடி மகிழும் இவ் வேளையில் கிறிஸ்துவின் மரணத்தில் நாம் உயிர்த்தோம். அதுவே தவக்காலத்தில் நாம் செய்த செபங்களும், தபங்களும், உபவாசங்களும், கல்வாரி யாத்திரைகளும் ஆகும்.

ஆனால், கிறிஸ்து உயிர்க்கும்போது நாம் மரணித்து விடுகிறோம். அதுவே எமது ஈஸ்டர் கொண்டாட்டங்களும், களியாட்டங்களும், விருந்துபசாரங்களும், வான வேடிக்கைகளும் ஆகும்.

இவ்வாறாக இயேசுவின் மரணத்தில் நாம் உயிர்ப்பதும், இயேசுவின் உயிர்ப்பில் நாம் மரணிப்பதும் எம்மை ஆரோக்கியமான கிறிஸ்தவர்களாகக் காட்டாது வேடிக்கை மனிதர்களாக உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இத்தகைய வாழ்வியலுக்குள் வலுவிழந்து நிற்கும் நாம் தொழில் நுட்ப வலைப் பின்னல்களுக்குள்ளும் சிக்கித்தவித்து வாழ்வைத் தொலைத்து விடாது பின்னல்களை அறுத்து கிறிஸ்தவ விழுமியங்களிலும் மனித விழுமியங்களிலும் உயிர்த்தெழுவோம்... ***ஏனென்றால் இது விசிறிகளுக்கே வியர்க்கும் காலம்...***

தொகுப்பாசிரியர்:
இ.இ.வசீகரன்



# வள்ளுவரும் தனிநாயகம் அடிகளாரும்

அ.நிக்ஸன்-

**அடிகளார் எழுதிய தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள். இன்னமும் வெளியிடப்படாமல் அடிகளாரின் கையெழுத்துப் பிரதிகளாகத் தமிழ் நாட்டில் இருக்கின்றன. திராவிடக் கட்சி ஒன்று அதனைப் பாதுகாக்கின்றதா அல்லது மூடி மறைக்கின்றதா?**

மனித வாழ்வுக்குரிய அனைத்து வழிகளிலுமான அனுபவத் தத்துவங்களைத் தமிழியல் மூலமாக வகுத்தவர் திருவள்ளுவர். ஈழத்தமிழறிஞர்களான தனிநாயம் அடிகளார், கா.பொ.இரத்தினம் ஆகியோர் இணைந்து வள்ளுவர் வகுத்த வாழ்வியல் நெறிகள் பற்றிய விழிப்புணர்வுகளை மேலும் விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகளை மேலும் தொடர வேண்டும்.

சமயங்களைக் கடந்து தமிழனாகவும் முத்தமிழ் அறிஞனாகவும் தன்னை நிறுவிய வள்ளுவர், மேலைத் தேய அரசறிவியல் அறிஞர்களையும்விட பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவர். ஊலகத்தில் தோன்றிய முதலாவது மெய்யியல் படைப்பாளி என்றே தனிநாயகம் அடிகளார் சித்தரிக்கிறார்.

2021 ஆம் ஆண்டு யூன் மாதம் தாய்லாந்தில் இடம்பெற்ற சர்வதேச நிகழ்வு ஒன்றில உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி திருக்குறளை மேற்கோள்காட்டிப் பேசியிருந்தார். சீன - இந்திய எல்லையான லடாக்கில் இந்திய இராணுவ வீரர்கள் மத்தியில் பேசியபோதும், கோவையில் நடந்த அரச விழாவிலும், தேர்தல் பிரச்சாரங்களிலும் திருக்குறளைத் தமிழிலேயே நரேந்திரமோடி மேற்கோள் காட்டிப் பேசியிருக்கிறார்.

ஏ. பி. ஜே. அப்துல் கலாம் இந்தியாவின் குடியரசுத் தலைவராக 2002 இல் பதவியேற்ற போது திருக்குறளை உதாரணம் காண்பித்து உரையாற்றியிருந்தார். ஆகவே தமிழர்களின் மொழிப் பெருமிதங்களில் ஒன்றான திருக்குறள், இந்தியாவின் அறிவுப் பெருமிதங்களிலும் ஒன்று. தேச எல்லைகளைத் தாண்டி மனித சமூகத்தின் மாபெரும் அறிவுப் பெட்டகம் என்பதை அது வெளிப்படுத்துகின்றது.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் திருக்குறள் சார்ந்து மிகச் சமீப காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. சென்ற கல்வியாண்டிலிருந்து இளங்கலை மாணவர்களுக்குத் திருக்குறள் ஒரு விருப்பப் பாடமாக சென்னைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் தெரிவு ஆணைக்குழுவில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் திருக்குறளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாடு மற்றும் ஈழத்தமிழ் சமய அறிஞர்கள் சிலர் வள்ளுவருக்குச் சமய அடையாளமிடுவது ஏற்புடைதல்ல. அதுவும் 2009 இற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாட்டுக்கு அது ஆரோக்கியமானதாக அமையாது.

தமிழ் நாட்டில் கோவை வேளாண் பல்கலைக்கழக நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த காவியுடை தரித்த வள்ளுவரின் படம் சர்ச்சைக்குள்ளாகி, அதற்குப் பதிலாக தமிழக அரசின் அதிகாரபூர்வமான வெள்ளை உடை வள்ளுவர் படம் தற்போது வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் திருநீறு அணியப்பட்ட வள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளமை கவலை தரும் செயல்.

அமெரிக்காவின் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வு நூல்கள் உண்டு. பைபிளுக்கு அடுத்தாக முப்பத்தைந்து மொழிகளில் மொழிபெயர்ப்பட்டு மேற்கு மற்றும் ஐரோப்பியப் பல்கலைக்கழக ஆய்வு நூலகங்களில் திருக்குறள் உண்டு. ஆகவே வள்ளுவம் ஒரு உலகப் பொதுமறை என்ற கருத்தியலை நீக்கம் செய்யும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது.

திருக்குறளை சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்திப் பேசும் வழக்கம் நீண்ட காலமாகவே நிலவிவந்தபோதும் அது சமயச்சார்பற்ற தமிழ் இலக்கியமாகவே போற்றப்பட்டும் வருகிறது. அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பானது தமிழுக்கும் சமணத்துக்கும் பொதுவானது.

திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் வினைக் கோட்பாடும் வீடுபேறும் கடவுள் இயல்பும் அதன் சைவத் தொடர்புக்குச் சான்று பகர்பவை. 'தாமரைக்கண்ணன் உலகு' என்பது வைகுண்டத்தையும், 'மடியிலா மன்னவன்' என்பது திருமாலையும் குறிப்பவை என்கின்றனர் வைணவர்கள்.

ஆனாலும், திருக்குறளைச் சமயங்களுக்கு அப்பாற்பட்ட அற நூலாகப் பார்க்க வேண்டும் என்பதே தமிழறிஞர்களில் பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்துவருகிறது.

சைவமும் தமிழும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவை. சைவமும் தமிழும் தமிழர்களின் மரபுரிமை என்று தனிநாயகம் அடிகளார் கூறுகிறார். சைவ சித்தாந்த ஆய்வாளர் மரியசேவியர் அடிகளார் அதனை மேலும் நியயப்படுத்துகிறார்.

ஆகவே சமயங்களுக்குக் கருத்தியல் தத்துவ முறைகள் இருக்கலாம். ஆனால் அதற்கும் அப்பால் நாங்கள் தமிழர்கள் அதுவும் ஈழத்தமிழர்கள் என்று பெருமை கொள்ளக் கூடிய முறையில் தமிழியலுக்கும் தமிழ் இலக்கண - இலக்கியத்துக்கும், தமிழ்ச் சைவப் பண்பாட்டு மரபுரிமைகளை நிலைநிறுத்தவும் சேவையாற்றிய இந்த இரண்டு அருட்தந்தையர்களையும் கத்தோலிக்கக் குருக்கள் என்று அழைப்பதைவிட, தமிழ் அறிஞர்கள் என்றே உலகம் இன்றும் அழைக்கிறது.

இறுதிப் போரிலும் 1948 இல் இருந்தும் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அரசியல் அநீதிகள், இன அழிப்புகள் பற்றி ஆயர் இராயப்பு ஜோசப் ஈழத் தமிழனாகவே சர்வதேச அரங்கில் பரப்புரை செய்தார். கத்தோலிக்க சமயமாக அல்ல.

1985 இல் மன்னாரில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்தியன். இறுதிப் போரின்போது மூத்த போராளிகளுக்குப் பாதுகாப்பாகச் சென்று முள்ளிவாய்காலில் கொல்லப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் உட்பட இராணுவத்தினரால் கொல்லப்பட்ட அருட்தந்தையர்கள் தம்மைத் தமிழ் பணியாளானகவே காண்பித்தனர்.

வடக்குக் கிழக்குத் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபையும் அவ்வாறுதான் இயங்கி வருகின்றது.

இந்த இடத்தில் திருக்குறள் சமயங்களுக்கு அப்பாற்பட்டது என்று வாதிடும் அறிஞர்கள், திருக்குறளின் கடவுள் வாழ்த்தில் சமயத்தைக் குறிக்கும் எந்தப் பெயர்களும் வெளிப்படையாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, மதங்களுக்கு அப்பாலிருந்தே வள்ளுவர் தன் குறளை இயற்றியுள்ளார் என்ற முடிவுக்கு வருவதையும் ஈழத்தமிழ் சமய அறிஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அம்பேத்காரைக்கூட சாதி, மத அடையாளத்துக்குள் அடைத்துவிட முயலும் இன்றைய அரசியல் வியூகங்களுக்குத் தமிழ்ச் சமூகத்தின் பொது அடையாளங்களான வள்ளுவர், வள்ளலார், பாரதியார் முதலானோர் பலியாகிவிடக் கூடாது.

தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களைப் போலவே, நம்மை ஆள்வதற்காக ஆங்கிலேயர் அனுப்பிய கிறிஸ்தவரான எல்லிஸ் என்ற ஆளுநர் சென்னைக்கு வந்து, தமிழ் கற்று, தமிழில் செய்யுள் எழுதும் அளவிற்குத் திறன் பெற்றதோடு நில்லாது, பழங்காலத் தமிழ்ச் சுவடிகளை எல்லாம் சேகரித்து நூலாக்குவதிலும் ஈடுபட்டார். அதனை ஈழத்தமிழ் சமய அறிஞர்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

அதேநேரம் 1963 ஆம் ஆண்டு தமிழக அரசில் எம். பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த போது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் தனிநாயகம் அடிகளார் உலக நாடுகளில் உள்ள தமிழறிஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு குழுவாக அமைத்து தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நடத்தும் யோசனையை முன்வைத்துள்ளார்.

உலகப் பொதுமறை என்ற திருக்குறளை உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் மொழித் துறைக்குரிய பாட நூலாகவும் அரசியல், அரசாட்சி, நிர்வாக முறை பற்றிய மெய்யியலாகவும் வாழ்க்கைத் தத்துவங்களுக்கான வழிகாட்டி நூலாகவும் பிரகடனப் படுத்த வேண்டும் என்றும் தனிநாயகம் அடிகளார் பரிந்துரை வழங்கியிருந்தார்

ஆனால் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையினையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. இருந்தாலும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிறுவனம் உருவாகுவதற்கான அனைத்து வழிகளையும் தனிநாயகம் அடிகளார் உருவாக்கினார்.

அவரது அரிய முயற்சியின் விளைவாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (International Association for Tamil Research - IATR) 1964 இல் நிறுவப்பட்டது. இதன் முதல் கூட்டம் புதுடில்லியில் ஜனவரி மாதம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ. ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டுள்ளனர். மொத்தம் 26 தமிழறிஞர்கள் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1964 ஜனவரி மாதம் ஏழாம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அமைப்பின் முதல் தலைவராக பிரான்ஸ் நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவைராகவும், ஒக்ஸ்பேட் (Oxford) பல்கலைக்கழக பேராசிரியர் தோமஸ் பரோ, அமெரிக்க நாட்டுப் பேராசிரியர் எமனோ, பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் செக்கோஸ்லோவாக்கியா பிராக் பல்கலைக்கழகப் பேராசிரியர் கமில் சுவெலபில், தனிநாயகம் அடிகள் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிறஸ்தவரான எலிஸ் தமிழ் மொழியைக் கற்று பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பரிமேழலகர் திருக்குறளுக்கு ஓலையில் எழுதிய விளக்கவுரைகள் உட்பட அறுபத்து மூன்று தமிழ் நூல்களுடன் முந்நூற்றுக்கும் அதிகமான நூல்களை வாசித்து 1812 இல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார். தமிழ் மொழியிலும் தந்திருந்தார்.

எலிஸ் தமிழுக்கு ஆற்றிய சேவை உள்ளிட்ட ஆங்கிலேயர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணிகள் பற்றியெல்லாம் ஆய்வு நடத்தும் ஏற்பாடுகள் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.


முதலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு கோவையில் நடைபெற்றுப் பின்னர் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றது. ஆனால் தொடர்ச்சியாக அது நடத்தப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் தனிநாயகம் அடிகளார் தமிழியல் தொடர்பாக எழுதி பல ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் திருவள்ளுவர் பற்றிய குறிப்புகள் இன்றும் தமிழகத்தில் அவருடைய கையெழுத்துப் பிரதிகளாக உண்டு.

ஆனால் அவற்றை நூலாக வெளியே கொண்டு வர பலர் விரும்பவில்லை. தமிழக அரசு காரணமா அல்லது தமிழ் நாடு அறிஞர்கள் தடையா, அல்லது ஈழத்தமிழ் அறிஞர்கள் முயற்சி எடுக்கவில்லையா என்பது பற்றியெல்லாம் இலகுவாகக் கேள்வி எழுப்பிவிட்டுப் போகலாம்.

திராவிடக் கட்சி ஒன்று அதனைப் பாதுகாக்கின்றதா அல்லது மூடி மறைக்கின்றதா என்று புரியவில்லை. ஆகவே அடிகளார் எழுதிய பல கட்டுரைகள் இன்றுவரை மூடி மறைப்பதற்குரிய காரண காரியம் தடுப்போரின் மனச்சாட்சிக்குப் புரியாததல்ல.

தனிநாயகம் அடிகளாரின் பல தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள் இன்னமும் வெளியிடப்படவில்லையென பல சந்தர்ப்பங்களில் கவலையோடு வெளிப்படுத்தியிருக்கிறார் மொழித்துறைப் பேராசிரியர் அரசு.

## புதிய சமூகமாக வாழ...



ஓர் மௌனத் தேடலுக்குள்
தாகமாய் இருந்துவிட்ட
நிசப்த நீரத் தடாகத்தின் நடுவே
கடந்த கால வாழ்வியலின்
நெடிய பயணங்களைப்
புரட்டிப் பார்க்கின்றேன்.
அன்று
சிலுவை மர நிழல்களிலே
கூடாரமிட்டு,
அன்பிய அனுபவப் பகிர்வு
வாழ்க்கையை வாழ்ந்து
வரலாறாகிவிட்ட எமக்கோ
இன்று வறுமையின் போட்டிக்குள்
பல புதிய சிலுவைகள்
சுமத்தி விடப்பட்டிருக்கிறது

மாபரன் இயேசுவின்
முள்முடி தாங்கிய
முக தரிசனத்தின் வதனம்
ஒளிப்பிளம்புகளாக
எம் தேசத்தில் பட்டுத்
தெறிக்கின்றது

சர்வதேசம் எம் வாழ்வியலின்
நியாயப்படுத்தலுக்கான
மனிதவியலின் முழுமையை
நிலை நிறுத்த தம் வான் கதவுகளை
அகலத் திறந்து விடட்டும்
நாம் மீண்டெழுவோம்
உரிமைகளுக்கான
புதிய கூட்டொருங்கியக்கச்
சமூகமாக வாழ...

எம். யோண் பற்றிக்

## கார்மேகத்தின் கதிரொளி

(கா ர் மே க த் தி ன் க தி ரொ ளி)

சாவை ஏற்றார் கிறிஸ்து
சிலுவைச் சாவை ஏற்றார் மனித
குலம் மண்ணில் மீட்புப்பெற
தன்னுயிரையே தியாகம் செய்தார்...

இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட
கிறிஸ்து இனிமேல் இறக்க மாட்டார்
அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர்
அல்ல என்கின்றது வேதாகமம்...

வரலாற்றில் பல நிகழ்வுகள்
ஆண்டாண்டு காலம் தொடர்ந்து
வந்தாலும் வரலாற்றை வியக்க
வைத்தவர் நம் உயிர்ப்பின் நாயகன்
இயேசுக் கிறிஸ்து...

இயேசுபட்ட பாடுகளை நீயும் பட
இளைஞனே எழுந்து வா அவரை
போல நீயும் சிலுவைப் பயணம்
நடந்து செல்ல விரைந்து வா...

கத்திக்குத்து, சண்டை சச்சரவுகள்,
வாள்வெட்டுக்கள், கற்பழிப்புகள்,
வன்முறைகள் இவற்றைக்
கொண்டு செல்லும் மனிதனே நீ
ஒரு முறை சிலுவையினைச் சுமந்து
பார் அத்தனைக்கும் முற்றுப்புள்ளி
வைப்பாய்...

வெற்றுக் கல்லறை வாசலில்
ஒளிக்கீற்றாய் அவர் உயிரோடு
எழுந்த அடையாளம் ... இனி மரிக்க
மாட்டார் மானிட மகன் இயேசுக்கிறிஸ்து...

நம்பிக்கை இல்லாத மானிடர்க்கு
இயேசுவின் உயிர்ப்பு நம்பிக்கை
தரும் மருந்து... ஏற்றுக் கொள்ள
இயலாத மானிடர்க்கு இயேசுவின்
சிலுவை மரணம் எதையும்
தாங்கிடும் பக்குவம் தரும்
அழைப்பு...

வெறுமையான கல்லறை
வாழ்வில் உணர்த்தும் பாடம்
என்னவென்றால்... இந்த
வையகத்து வாழ்வையும் கடந்து
செல்லும் அனுபவத்தை நீயும்
பெற்றுக் கொள் என்பதைத்தான்...

உயிர்ப்பு என்பது கொண்டாட்டம்...
அது ஆண்டவரின் வெற்றியின்
நாள்... கிறிஸ்துவின் துன்பங்களை
நாமும் தோளில் சுமந்தால்
மாபெரும் வெற்றிக்கனி நம்
நாருசிக்கக் கிடைக்கும்...

கிறிஸ்துவின் உயிர்ப்பின் போது
இலங்கையில் அன்று பல உயிர்கள்
காவு கொள்ளப்பட்டன...
அவர்கள் இறக்கவில்லை
இறைமகன் கிறிஸ்துவுடன் இன்றும்
என்றும் வாழும் உயிர்கள்...

வீரம் மிகுந்த உடல் விவேகம்
நிறைந்த உடல் பாரச் சிலுவையின்
சுமையால் பலமுறை நிலத்தில்
விழுந்த உடல்...
இரக்கமற்ற அரக்கர்களால்
காயப்பட்ட உடல்
அநியாய மனிதர்களால்
அவஸ்த்தைப்பட்ட உடல்
ஆணிகள் ஏற்றப்பட்ட இயேசுவின்
பொன்னுடல்...

என் விருப்பம் அல்ல உம்
விருப்பப்படியே ஆகட்டும்...
தந்தையின் விருப்பத்தை
நிறைவேற்றிய மகன்...
இன்று எத்தனை இளைஞர்கள்
இயேசுவைப் போல் வாழ்கிறார்கள்?
என்று சிந்திக்கத் தோன்றுகிறது
மனது...

ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தையும் காட்டு என்று
மனிதருக்கு எடுத்துரைத்த
இயேசுவின் கன்னத்தில் எத்தனை
அறைதல்கள்...
கைகளிலும் கால்களிலும்
ஆணியின் அறைதல்கள்...
இத்தனையும் கடந்து வெற்றி
பெற்றார் ஆண்டவர் இயேசு...

நான் உங்களுக்குச் செய்வதைப்
போல நீங்களும் மற்றவர்களுக்குச்
செய்யுங்கள்... இது இறைமகனின்
வார்த்தை அல்ல நாம் வாழும் அன்பு
வாழ்க்கைக்கான அர்த்தமும் கூட...

முள்முடி தரித்த தலையில்
குருதியின் அலங்கரிப்புகளே
அதிகம்... இன்று தம் சிரசை
அழகுபடுத்தும் இளைஞர்கள்

மத்தியில் எத்தனை பேர்
முள்முடிகளைச் சிரமதில் தரிக்கத்
தயார்??

சிலுவைப் பாதையில் பயணித்த
இறைமகன் எமக்காய் இரத்தம்
சிந்தினார், இளைஞனே
சிலுவைப்பாதை உனக்கு
வேண்டாம்... நல்ல பாதையில்
நீ நடந்தாலே போதும் நீயும்
இளைஞன் இயேசுவாய்
மாறிடலாம்...

ஒளியற்று இருளாய்க் கிடக்கும்
கார்மேகம் சூழ்ந்த வானம் போல
ஒளியின்றி இருளாய் கிடக்கும்
இதயங்களிலும் கார்மேகத்தின்
கதிர் ஒளியாய் இயேசு வந்து
உதிக்கட்டும்...



கொ.டயான்

## உன்னத தேவன் உயிர்த்து விட்டார்...

மானிடரின் மாசுகளற்ற மனிதனாய் பிறந்த தேவன்
மரித்து விட்டார் என்று மனம் கலங்கி நின்றவேளை
பரமனின் திட்டம் நிறைவேறிட - அவர்
பரலோகம் தாண்டி உயிர்த்து விட்டார்: உலகை வென்று விட்டார்!

உலகின் பாவம் போக்கி உயிர்த்தெழுந்தார் எம் தேவன்!
அலகையின் மாயை வென்று அகிலத்தில் அவர் உயிர்த்தார்!
விளைகின்ற துன்பம் தீர விடியலாய் உயிர்த்தெழுந்தார்!
அழைக்கின்ற எம் குரல் கேட்டு ஆவலாய் உயிர்த்தெழுந்தார்!

கண்ணீர், கவலையெல்லாம் கணப்பொழுதில் மாற்றிடுவார்!
மண்ணில் வாழும் எம் மனத்துயரை நீக்கிடுவார்!
உன்னத தேவன் உண்மையில் உயிர்த்தெழுந்தார்!
மண்ணக மானிடர்க்கு மறுவாழ்வு அளித்திடுவார்!

அமைதியற்ற நெஞ்சம் ஆறுதல் பெற்றிட - எம்
அகமதில் தேவன் அன்பாய் உயிர்பெற்றார்!
அன்பனாய் உயிர்த்த எம் அரசனாம் தேவனை - நாம்
அணைத்து மகிழ்ந்து காலமெல்லாம் களிப்புடன் வாழ்ந்திடுவோம்!

அ.ஜெஸ்மின் ஷறோன்

## மனுக்குலத்தை மீட்க உயிர்த்திடுவாய் என் தலைவா



உன் அருளால் மகிழ்ந்திருந்த
மனுக்குலம் - தற்போது
போதை எனும் சாத்தானின்
உடும்புப் பிடியில்
சிக்கித் தவித்து அழிந்து வருகின்றது
என் மகனும் அடிமைப்படுவானோ!
என் மகனைக் கெடுத்து விடுவார்களோ - என்ற
பெற்றோரின் ஏக்கக் கண்ணீரைத்
துடைத்து அழியும் மனுக்குலத்தை - மீட்க
உயிர்த்திடுவாய் என் தலைவா!

போதையிலும் போதை தொலைபேசிப் பாவனை
தொழில் நுட்பத்தின் எழுச்சி - எம்
இளைய சமுதாயத்தின் வீழ்ச்சி
நல்லவற்றைப் பகிரும் நண்பர் அருகி
தீயவற்றைப் பகிரும் நண்பர் பெருகி - என்
நல்ல நண்பரை இழந்து விடுவேனோ! என்ற
ஒவ்வொரு உயிர்த் தோழரின்
ஏக்கக் கண்ணீரைத் துடைத்து
அழிந்து போகும் இளம் சமுதாயத்தை

உயிர்த்திடுவாய் என் தலைவா!
உண்ண உணவில்லை,
உடுத்த நல்ல உடையில்லை
கற்றல் உபகரணம் வாங்க வழியில்லை
பொருளாதார வீழ்ச்சி - கையில்
பணம் இல்லை என - பாடசாலையை
இடைவிலகும் சிறியோர் - தம்
எதிர்காலத்தைத் தாமே அழிக்கும் நிலை
நான் ஏன் பிறந்தேன்" என் எனது பிள்ளை
எண்ணிவிடக் கூடாது என - நொருக்கு நொடி
பயப்படும் பெற்றோரின் ஏக்கத்தைத் தடைக்க
உயிர்த்திடுவாய் என் தலைவா!

போதையின் உடும்புப் பிடியை ஒழித்து
பெற்றோரின் கண்ணீரைத் துடைக்கவும்
தொலைபேசி எனும் காரிருளை அகற்றி
இளையோருக்கு நல்ல நண்பரைக் கொடுக்கவும்
வறுமை நிலை அழிந்து - மக்கள்
மீண்டும் மகிழ்வாக வாழ
விழியெறிந்து அழைக்கின்றோம் - உலகத்தின்
பேரொழியாய் அலகையை வென்று
உயிர்த்திடுவாய் என் தலைவா!

நிலுஷா பீற்றர்



## வென்றார் சாவை மாவீரன்

உயிர்த்தார் சரித்திரம் படைத்திடவே
கயவரின் கல்நெஞ்சை உடைத்திட்டார்
காரிருளை வென்றெழுந்து போக்கிவிட்டார்
உயிர்தந்த உத்தமரின்
உரிரெடுக்க நின்றார்கள்
அதையும் அவர் பரிசாக
ஈன்றளித்தார் அவர்களுக்கு
ஓசன்னா பாடிய கூட்டமே அவரை
ஓலமிட்டு அறைந்தது கழுமரத்தில்
அதே கயவர்கள் நாங்களும் இன்று
அறைகின்றோம் அவரை
இருதயச் சிலுவையில்

சு.டிலக்சனா

## இ கரம் இயம்பும் இறையவன்

இந்த மரணம் இப்போது
இன்னுமொரு சரித்திரம்
இனிய மார்கழி மலரென
இறையவன் பிறந்து ஜொலிக்க
இதமான குடிலில் வானதூதன்
இன்னிசை முழக்க ஜனனம் ஒன்று
இப்படி ஒரு மகவா என்று மயக்க
இதுதானோ வான தேவன் வருகை
இயற்கை கானம் பாடவே
இந்தப் பாவக்கூட்டத்திற்காய்
இங்கே பரிகாரமாய் தேவமகன்
இதோ விண்ணும் மண்ணும்
இறையோனின் பிறப்பைப் பாட
இந்த எண்ணும் எழுத்தும்
இறையவனாய் அவனியில் தூவ
இருண்ட பாவிகளைப் பார்த்து
இதயம் நொந்து
இது பாவம் என்றெண்ணி

இவன் மனமுருக
இரண்டைச் சாட்டையடிகள்
இவனுக்கு சரணம் பாட
இதோ சந்தை வெளியில்
இறந்து சருசான உடல் ஒன்று
இச்சாவைச் சுமந்து கழுமரத்தோடு
இனம் காணா தேசம் தேடிப் போகிறான்
இது மூன்றாணிகளில் முடங்காது
இது முப்பத்துமூன்று வருட வாழ்வை
இலேசாக மட்டும் முடித்து
இளக்கி விடவா போகின்றது
இம்மூன்று மணிநேர வேதனை
இட்மூடர்கள் கூட்டத்தின் முன்னே
இதோ எல்லாம் தொலைந்தான்
இவன் என்று கனா காண்கிறார்கள்
இதயமற்ற கயவர்களின்
இருள் நிறைந்த கண்ணில்லா கூட்டம்
இம்மூன்று நாள்
இம்மூன்றே நாள் தான்
இறை முனியவன் முடவர் முன்னே
இறைவனாய் எழுந்து போகிறான்
இங்கே சாவுக்கே சாட்டையடி
இதுதான் சரித்திரத்தின் முதல்படி
இறப்பும் உயிர்ப்பும்
இன்னுமொரு பயணத்தின் தொடக்கம்
இந்த மரணம் இன்னுமொரு சரித்திரம் தானே

அ.ஜான்கவி

## உயிர்த்தெழு இறைவா

மாடுகளின் குடிலிலே மலராய் மலர்ந்தவன்
பாடுகளின் நாயகன் பரிசுத்த தேவன்
காடு மலைகள் கடந்த தேவமகன்
ஏடுகள் புகழும் புனிதனாக உதித்தவன்

மரியின் மடியில் மழலையாகப் பிறந்த
பரிசுத்த நாயகனைப் பரிசாகப் பெற்றோம்
அரியணை அமர்ந்திட அவனியும் மகிழ்ந்து
கரிசனை கொண்டு காத்திட்ட தூதுவன்

பாவிகளை இரட்சிக்க பாலகன் இயேசு
பாவங்களை நீக்கிட பாருலகில் தோன்றி
குவலயத்து மாந்தரின் குறைகளைத் தீர்க்க
காவிய நாயகனாக மரித்தே உயிர்த்தவர்

திக்குத் தெரியாது திகைத்து நின்ற
மக்களை வழிநடத்த மண்ணில் தோன்றியே
தக்க தருணத்தில் தவறுகள் ஒழித்திடவே
பக்குவமாய் மக்களுக்குப் பாடம் புகட்டியவர்

வன்முறைகள் நிறைந்த வக்கிர பூமியிலே
அன்புநெறி நிறைந்திட்ட அண்ணல் இயேசு
துன்பநிலை மாற்றித் துயரமதைப் போக்க
இன்றைய உலகில் உயிர்த்தெழுந்து வா...

ந.செருணி ருவின்கா

## புது விடியல் பிறந்தது



மண்ணகம் மீட்க விண்ணகம்
இருந்து மானிட மகன் மனு வடிவம்
கொண்டார்..

மானிடர்களின் பாவம் கழுவ
தன்னுயிரை இன்னுயிராய் ஈந்தார்..

மரணத்தை ஏற்றுக் கொண்டார்
அதுவும் சிலுவை மரணத்தை
ஏற்றுக் கொண்டார்...
கனமான பாரத்தைத் தன் தோளிலே
சுமந்து சென்றார்

எனக்காக மூன்று
முறை மண்ணிலே விழுந்தார்...

பாவக்கறை நீக்கித் தன் உயிரைத்
தியாகம் செய்தவர் சாவின்
விளிம்பில் நின்று வெற்றி
கொண்டார் இயேசு...

தேகம் மண்ணில் விழ நெற்றியில்
இருந்து வழிந்த வியர்வை
மண்ணை முத்தமிட மீண்டும்
எழுந்து வெற்றி நடை போட்டார்
வெற்றியின் நாயகன் இயேசுக்
கிறிஸ்து...

பாவிகளை மன்னித்தார் ஆவிகளை
விரட்டி அடித்தார் ஏழைகள் வாழ்வில்
ஒளி ஏற்றினார்... சாவை வென்ற

சரித்திர நாயகன்...

நீதியின் நாயகனுக்கு மரண
தண்டனை விதிக்கப்பட்டது நேரிய
பாதையில் அவர் சென்றதால் அவர்
மீது சிலுவை மரம் சுமத்தப்பட்டது...
கூரிய ஆயுதங்கள் அவர் உடலை
கீறிக் கிழித்தது சிந்தியது இரத்தம்
இல்லை அது எம் பாவக்கறை கழுவும்
பரிசுத்த நீர்...

மரணித்தார் மூன்றாம் நாள்
உயிர்த்தெழுந்தார் மரணத்தின் சூழ்ச்சி-
தனைக் கச்சிதமாய் வெற்றி கொண்டார் இயேசு...

கல்லறை திறந்தது புது விடியல்
பிறந்தது இயேசு மீண்டும்
உயிர்த்தெழுந்தார் அவர் அதே
மனிதனாய்..

இ.யூடின் திவ்யா

## குன்றின் மேல் தீபமானீர்

(கு ன் றி ன் மே ல் தீ ப மா னீ ர்)

ஆறிரு சீடருக்கும் அன்புடன் விருந்தளித்தே
வேறு செய் துரோகி உம்மை
வெள்ளி முப்பதற்காய் விற்க

கோறணி யூதர் சூழ்ந்து
கொடுமையால் பிடித்துக் கட்டி
வாதைகள் செய்த திந்த - வதனமோ மகனே பாலா

இருவிழி மறைத்துக்கட்டி
இராமுழுதும் வாதையின்றி
குருமுன்னே கொண்டுபோய் விட்டு
கொடூரமாய் ஒருவன் கன்னம்

கரத்தினால் அறைந்தனரோ
கம்பான் கயிறு கொண்டு இழுத்தனரோ
சிரத்தே முள்ளைப் பதித்தனரோ
சுமத்தியே சிலுவையை நடத்தினரோ

அன்று தம் சீடர்களுக்கு
ஆறுதல் கூறி நீரும்
குன்றின் மேல் ஏறி நின்று
கொடைக்கரம் விருந்து நீட்டி

அ.மனோகரன்

## அல்லேலூயா பாடிடுவோம்

பூவுலகைக் கௌவியிருந்த
காரிருள் அகன்றது
கிழக்கு வெழுத்து
ஒளிச் சுடர் உதித்தது
மண்ணில் விழுந்த விதை
மடிந்து தனை இழந்து
உடல் கூட்டைக் கிழித்து
முளை விட்டு எழுந்தது
நண்பனுக்காய் உயிரைக் கொடுப்பது
உன்னதம் என்று உரைத்தவர்
தன் மந்தைக்காய்த் தன்னுயிரை
ஆகுதி ஆக்கியுள்ளார்
சிதறிய இரத்தம் பூமியின்
பாவக்கறைகளைக் கழுவியது
விலாவின் பிளவில் இருந்து
கருணையும் அன்பும் சொரிந்தது
கல்லறைக்குள் கடவுளை வைத்து
எல்லாம் முடிந்தது என
எக்காளமிட்டவர் இங்கே

விழிபிதுங்கி வியந்து போய் நிற்க
கல்லறையை அடைத்து நின்ற கல்
அதிர்ந்து சரிந்து விழுந்தது
ஆலயத்தை இடித்துத் தள்ளுங்கள்
மூன்று நாட்களில் கட்டுவேன்
என்றவர் உயிரோடு எழுந்தார்
இறந்தோருக்கு உயிர்கொடுத்து
இவ்வுலகில் உலாவ விட்டவர்
உயிர்து உலா வருகின்றார்
சாவை வென்ற சத்தியனாய்
சரித்திரம் படைத்து உயிர்த்தவர்
உண்மைக் கடவுளாய் எம்மோடு
என்றும் உயிருடன் வாழுகின்றார்
அகமகிழ்ந்து அக்களிப்போம்
கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவோம்
கரங்களைத் தட்டி வானுயர
அல்லேலூயா பாடிடுவோம்.

"அலுக்கையூரான்"

## கிறிஸ்துவின் உயிர்ப்பே மனிதத்தின் சங்கமம்

மாற்றானின் கல்லறையை
மூன்று நாட்கள் புகலிடமாய்க் கொண்டு
உடலைச் சுற்றிய வெண்துகில்கள்
குருதிக் கறைகளை மீறிச் சுடரொளி பரப்ப
இரண வடுக்கள் மறைந்து
கல்லறைக் கல் புரட்டி
உயிர்த்தார் கிறிஸ்து - சாவின்
கொடுக்கை அழித்து

இறப்பின் பி ன் ஓர் வாழ்வு
நம்புவோர்க்கு திண்ணமாய் உண்டு
அதற்கு முன்னுள்ள வாழ்வை
சிலுவை வழி வாழ்ந்து
மரிப்போம் கிறிஸ்துவுடன் என்றால்
அனுபவிப்போம் கிறிஸ்துவை
உயிர்ப்பின் நாயகனாய்
தன்னலம் கடந்த பிறர்நல
நோக்கில்...

ஸ்ரனிஸ் ஜெலீபன் விதுஷகான்

# பாஸ்கா திருவிழிப்பு திருவழிபாடு

**புனித இரவில் பாஸ்காத் திருவிழிப்பு**

பரிசுத்த பாப்பரசர் 12ம் பத்திநாதர் அவர்களால், பாஸ்காத் திருவிழிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. (De Solemni Vigilia Paschali Instauranda-1951) புனித வாரத்திற்குரிய புதிய நெறிமுறை களையும், குறிப்பாகக் குருத்து ஞாயிறு, புனித வியாழன் மற்றும் புனித வெள்ளி வழிபாடுகளை புதிதாக மாற்றியமைத்த பெருமை இவரையே சாரும், (Maxima Redemptionis - November 19,1955). புனித வியாழன் வழிபாடு காலையிலி ருந்து மாலை நேரத்திற்க்கும், புனித வெள்ளி மாலை மூன்று மணிக்கும் மாற்றப்பட்டது.

**பாஸ்காத் திருவிழிப்பு வழிபாட்டை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்:**

***முதல் பகுதி:*** திரு ஒளி வழிபாடுபாஸ்கா திருவிழிப்பிலே கிறிஸ்துவின் ஒளியைக் குறித்து ஆரம்பமாகின்ற இந்த அழகான திருவிழிப்பு வழிபாடு, ஒரு உன்னத வழிபாடாகும். அனைத்து வழிபாடுக ளிலுமே சிறந்த, உயர்ந்த ஒரு வழிபாடு இது தான். எல்லா கொண்டாட்டங்களி லுமே சிறந்த கொண்டாட்டம் இந்த உயிர்ப்பு விழா. எல்லாப் பெருவிழாக்களி லுமே முதன்மையானது இந்த உயிர்ப் புப் பெருவிழாவாகும். கிறிஸ்துவினு டைய பாஸ்கா மறைபொருளின் உச்சம் இந்த உயிர்ப்பு பெரு விழாவே: 'ஏனெ னில் பாஸ்கா விழா இதுவே: இதில் மெய்யான செம்மறியாகிய கிறிஸ்து கொலை யுண்டார் அவரது இரத்தத் தால் நம்பிக்கையாளரின் கதவு நிலை கள் அர்ச்சிக்கப்படுகின்றன.' ஆகவே, இந்த இரவைக் குறித்தும், இயேசுவின் வழியாகத் தந்தை வைத்திருந்த தெய் வீக திட்டத்தைக் குறித்தும் இந்த அழ கிய பாடல் அமைகின்றது. ஐந்தாம் நூற் றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக் கும் இடைப்பட்ட காலத்தில் உருவான ஒரு மேலைத்தேய புகழ்ச்சிப் பாடலா கும். பன்னிரெண்டாம் நூற்றாண்டி லேயே முழுமையான ஒரு பாடலாக தோற்றம் பெற்றது. இதற்கு காரண கர்த் தாவாக இருந்தவர் தான் பரிசுத்த பாப் பரசர் 3ம் இன்னசென்ற் (Pope Innocent III). இது அன்றைய திருவிழிப்பு வழிபாட்டின் முதற் பகுதியான திரு ஒளி வழிபாட்டில் இடம்பெறுகின்றது. கிறிஸ்துவே ஒளியானவர். அந்த ஒளியே இருளில் ஒளிர்ந்தது. அந்த ஒளியே இருளை ஒளிர்வித்தது. இதைப் பாஸ்கா அறிவிப்பு பாடல் அல்லது பாஸ்காப் புகழ் கீதம் என்றும் சொல்லலாம்.

கத்தோலிக்க திருச்சபைக்கே உரித்தான ஒரு வழிபாட்டுக் கீதமாகும் அல்லது பாடலாகும். கிறிஸ்துவினு டைய உயிர்ப்பைப் பெருமகிழ்வோடு அறிக்கை யிட்டு, கிறிஸ்துவினுடைய உயிர்ப்பு வரைக்கும் தந்தையாம் கடவுள் கொண்டிருந்த மீட்புப் பாதை தெளிவாகக் காட்டப்படுகின்றது. இரு ளின் மீது ஒளியின் ஆட்சி அது ஒரு வெற்றியாக காட்டப்படுகின்றது. புது நெருப்புக் கிடைக்கப்பெற்று அதிலிருந்து இவ்வுலகமே ஒளி பெறுவதாக காட்டப் படுகின்றது. அந்த ஒளி தான் கிறிஸ்து. புதுஒளி என்பது புதிய படைப்பையும் குறித்துக்காட்டுகின்றது. கடவுள் இந்த உலகைப் படைத்த போது, "ஒளி தோன்றுக!" என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார்", தொநூ: 1:3. தமது படைப்பின் முதற் படைப்பாகிய ஒளியை ஆண்டவர் படைக்கின்ற போது அது படைப்பிலே சிறந்த படைப்பாகின்றது.

அவ்வொளியே புது ஒளியாக சுடரேற்றப்படும் கிறிஸ்துவே இவ்வுல கிற்கு ஒளியாகவும் எம்மை இவ்வொளி யினால் புதுப்படைப்பாக மாற்றவும் வல்லவர் என்பதனைக் காட்டுகின்றது. **'விண்ணகத் தூதர் அணி மகிழ்வதாக...'** என்று ஆரம்பிக்கும் இந்தப் புகழுரை இலத்தின் மொழியிலே வினைச்சொல்லுடன் ஆரம் பிப்பதனால் (Exsultet i am angelica turba caelorum) அந்த வினைச்சொல்லே அப்புகழுரையின் பெயராக மாறுகின்றது - Exsultet. அல்லது "Paschale praeconium" என்றும் அழைக் கலாம். தமிழ் மொழி நடையில் அது அவ் வாறு அமைவதில்லை. இந்தப் புகழுரையின் ஆரம்பம் அழகான விவிலிய இறையியலைக் கோடிட்டுக் காட்டுகின்றது. அதாவது கிறிஸ்து பிறந்த பொழுது இந்த விண்ணகத் தூதர் அணிகளே பிறந்த இயேசுவை வாழ்த்திப் பாடுகின்றனர்: 'உடனே விண்ணகத் தூதர் பேரணி அந்தத் தூதருடன் சேர்ந்து, "உன்ன தத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உல கில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" என்று கடவுளைப் புகழ்ந் தது', (லூக்: 2:13,14) இதே வாழ்த்தொலி இயேசுவினுடைய உயிர்ப்பிலும் இருக்க வேண்டும் ஏனெனில் தந்தையின் திட்டம்



இயேசுவில் இந்தப் பாஸ்கா மறைபொருளி னூடாகவே நிறைவடைகின்றது.

திருச்சபையோடு இணைந்து கொண்டாடும் போது தான் அதன் ஒளி மகிமைபெறுகின்றது: 'இப்பெரும் சுடர்களால் அழகுபெற்று அன்னையாம் திரு அவையும் களிகூர்வதாக'. கிறிஸ்துவினுடைய பிறப்பு விண்ணுலகத்தினருக்கு மகிழ்ச்சி, ஆனால் அவரது இறப்பும் உயிர்ப்பும் மண்ணில் வாழும் மாந்தருக்கு மகிழ்ச்சி. ஆகவே விண்ணகத் தூதர் அணியோடு இணைந்த எமது வெற்றியின் பாடலும் இதுவே. பாவத்தழையி லிருந்து இவ்வுலகிற்கு வெற்றியளித்த மாவீ ரன் இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடும் ஒரு வெற்றிப் பாடல். விண்ணையும் மண்ணையும் அழைக்கும் திருச்சபையின் மகிழ்வில் இணைந்து நிற்க அழைக்கும் ஒரு முகவுரை.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தூய்மை யான முறையிலே கொண்டாட ஒளியை யும் - இரவையையும், இடத்தையும் - நேரத்தையும், குருவையும் - பங்குபற்றும் மக்களையும் புனிதப்படுத்தும் ஓர் அற்புத சடங்கு. இன்னும் கூறப்போனால், கிறிஸ்துவின் உயிர்ப்பை அடையாள ரீதி யாக பிரதி நிதிப்படுத்துவதே இந்த ஒளி: 'கிறிஸ்துவின் ஒளி இதோ - இறைவா உமக்கு நன்றி' என்று இயேசுவையே அச்சாரமாகக் கொள்கின்றோம். இவ்வழி பாடு ஆலயத்திற்கு வெளியே இடம்பெறு கின்றது. ஏனெனில் இப்புது ஒளி ஆலயத் தின் நுழைவாயினூடாக எடுத்துச் செல்லப் படுகின்றபோது அந்த ஒளியை பின்பற்றியே மக்கள் தங்கள் வாழ்வின் வெளிச்சத்தை தேடவேண்டும். புதுத் தீயை ஆசீர்வதிக்கும் போது, 'இவ்வாறு இப்பாஸ்காத் திருவிழா வழியாக விண்ணகத்தின் மீது கொண்ட ஆவலால் நாங்கள் பற்றியெரிவோமாக' (புதுத்தீயை புனிதப்படுத்தும் செபம்) என்று விண்ணக வாழ்வின் சுவையை இம்மறை நிகழ்வுகளின் கொண்டாட்டத்தால் நிறைவு பெறச் செய்கின்றார் கிறிஸ்து. இதன் பலன், 'சாவின் மீது அவர் கொண்ட வெற்றியில் நாமும் பங்குபெறுவோம்' (தீயையும் பாஸ்கா திரியையும் புனிதப்படுத்துதல் சடங்கில் குருவானவரால் சொல்லப்படும் அறிவுரை) என்பதை எண்பித்துக் காட்டுகின்றார் இயேசு. கிறிஸ்து தான் இந்த ஒளி, இந்த ஒளி தான் கிறிஸ்து.

ஒவ்வொரு ஞாயிறும் கொண்டா டும் இறைபலி இந்த உயிர்ப்பு ஞாயிறின் அடையாளமே. இந்த ஒளிதான் பீடத்தில் எரியும் விளக்காகும். அது கிறிஸ்துவின் பிரசன்னத்தையே குறித்துக்காட்டுகின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பைத் திருப்பலியோடு இணைக்கத் தரப்படும் முற்சுவையே இந்தப் பாடலாகும். அப்போஸ்தலிக்க பாரம்பரியத் தையே கோடிட்டுக் காட்டி, இதுவே ஒழுங் காக வரலாற்று வடிவிலே பேணப்படுகின்ற தாக இப்பாடல் அமைந்துவிடுகின்றது. இந்தப் பாஸ்காத் திரியை நாம் ஏன் ஏற்றி வைக்க வேண்டும், அல்லது இதனது அடை யாளங்கள் எங்கிருந்து வந்தன, என்கின்ற பல கேள்விகள் எமக்குள்ளே எழுவது நிஜமே. வழிபாட்டு இறையியல் என்பதில் வரலாறு இருக்கிறது, இருக்க வேண்டும். இந்த வரலாறுகள் தான் வழிபாட்டை மெரு கூட்டுகின்றன என்பதில் தெளிவாக இருக்க வேண்டும் என்பதே எனது வாதமாகும். அந்தவகையில் ஏன் இந்தப் பாஸ்கா மெழுகு திரி? எப்படி இந்தப் பாஸ்காப் புகழுரை? என்கின்ற கேள்விகளுக்குப் பதில்கள் இருக்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் காலங்களிலே ஒளியை ஏற்றி இறைவனுக்கு வழிபாடு கள் செலுத்தப்பட்டதன் மூலம் இதனது ஆரம்பம் தெளிவாகின்றது. இதற்குச் சான்றாக விடுதலைப்பயண நூல் அமை கின்றது: 'உடன்படிக்கைப் பேழைக்கு முன்னால், திருத்தூயகத் திரையின் முன்னிலையில் தூபபீடத்தை வைப்பாய். உடன்படிக்கைப் பேழை மேலுள்ள இரக்கத் தின் இருக்கையில் நான் உன்னைச் சந்திப்பேன். காலைதோறும் ஆரோன் அதன்மேல் நறுமணப்பொருள் எரிப்பானாக! விளக்குகளை ஆயத்தப்படுத்தும் போதும் அவன் நறுமணப்பொருள் எரிப்பானாக! மாலை மங்கும் வேளையில் ஆரோன் விளக்குகளை ஏற்றும்போது, உங்கள் தலைமுறைதோறும் ஆண்டவர் திருமுன் இடைவிடாமல் நறுமணப் பொருள் எரிப் பானாக', விப: 30: 6-8. இதுவே காலப் போக்கில் யூதர்களுடைய தொழுகைக்கூடங் களில் பயன்படுத்தப்பட காரணமாயிற்று.

**அருட்பணி ஜெகன் கூஞ்ஞே (அமதி)**

ஓய்வு நாளின் முடிவினில் சடங்குக்கான விளக்கை ஏற்றி தொழுகைக்கூடங்களில் வழிபாட்டை மேற்கொள்ளுவர். இதிலிருந்து கிறிஸ்தவ ஒளியின் வழிபாடு (Lucernarium) ஆரம்பமாகியிருக்கலாம்.

முதற் கிறிஸ்தவர்கள் ஆலயத் தில் இடம்பெறும் மாலைத் தியானத்தை (அல்லது வழிபாட்டை) நம் ஆண்டவரு டைய தியாகத்தை நினைத்து எதிர்வுகூறு கின்ற ஓர் அழைப்பாகக் கருதினர். ஏனெ னில் இந்த மாலை நேரத்தில் தான் இயேசு தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தார். இதன் தெளிவாகத் திருப்பாடல் 141:2 விளக்குகின்றது: 'தூபம்போல் என் மன்றாட்டு உம் திருமுன் ஏற்றுக்கொள்ளப் படுவதாக! மாலைப் பலிபோல் என் கைகள் உம்மை நோக்கி உயர்வனவாக'. ஆகவே, இதன் மாலைப் பலியின் உட்கருத்தாக அமைவது என்னவெனில் 'கிறிஸ்த வர்கள் ஒன்றிணைந்தார்கள்'. இதை Synaxis ( இது கீழைதேய வழிபாட்டு ஒன்றுகூடலை குறித்துக் காட்டுகின்றது. அதாவது இவர்கள் திருப்புகழ்மாலை சொல்லுவதற்காக தங்களை ஒன்று கூட்டுகின்றனர். இதை Synaxis என்று அழைக்கலாம்.) என்று சொல்லலாம். இந்த கிறிஸ்தவர்களின் ஒன்றிப்பு ஒரு மாலை வழிபாடாக ஓய்வு நாளில் தொடுக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு சனிக்கிழமையின் மாலையில் இச்சடங்கு திருவிழிப்பாக மாறி கிறிஸ்துவின் உயிர்ப் பைக் கொண்டாடும் பலயோடு இணைக் கப்பட்டது. இது இறைமக்களுக்கு கட்டாயமானதாகவும், இன்றியமையாத தாகவும் மாற்றப்பட்டது.

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையும் கூட இரவிலேயே அதாவது கிறிஸ்துவின் உயிர்ப்பின் இரவிலேயே இடம்பெறும் என்றும் நம்பப்பட்டது. இத னால் தான் இந்த ஒளியின் சடங்கு ஒரு புனிதமானதாக கருதப்பட்டது. அத்து டன் பழைய ஏற்பாட்டில் உள்ள வழி பாடுகளின் தொடர்ச்சியாகவும் இது கருதப் பட்டது. இவ்வாறு இந்த ஒளியின் வழி-பாடு மூன்றாம் நூற்றாண்டின் இறுதி யில் சிறிது சிறிதாக மறைந்துபோகவே, அதை ஒரு முக்கிய சடங்காக பாஸ்கா திருவிழிப்பன்று நிறைவேற்றப்பட்டது. "Laus Cerei" அதாவது மெழுகு வர்த்தி யின் புகழ் என்று அழைக்கப்பட்ட ஒரு செபம் தியாக்கோனால் நிறைவேற்றப் பட்டது. இது மெழுகுவர்த்தியை ஏற்ற வும் அதனை ஆசீர்வதித்து இந்த செபத்தை பாடலாகவோ அல்லது வாசித்தோ சொல்லுவார். இந்தச் சந்தர்ப் பம் தியாக்கோனுக்கு மட்டும் வழங்கப் பட்டது. இதுவே காலப் போக்கில் Exsultet என்கிற செபமாக மாறியிருக் கலாம்.

இந்தப் பாஸ்காப் புகழுரையை (Paschale praeconium) பாடுவதை திருச் சபை தியாக்கோனுக்கே அளித்துள்ளது, இது வரலாறு. (தியாக்கோன் இல்லாத நேரத்தில் குருவானவர் அல்லது பொது நிலையினரும் பாடலாம். மேலதிக விளக்கங்களுக்கு திருப்பலி நூலை நாடவும்). தியாக்கோன் வெண்ணிற ஆடை அணிந்தவராய் இந்த புகழுரையை பாடும் போது, இயேசு சாவினின்று உயிர்த்தெழுந்ததை முதன் முறை அறிவித்த வானதூதரைப்போல் தன்னை அடையாளப்படுத்துகின்றார். 'ஓய்வுநாளுக்குப்பின் வாரத் தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலா மரி யாவும் வேறொரு மரியாவும் கல்ல றையைப் பார்க்கச் சென்றார்கள். திடீ-ரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணகத் திலி ருந்து இறங்கி வந்து கல்லறையை மூடி யிருந்த கல்லைப் புரட்டி அதன் மேல் உட்கார்ந்தார். அவருடையதோற்றம் மின்னல் போன்றும் அவருடைய ஆடை உறைபனி வெண்மை போன்றும் இருந்தது.

அவரைக் கண்ட அச்சத்தால் காவல் வீரர் நடுக்கமுற்றுச் செத்தவர் போலாயினர். அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, "நீங்கள் அஞ் சாதீர்கள் சிலு வையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக் குத் தெரியும். அவர் இங்கே இல்லை. அவர் கூறியபடியே உயிருடன் எழுப் பப்பட்டார்", மத்: 28:1-6. இயேசுவின் உயிர்ப்பை உலகிற்கு முதன் முதல் அறிவித்தது வானதூதரே. அதே அறி விப்பை உலகிற்கு அறிவிப்பதே இந் தப் பாடலாகும். இந்தப் புகழுரையின் தொடக்கம் திருப்பாடலை அடியொற்றி யிருக்கின்றது.

(தொடர் 15ம் பக்.)




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(ராதா, கொழும்பு)

**கே: நமது நாட்டின் நடக்கும் மோசடிகளைப் பார்த்தால் நாடு உருப்படுமா என எண்ணத் தோன்றுகின்றது! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ராதா, "எங்கள் ஊர் ஆற்றில் ஆண்டுக்கு ஒருமுறை அழகரும், ஆண்டு முழுவதும் மணல் லொறிகளும் இறங்குகின்றன" என்ற நவீன கவிதை இந்நாட்டின் நிலைமையைப் படம்பிடித்துக் காட்டுவதோடு உருப்படுமா உய்யுமா என்பதையும் கட்டியம் கூறி நிற்கின்றதல்லவா!

*(அருமை, யாழ்ப்பாணம்)*

**கே: சுவாகரசியமான பதில்களை உங்கள் பகுதியில் வாசிக்கக்கூடியதாக இருக்கின்றது. சிலவேளைகளில் எல்லாம் தெரிந்தவர்போல பதில் அளிக்கின்றீர்கள். உண்மையில், உங்களுக்கு எல்லாம் தெரியுமா?**

**ப:** அருமையான கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கின்றீர்கள், அருமை! நான் என்னத்தச் சொல்ல? "நான் இளைஞனாக இருந்த போது எல்லாம் தெரியுமென நினைத்தேன். கொஞ்சம் வயதானபோது கொஞ்சம்தான் தெரியும் என உணர்ந்தேன். முதிர்ச்சி அடைந்த போதுதான் எனக்கு எதுவும் தெரியாது எனப் புரிந்துகொண்டேன்" என்ற மெய்யியலாளர் சோக்கிரட்டிஸ் அவர்களின் வார்த்தைகள் போலத்தான் எனது நிலைமையும் அருமை!

*(ராசா, மன்னார்)*

**கே: அன்றாடம் நடைபெறும் வீதிவிபத்துக்களைப் பார்த்தால் நம்முடைய மக்களில் ஒரு பெரும் தொகையினர் வீதி விபத்துக்களாலேயே இறந்துவிடுவார்கள் போல தெரிகின்றது! இவ்வாறு வீதி விபத்துக்கள் இடம்பெற என்ன காரணங்கள்? என்ன செய்யலாம்?**

**ப:** ராசா, 'போரைவிடப் பயங்கரமானதாக மாறிவருவது வீதிவிபத்துக்கள்' என ஓர் இராணுவ அதிகாரி அண்மையில் குறிப்பிட்டதாக 15.03.2023 அன்று பத்திரிகை ஒன்றில் படித்ததாக ஞாபகம். இக்கூற்றுப் பற்றிய என்னுடைய விமரிசனம் ஒருபுறமிருக்க வீதிவிபத்துக்களால் மட்டும் கடந்த 13 ஆண்டுகளில் 68,000பேர் இறந்து போயிருப்பதாகவும் ஆண்டுக்கு ஏறக்குறைய 03 இலட்சம் பேர் வீதிவிபத்துக்களால் பாதிக்கப்படுவதாகவும் அதிர்ச்சிதரும் தகவலாக மேலும் குறிப்பிட்டுள்ளார். வீதிவிபத்துக்களால் மக்களின் இழப்புக்களும், அடுத்து நாட்டின் பொருளாதார நிலைமைகளும் எங்கேபோய் முடியும் எனக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவில்லை என்றால் நிலைமை கவலைக்கிடமாகத்தான் போய்முடியும், ராசா. முந்திச் செல்லவேண்டும் என்ற போட்டி மனநிலையும், வாகனங்களை அதிவேகமாகச் செலுத்துதலும் வீதிவிபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் பல வழிகளிலும் மேற்கொள்ள வேண்டும். உதாரணம் ஒன்று, கல்விமுறையில் வீதி ஒழுங்குகளை கட்டாயமாக அறிமுகப்படுத்தவேண்டும். இரண்டு, சாரதிகளுக்கான பயிற்சிகள் நன்றாகக் கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் பெரும் இடர் சுமக்கின்ற மக்களாகத்தான் மாறிவிடுவோம்.

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: சிலருக்கு எவ்வளவுதான் விளக்கம் கொடுத்தாலும் நம்மையும் நமது நிலைமைகளையும் புரிந்துகொள்கின்றார்கள் இல்லையே! என்ன செய்யலாம்?**

**பதில்:** அருள், உங்கள் நிலைமை எனக்குப் புரிகின்றது. ஆனால், உங்கள் நிலைமைகளை எடுத்துச்சொன்னால் எல்லாரும் புரிந்துகொள்வார்கள் என எதிர்பார்க்காதீர்கள். ஏனெனில், உங்கள் நிலைமைகளை எடுத்துக் கூறும்போது 'எதிரில் உள்ளவர் சிலவேளைகளில் எருமையாகவும் இருக்கலாம்'!

*(நாதன், முல்லைத்தீவு)*

**கே: நான் தான் எப்போதும் வெல்ல வேண்டும் என்ற மனப்பாங்கு இன்று பரந்துவிருந்து எல்லாரிடமும் காணப்படுகின்றது. வீட்டில் கணவன் மனைவிக்கிடையிலும், அலுவலகத்தில் அதிகாரிக்கும் அவர்களுக்குக் கீழே உள்ள பணியாளர்களுக்கிடையிலும் என இது பரந்துபட்டுக் காணப்படுகின்றது. இத்தகைய மனநிலை நாம் வேலை செய்யும் இடத்தில் மகிழ்ச்சியை இல்லாது ஆக்கிவிடுகின்றது. இது பற்றி?**

**ப:** நாதன், எலிகளை ஆராய்ந்த ஓர் ஆய்வாளரின் முடிவைப் பாருங்கள்! பெரிய எலியையும், குட்டி எலியையும் ஒரே கூட்டில் அடைத்துவைத்தால் பெரிய எலி குட்டி எலியுடன் விளையாட முனையும் என்கின்றார். ஆனால், விளையாட்டில் பெரிய எலியே தொடர்ந்து வெற்றிபெறும். குட்டி எலி அதன்பின் மனச்சோர்வடைந்து விளையாட விரும்பாது. அதனால், பெரிய எலி வேண்டுமென்றே சில ஆட்டங்களில் விட்டுக்கொடுக்கும். குட்டி எலிக்கு விடயம் புரியாமல் துள்ளிக் குதித்துக் கூத்தாடும், தொடர்ந்து விளையாடும். குட்டி எலி விளையாட்டை நிறுத்தாமல் இருந்தால்தான் பெரிய எலிக்குப் பொழுது போகும். அதனால், நீங்கள் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் அவ்வப்போது நமக்குக் கீழே உள்ளவர்களுக்கு - நம்முடன் வாழுகின்றவர்களுக்கு அவ்வப்போது விட்டுக்கொடுக்க வேண்டும். நூறுவீதம் வெற்றிவாய்ப்பு இல்லையென்றால் அவர்கள் நம்மை விட்டுப் போய்விடுவார்கள், அதனால், அவர்களை நாம் இழந்துவிடுவோம். எனவே, விருப்பமோ விரும்பமில்லையோ, நமக்குக் கீழே உள்ளவர்கள் சொல்லுவதையும் அப்ப அப்ப கேட்டு அவற்றில் சிலவற்றையாவது அமுல்படுத்தி அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கவேண்டும். எனவே, நூறுவீதம் வெற்றிக்கு ஆசைப்படாதீர்கள் என்கின்றார் நியாண்டர் செல்வன் என்பவர்.

# கிறிஸ்துவின் உத்தானமே நமது எதிர்நோக்கு

**முகவுரை**

கடந்த நாற்பது நாட்களாகத் தவக்காலப் பக்தி முயற்சிகளில் நாம் முழுமையாக ஈடுபட்டோம். தொடர்ந்தும் புனித வாரத்தைப் புனிதமாகக் கடைப்பிடித்துக் கிறிஸ்துவிடன் உயிர்ப்புக்காக எம்மைத் தயார்ப்படுத்தினோம். செபத்தில் நிலைத்திருந்து, நோன்பிருந்து, ஒப்புரவாகி மனித உறவைப் புதுப்பித்து, ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டு, எம்மைப் புனித நிலைக்குக் கொண்டுவந்த நாம் மகிழ்வோடு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடி அல்லேலூயாக் கீதம் வானதிர முழங்கினோம். புனித வாரத்தில் விசேடவிதமாக இயேசுவின் துன்பம் நிறைந்த பாடுகளையும், மரணத்தையும், ஆன்மீகத்தாகத்தோடும், பாவ வாழ்வில் இருந்து விடுபட்டுக் கிறிஸ்துவோடு நாமும் அருள்வாழ்வில் உயிர்க்க வேண்டும் என்றும் விரும்பினோம். கிறிஸ்துவின் உயிர்ப்பு தொடர்ந்தும் எமது வாழ்வோடு இணையவேண்டும். நாம் ஒவ்வொருவரும் உயிர்த்து எம்மோடு வாழும் கிறிஸ்துவோடு இணைந்து வாழ்ந்து நற்கனி கொடுக்க வேண்டும். என்பதே இறைவனின் விருப்பமாகவும் திட்டமாகவும் இருப்பதை உணர்ந்து வாழ்வை முன்னெடுப்போம்.

**இயேசுவின் முன்னறிவிப்பு**

வானகதந்தையின் மீட்புத் திட்டத்தை இறைமகன் இயேசு நன்கு அறிந்திருந்தார். தான் படப்போகும் துன்பங்கள் நிறைந்த, சிலுவை மரணம் பற்றியும், தன்னுடைய சீடர்களுக்கு மூன்று முறை முன்னறிவித்தார். இம்முன்னறிவிப்பு ஒத்தமை நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. "மானிடமகன் பலவாறு துன்பப்படவும், மூப்பர்கள், தலைமைக்குருக்கள் மறை நூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித்தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும், மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்று சொன்னார்" (லூக் 9:22, மத் 16:20-28, மாற் 8:30,9:1) தான் முன்னறிவித்தவாறே மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இயேசு உண்மையாகவே இறந்தார். அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார். இது எமது கிறிஸ்தவ வாழ்வின் ஆழமான நம்பிக்கையாக இருக்கின்றது. கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறை சாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றது. (1கொரி 15:14)

**எமக்கும் உயிர்ப்பு உண்டு**

இயேசுவின் உயிர்ப்பு உண்மையில் நம் இறுதி உயிர்ப்பின் அச்சாரமாக உள்ளது. அதுவே எல்லா நம்பிக்கையின் மூலமாகவும் உள்ளது. நாம் அவரோடு இறந்து உயிர்த்தது எமது திருமுழுக்கில் தொடங்கிவிட்டது. அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில் அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். (உரோ 6:5) அது எமது வாழ்வாக மாற வேண்டும் உயிர்ப்பு எமது வாழ்வில் தொடர்ந்து இடம் பெறவேண்டும். அப்போது தான் நாம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகர முடியும். இறைமகன் இயேசு ஒரு சிறுமிக்கு உயிர்கொடுத்தார் (மத் 9:23-26) தனது அன்பு நண்பனான லாசருக்கு உயிர் கொடுத்து மார்த்தா மரியாளின் கண்ணீரையும் கவலையையும் நீக்கினார் (யோவா 11:38-44) நயீன்



ஊர் விதவைப் பெண்ணுடைய மகனுக்கு உயிர்கொடுத்து அத்தாயின் துன்பத்தை நீக்கினார் (லூக் 7:11-17) எல்லாவற்றுக்கும் மேலாக வாக்களித்த படிதானே உயிர்த்தெழுந்து எமக்கு மீட்பையும், உயிர்ப்பையும் நிலைவாழ்வையும் மாபெரும் கொடையாகத் தந்திருக்கின்றார். (மத் 28:1-10)

**உயிர்ப்பை உறுதிப்படுத்தினார்**

இறைமகன் இயேசு வாக்களித்தபடியே உயிர்த்தெழுந்தார். தான் உயிர்த்தெழுந்ததை உறுதிப்படுத்தினார். பல்வேறு இடங்களில் வேறுபட்ட நபர்களுக்குக் காட்சி கொடுத்தார். இறைமகன் இயேசு காட்சிகொடுத்ததை நான்கு நற்செய்திகளிலும் நாம் காண்கின்றோம். யோவான் நற்செய்தியில் மகதலா மரியாவிற்கும் (யோவா 20:11-18) சீடர்களுக்கும் (யோவா 20:19-23) சிறப்பாக அவரது உயிர்ப்பை ஏற்க மறுத்த அவநம்பிக்கையாளரான தோமாவுக்கும் (யோவா 20:24-29) காட்சி கொடுத்து உயிர்ப்பை எண்பிக்கின்றார். லூக்கா நற்செய்தியில் எம்மாவு பாதையில் வழிநடந்த சீடர்களுக்குத் தோன்றி அவர்களுடைய அகக்கண்களைத் திறந்து அப்பத்தைப் பகிரும்போது தன்னை உயிர்த்த ஆண்டவராக வெளிப்படுத்துகின்றார். (லூக் 24:13-32) மாற்கு நற்செய்தியில் இரண்டு சீடர்களுக்குத் தோன்றுகின்றார். வயல் வெளியில் இரண்டு சீடர்கள் நடந்து கொண்டிருந்த போதும் பதினொரு சீடர்கள் பந்தியில் அமர்ந்திருந்த போதும் அவர்களுக்குத் தோன்றி அவர்களின் நம்பிக்கையீனத்தை நீக்குகின்றார். (மாற் 16:12-14) மத்தேயு நற்செய்தியில் கலிலேயாவில் ஒருமலையில் உயிர்த் இயேசுவாக பதினொரு சீடர்களுக்கும் தோன்றி தனது உடனிருப்பை உறுதிப்படுத்தி அவர்களின் அச்சத்தை நீக்கி நற்செய்தியை அறிவிக்கும் அதிகாரத்தைக் கொடுக்கின்றார். (மத் 28:16-20)

**உயிர்த்த கிறிஸ்து எம்மோடு வாழுகின்றார்.**

இறைமகன் இயேசுவின் உயிப்புத்தான் எமது கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கையாகவும், விசுவாசமாகவும், நிலைவாழ்விற்கான எதிர்நோக்காகவும் அமைகின்றது. நாம் தண்ணீரால் திருமுழுக்குப் பெறுவது இயேசுவின் மரணத்தில் பங்கு கொள்வதையே குறிக்கின்றது. பாவத்தின் பழைய இயல்பைக் களைந்துவிட்டு கிறிஸ்துவின் இயல்பை நாம் அணிந்து கொள்வதற்கான ஓர் அடையாளமாகவும், அழைப்பாகவும் உள்ளது. உயிர்த்த ஆண்டவர் எம்மோடு வாழுகின்றார் என்ற நம்பிக்கையும் நாமும் உயிர்தெழுவோம் என்ற எதிர்நோக்கும் இருந்தால் மட்டும் போதாது நாம் பெற்ற உயிர்ப்பு வாழ்வை உண்மையாக வாழ முற்படவேண்டும் "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்28:20) என்ற இயேசுவின் சீடத்துவத்திற்குள்ளே வாழ முற்படுவோம்.

**முடிவாக**

"சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலி 2:8) எமக்காகத் தன்னுயிரைக் கொடுத்தவர் எமக்கு நிலைவாழ்வைப் பெற்றுத் தந்தார். உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார் (யோவா 11:25) எனவே நாம் உயிர்த்தெழுந்த மக்களாக என்றும் வாழ்வோம். இறையாட்சிக்குரிய பண்புகளைத் தாங்கி அதற்கு சான்று பகர்ந்து இறைமகன் இயேசு இவ்வுலகில் கொண்டுவர விரும்பிய இறையாட்சிக் கனவை நனவாக்கப் பிரமாணிக்கமாக வாழ்வோம்.

அளவையூர் அமலன்

# பரிசுத்தவார திருவழிபாடுகள்



**ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு**

புனித வாரம் இயேசுவின் பாடு கள், மரணம் உயிர்ப்பு எனும் அவரது பாஸ்கா மறைபொருளோடு பயணிக்கக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு தனித்துவமான வாரமாகும். இந்தப் புனித வாரத்தை 'ஆண்ட வருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு' ஆரம்பித்து வைக்கின்றது. இயேசு எருச லேம் நுழைகின்றார். 'தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிற வர் ஆசி பெற்றவரே! இஸ்ரயேலின் அர சரே, உன்னதங்களிலே ஓசன்னா' என்று ஓசான்னா கீதம் பாடி அவரை வரவேற்கின் றனர். இயேசு தனது தந்தையின் விருப்பப் படி தனது வாழ்வின் இறுதிக்கட்ட நிகழ்வு களுக்குள்ளே செல்கின்றார். இன்று தான் புனித வாரம் ஆரம்பமாகின்றது.

இயேசுவின் பாஸ்கா மறை நிகழ்வின் கொண்டாட்டம் ஆரம்பமாகின்றது. எமது வாழ்வும் இன்று விண்ணகம் நோக்கிய பயணத்தில் இணைகின்றது. எமது தவ ஒறுத்தல்கள் அர்த்தம்பெறும் அழகான சந்தர்ப்பமாகின்றது. 'ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு' கிறிஸ்து அர சர் பெருவிழாவின் நினைவாகவும் அமை கின்றது. அவர் குற்றவாளி என நிரூபிக்கப் பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கு அவரது அரசாட்சியே முக்கிய காரணமா- கும். இந்த நாளில் உலகம் முழுவதும், திரு அவையினர் அனைவரும் இயேசு வுக்கு அரச மரியாதையைச் செலுத்தி கைகளில் ஒலிவக் கிளைகளைக் கொடுத்து இயேசுவே அரசர் என்று கூக்குரல் ஒலிக்கின்ற னர். இந்த ஞாயிறு இயேசு வின் துன்பத்தை நேருக்கு நேர் கொண்டு வருகிறது, ஏனெனில் இது கிறிஸ்துவின் பலிக்களத்திற் கான ஆர்வத்தை நமக்கு அறிமுகப்படுத்தி, கல்வாரியில் அவரது மரணத்திற்கு நம்மைத் தயார்படுத்துகிறது. இயேசுவின் துன்பத்தை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்,

நாமே படைவீரர்களாகவும் தியா- கிகளாகவும் மாறத் தயாராக இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். அவ- ரோடு உடன்பயணிக்கும் நாம் அவரது சீடர்களே. தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு இலாசரைக் கல்லறையில் இருந்து உயிர்ப்பித்த அழகிய நிகழ்வைக் குறித்துக் காட்டுகின்றது. இலாசரை உயிர்ப்பித்த நிகழ்வும், இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணமும், 'சிலுவையின் தொடக்கம்' எனக் கொள்ளலாம். இதனால் சிலுவையின் இருளுக்குள் எம்மை அழைத்துச் செல் வது என்று அர்த்தம் பெறாது. ஒளியும், மகிழ்வும் புனித வாரத்தின் இறுதி நாளா கிய இயேசுவின் உயிர்ப்பில் மாத்திரம் அல்ல அதனது தொடக்கத்திலேயே காட் டப்படுகின்றது. அவ்வுண்மை இருளை முறியடித்து, ஒளியைப் பிரகாசிக்கின்றது. இயேசு தான் சுமந்த சிலுவையில் தம்மை அடையாளப்படுத்துகின்றார், பலி செலுத் தும் குருவாகப் பிரசன்னமாய் இருக்கின் றார், இறுதியாக திருமுழுக்குப் பெற்ற திருக் கூட்டத்தில் பிரசன்னமாய் இருக்கின்றார். இந்த ஊர்வலம் இவ்வுலகம் நிறைவுற்று ஒரு புதிய எருசலேம் நோக்கிய பயணத்தைத் தெளிவுபடுத்து கின்றது. எருசலேம் நோக்கிய பயணம் ஒரு 'புதிய விடுதலைப் பயணம்' ஆகும். இதைத் தான் தனது உருமாற்றம் நிகழ்வில் இயேசு எண்பிக்கின்றார், 'மாட்சி யுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேறவிருந்த அவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.' லூக்: 9:31. எனெனில் இது பாவத்தில் இருந்து புதிய உறவுக்கான பயணமாகும். இயேசுவோடு செல்லுகின்ற பயணமாகும். இந்தக் குருத்து ஞாயிறு எமக்கு தரும் அழைப்பு அதனது திருக் குழும மன்றாட்டில் அமைந் துள்ளது: 'தாழ்மையின் எடுத்துக் காட்டை மனித இனம் பின்பற்ற, எங்கள் மீட்பரை மனித உடல் எடுக்கவும் சிலு- வையை ஏற்றுக்கொள்ளவும் செய்தீரே'. இதே தாழ்ச்சியும் கீழ்ப்படிவும் கொண்டு வாழ இப்பயணத்தில் முழுமனதோடு இணைந்துகொள்ளுவோம்.

**இவ்வழிபாட்டில் மூன்று முக்கிய பகுதிகள் இடம்பெறுகின்றன:**

1. இயேசுவின் எருசலேம் நோக்கிய பய ணத்தை, குருத்தோலை ஏந்திய பவனி யாகவும் : இதிலே, சிகப்பு நிற திரு உடை இயேசுவின் பாஸ்கா மறை நிகழ்வைக் குறித்துக்காட்டுகின்றது.

> “எருசலேம் நோக்கிய பயணம் ஒரு ‘புதிய விடுதலைப் பயணம்’ ஆகும். இதை தான் தனது உருமாற்றம் நிகழ்வில் இயேசு எண்பிக்கின்றார்.”

2. இறைவார்த்தை
3. நற்கருணை வழிபாடு என்பனவாகும்.

**ஆண்டவருடைய இரவு விருந்து - புனித வியாழன்**

இன்று புனித வாரத்தின் பெரிய வியாழ னாகும். உரோமை வழிபாட்டில் இன்றைய நாளை **In cœna Domini** அதாவது ஆண்ட வருடைய இரவு விருந்து என்று அழைக் கின்றனர். இன்றுதான் இயேசு குருத்துவத் தையும் நற்கருணையையும் ஏற்படுத்திய நாள். தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி உங்களுக்கு நான் அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய வேண்டுமென்றும், இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றும் தனது பணியின் அர்த்தத்தையும் அதைத் தொடர்ந்து நிறை வேற்ற வேண்டும் என்கின்ற தார்மீக உணர்வையும் வெளிப்படுத்துகின்றார். இது என் உடல், இது என் இரத்தம் என்று தன்னை உலகிற்குக் கொடுக்கும் நற்கருணை யாக வாழ்ந்துகொண்டிருக்கும் இயேசு பலியாக, பலிப்பொருளாக, பலிப்பீடமாகின் றார். 'மீட்பு அளிக்கும் பலிப்பொருளாக முதன்முதல் தம்மையே உமக்கு ஒப்புக் கொடுத்து, தம் நினைவாக நாங்களும் பலி செலுத்த வேண்டுமென்று கற்பித்தார்', என்று இன்றைய வழிபாட்டின் தொடக்க வுரை எமக்கு நினைவூட்டுவது போல குருவும் ஆசிரியருமான இயேசுக் கிறிஸ் துவைத் தவிர எமக்கு வாழ்வு இல்லை, தொடக்கமும் முடிவும் இல்லை.

### இன்றைய வழிபாட்டினூடாகத் தரப்படும் முக்கிய பகுதிகளை அவதானிப்போம்.

1. வருகைப்பல்லவி: நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையில்தான் நாம் பெருமை பாராட்ட வேண்டும் அவரிலே தான் நமக்கு மீட்பும் வாழ்வும் உயிர்த் தெழுதலும் உண்டு அவர் வழியாகவே நாம் மீட்கப்பெற்றோம் விடுதலை அடைந் தோம் - காண். கலா 6:14. இவ்வருகைப் பல்லவி வருகைப்பாடலாக அமையலாம் ஆனால், வருகைப்பாடலுக்காக இப்பல்லவி தவிர்ந்த ஏதும் பாடுவது பொருத்தமற்றது. குருவானவர் வெண்ணிறத் திருவுடை அணிந்திருப்பார்.

2. “உன்னதங்களிலே” கீதம் பாடப்படும் அப்பொழுது மணிகள் ஒலிக்கும். இது முதல் பாஸ்காத் திருவிழிப்பில் **உன்னதங்க ளிலே”** பாடும்வரை மணிகள் ஒலிக்காது.
3. இறைவார்த்தை
4. பாதம் கழுவும் சடங்கு
5 நற்கருணை வழிபாடு
6. தூய்மைமிகு நற்கருணை இடமாற்றம். இப்பவனியின் போது “பாடு வாய் என் நாவே” எனும் பாடல் பாடப்படும். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கே உரித் தான, புனித தோமஸ் அக்குவினஸ் அவர் களால் எழுதப்பட்ட பாடல் இது. ஆகவே, இவ்வழிபாட்டுப் பாடலைப்பாடும் போது, இதற்கு வழங்கப்படும் இசை குறித்து மிகக்கவனம் எடுக்கப்பட வேண்டும்.

இயேசு தனது தந்தையின் விருப்பத்தை சிரமேற் கொண்டு தனது பாடு

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி

கள், மரணம் பற்றித் தியானிக்கும் ஓர் அழ கான நேரம். அன்பும் பிரிவும், மகிழ்வும் துயரமும் வெற்றியும் இழப்பும் இணைந்து காணப்படும் நேரம் இது. அன்பு, பகிர்வு மற்றும் ஒன்றிப்பு இவ்வழிபாட்டின் முக் கிய வெளிப்பாடாக இருக்கின்றது. அன்பி னால் அவர் அனைத்தையும் கொடுக்க முன் வருகின்றார் 'உலகில் வாழ்ந்த தமக்குரி யோர் மேல் அன்பு கொண்டிருந்த அவர் அவர்கள்மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார்.' யோவா. 13:1. மாதிரி காட் டும் அன்பு பகிர்விற்கு அழைக்கின்றது. 'இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலு டையைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண் டார். பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடி- களைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.' யோவா. 13:4,5. இயேசுவின் பிரிவிற்குப் பின் அவர்கள் ஒன்றாய் இருப்பதன் அவசியத்தைத் தங்களது செயற்பாட்டின் வழியாக எண்பிக்கவேண்டும் என்று கற்பிக்கின்றார். 'ஆண்டவரும் போத- கருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ' யோவா. 13:14. விழித்திருந்து செபியுங்கள் என்று எமக்கு அழைப்பு விடுக்கும் இயேசுவின் உணர்வுகளோடு இன்று பயணிப்போம். நற்கருணையாக உடைக்கப்பட்டு பிறர் வாழ எம்மையும் தாழ்த்திக் கொள்வோம்.

### ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

'திருச்சிலுவை மரம் இதோ! இதிலேதான் தொங்கியது உலகத்தின் மீட்பு' என்று இன்றைய பெரிய வெள்ளியின் முழு அர்த்தமும் சிலுவையில்தான் அடங்கியுள்ளது என்று இன்றைய நாளை மீட்பின் நாளாகவும், தியாகத்தின் நாளாகவும் கொண்டாடுகின்றோம். தன்னை பலியாக்கியதன் மூலம் அவரே பலிப்பொருளாகவும், அவரே பலிப்பீடமாகவும், அவரே பலியாகவும் இவ்வுலகிற்குத் தன் அன்பைக் காட்டிய அழகான நாள். 'தம் நண்பர்க ளுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை' (யோவான் 15:13), என்று இவ்வுலகில் அன்பே தலை சிறந்தது என்று மெய்ப்பித்துக் காட்டிய அழகான நாள். இயேசுவின் பாடுகள் எமக்கு வாழ்வின் அர்த்தத்தை காட்ட வல்லது. அவரது இரத்தம் எமக்கு மன்னிப்பின் பாணமாக மாற வல்லது. அவரது இறப்பு எமக்கு மீட்பைத் தரவல் லது. இன்றைய வழிபாடு நான்கு பகுதிக- ளைக் கொண்டுள்ளது.

**முதல் பகுதி - இறைவாக்கு வழிபாடாக வும் இரண்டாம் பகுதி பொது மன்றாட்டா கவும் மூன்றாம் பகுதி திருச்சிலுவை ஆராதனையாகவும் நான்காம் பகுதி திருவிருந்தாகவும் இடம்பெறும்.**

இன்று திருச்சபைக்குத் தேவையான அருள் ஆசீர்கள் அனைத்தும் அந்த சிலுவையில் இருந்து தான் ஊற்றெடுக் கின்றன. சிலுவையில் காணப்பட்ட பலி வாழ்வு, பணி வாழ்வாகின்றது. சிலுவை யின் துன்பங்கள், வலிகள், கைவிடப்பட்ட நிலைகள், இரத்தம் சிந்தும் நிலை கூட ஏன் மரணம் கூட இன்றைய திருச்சபை யின் வாழ்வியல் நிலையாகின்றது. அத்தோடு, சிலுவையிலே சொல்லப்பட்ட செபம், திருச்சபைக்குத் தேவையாகின் றது. அது சுகமளிக்கும் அருமருந்தாகின் றது. சிலுவையில் இயேசுவின் கண்க ளோடு ஏழைகளைத் திருச்சபை பார்க்க வேண்டும், செவிமடுக்க வேண்டும், ஆறுதல்படுத்த வேண்டும், உருகும் இதயம் கொண்டு வாழ வேண்டும். இதனால் தான் சிலுவையைக் கண்ட மனிதர்கள் விலகிச் சென்றனர், ஒதுங்கிச் சென்றனர், வெறுத்தனர், அவமதித்தனர். சிலுவை ஒவ்வொருவரையும் பார்க்க வைத்தது. ஏனெனில், சிலுவையைப் பார்த்தவர்கள் தங்களை அர்ப்பணித்த னர். அவர்கள் துன்பங்களைத் தாங்கினர் ஏனெனில் அவர்கள் முன்பே துன்படு வோர் இருந்ததனால். அவர்கள் வீதிக ளுக்கு வரவேண்டியிருந்தது ஏனெனில் வீதியிலும் வாடுவோர், மடிவோர் வாழ்ந்த தனால். அவர்கள் தங்கள் சௌகரியங் களை, நிறைவான உணவுகளை தியா கம் பண்ண வேண்டியிருந்தது ஏனெ னில் பட்டினியால் வாடுவோர், வீடுகளை இழந்தோர் அவர்கள் முன்பே இருந்தத னால். இது தான் சிலுவை தரும் பாடம். இயேசுவின் வார்த்தைகள் எமது வாழ்வை குத்தி ஊடுருவட்டும், இயேசுவின் அர்ப் பணம் எமது வாழ்வின் நிலைகளைத் தொடட்டும், இயேசுவின் இறப்பு எமது வாழ்வுக்கு ஆதாரமாய் அமையட்டும்.

## அசைவுகளும், மாற்றங்களும்!

அசைவுகளும், மாற்றங்களும் அடங்கியது தான் வாழ்க்கை. உயிர்ப்புத்தன்மையோடு உலாவருவதற்கு இதுதான் அடிப்படை. அறிவால் ஏற்படுகிற மாற்றம் மூளையோடு முகம் காட்டுகிறது. உணர்வால் ஏற்படுகின்ற மாற்றம் இதயத்தோடு இதம் காட்டுகிறது. வாழ்க்கையை நோக்கி ஓடிக்கொண்டி ருப்பதுதான் நமது பேராட்டம், ஓடும்போது ஒரு நொடி திரும்பினாலும் இன்னொருவர் நம்மைத் தாண்டி ஓடிவிடுவார். இந்த இலட்சியத்தோடும், போராட்டத்தோடும் வாழ்க்கையைச் சந்திக்க வேண்டும். அதில் வெற்றி தோல்வி என்பது தவிர்க்கமுடியாதது. நம் வெற்றிகளுக்கும், தோல்விகளுக்கும் நாமே காரணம்.

**இருக்கட்டும்**
**இதுவரை நாம்**
**இழந்தவைகளெல்லாம்.**
**இனி பெறப்போகும்**
**வெற்றிகளுக்காக உழைப்போம்.**

# காவலன் கலசம்

## அர்த்தமுள்ள ஆன்மீகம்

# நலம் தரும் நம்பிக்கை

பகுதி 10

அருட்பணி மா.ரேஜிஸ் இராசநாயகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**மனமாற்றம்**

இதன் மூலம் நினிவே மக்கள் இறை வார்த்தையை நம்பி ஏற்று மனம் மாறி ஒறுத்தல் மற்றும் விரதங்களூடாக மன்னிப்பும் தண்டனையிலிருந்து விடுதலையும் பெறுவதை நாம் காண்கிறோம். அவர்கள் இறைவனுக்கு முன்பாகக் காட்டிய தாழ்ச்சியை "மனிதனும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டு இருக்க வேண்டும்

ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும். தம் தீய வழிகளையும் கொடுஞ் செயல்களையும்விட்டொழிக்க வேண்டும். இது நினிவே அரசன் நாட்டு மக்கள் அனைவருக்கும் விடுத்த செய்தியாகும். இது நினிவே அரசன் அழிவிலிருந்து இறைவன் காப்பார் என்ற நம்பிக்கையில் எடுத்த முடிவாகும். இன்றைய உலகுக்கும் இந்தச் செய்தி பொருத்தமானதாகும்.

ஆனால், யோனாவுக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை. இவர் சினமுற்று ஆண்டவரிடம் "ஆண்டவரே! நான் ஊரை விட்டுப் புறப்படுமுன்பே இதைத்தானே சொன்னேன். இதை முன்னிட்டே நான் தர்சீஸ்சுக்கு ஓடிப்போக முயன்றேன். நீர் கனிவுமிக்கவர்! இரக்கமுள்ளவர்! மிகுந்த பொறுமையும் அளவில்லா அன்பும் உள்ள கடவுள் என்பது எனக்குத் தெரியும். அழிக்க நினைப்பீர்! பிறகுமனதை மாற்றிக்கொள்வீர் என்பது எனக்கு அப்போதே தெரியும் (யோனா 4:1-2) என்று ஆண்டவரின் உண்மை இருப்பை வெளியிட்டுத் தனது உயிரை எடுத்துக்கொள்ள இறைவனிடம் வேண்டுகிறார்.ஆண்டவரோ, நீ சினங்கொள்வது முறையா? என்று கேட்டார். யோனா நகரை விட்டு வெளியேறி ஒரு பந்தலை அமைத்து நிகழப்போவதைப்பார்க்க அங்கே அமர்ந்திருந்தார். இறைத் திட்டப்படி ஆமணக்குச் செடி ஒன்று வளர்ந்து, அவரது தலைக்கு நிழல் தந்து மனச்சோர்வை நீக்கி, மகிழ்ச்சி தந்தது. மறுநாள் ஆண்டவரது கட்டளைப்படி ஒரு புழு அந்தச் செடியை அரிக்கவே, அனல் காற்று வீசிக் கடும் வெயில் அவரது தலையைத் தாக்க, அவர் மயக்கமுற்று, வாழ்வதைவிட சாவதே மேல் என்று வேண்டிக்கொண்டார். அப்பொழுது கடவுள் யோனாவை நோக்கி ஆமணக்குச் செடியைக் குறித்து நீ சினங்கொள்வது முறையா? ஓர் இரவில் முளைத்தெழுந்து, மறு இரவில் முற்றும் அழிந்த அந்தச் செடிக்காக நீ உழைக்கவும் இல்லைஅதைவளர்க்கவுமில்லை!இதற்கு இரக்கம் காட்டுகிறாயே, இந்த நினிவே மாநகரில் வலக்கை எது இடக்கை எது என்று கூடச்சொல்லத் தெரியாத இலட்சக் கணக்கான விலங்குகளுக்கும் மக்களுக்கும்நான்இரக்கம்காட்டாமல்இருப்பேனா? (யோனா 4:9-10) என்று தனது பேரிரக்கத்தின் மேன்மையை யோனாவுக்குப் புரிய வைக்கிறார்.

இறை அழைப்பிலிருந்து தப்பி ஓடிய யோனாவின்மனமாற்றமும்இறைவ கருவியாகப் பயன்படுத்தப்பட்டு நினிவேயின் கொடிய தீய வாழ்விலிருந்து நோன்பிருந்து மனமாற்றம் பெற யோனா இறை ஊடகமாக அமைந்ததையும் இறைவன் சொன்னதைச் செய்யவில்லைஎன்று சினங்கொண்ட யோனாவுக்கு சிறு ஆமணக்குச் செடியூடாக இறைஇரக்கத்தின் மேன்மையை உணரவைத்ததும், இறை கருவிகளாக அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும்நன்றாகக்கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாகும். எனவே, இறை அழைப்பை ஏற்று அதைத் தவிர்த்து விடாமல், மனம் மாற்றம் பெற்று நாம் மட்டுமன்றி நினிவேயைப் போல் உள்ள மற்றவர்களும் மனம் மாறி இறைத் திட்டத்துக்கு உகந்தவர்களாய் வாழுவோம்.

(தொடரும்...)

## நம்பிக்கையின்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)


*"சந்தேகக்கோடு, அது சந்தோஷக் கேடு; இதை மறந்தவன் வீடு, துன்பம் வளர்ந்திடும் காடு"* என்று தற்காலக் கவிஞர் ஒருவர் பாடுகின்றார். சந்தேகம் என்கின்ற வித்தே வீட்டைக் காடாக்குகின்றது; இதயத்தை ரணமாக்குகின்றது; உறவினை நிரந்தரமாகப் பிரிவாக்குகின்றது. தன்னிலே, தனது ஆற்றல்களிலே நம்பிக்கை, பிறரிலே, பிறரது தொடர்பிலே நம்பிக்கை, இறையிலே, இறைவனது இயக்கத்திலே நம்பிக்கை ஆகியவையே அமைதியான வாழ்க்கைக்கு அத்திவாரமாகின்றது. ஒருவர் தனது அருமை, பெருமைகளை ஏற்க மறுப்பது, தனது ஆக்கசக்தி வெளிப்பாடுகளைக் குறைவாக எடைபோடுவது காலப் போக்கில் தாழ்வுச் சிக்கலுக்கே இட்டுச் செல்லும்.

ஒருநாள் எட்டயபுர அரசரைப் பாரதியார் பார்க்கச் சென்ற பொழுது, அரசர் கவிஞருக்குச் சரியான ஆசனம் கொடுக்கத் தவறி விட்டார. அதனைக் கண்டு பாரதியார் கூனிக் குறுகிவிடவில்லை. மாறாக, அரசரைப் பார்த்து,"நீர் ஊருக்கு வேந்தர், நானோ பாடகருக்கு வேந்தர், நமக்குள் உயர்வு தாழ்வுக்குஇடமேது" என்று கூறி, அவருக்குத் இணையாக ஓர் ஆசனத்தில் பாரதியார அமர்ந்தார். பாரதியார் வறுமையில் வாடினாலும்,அழுது முது கவிதை ஒருபோதும் பாடியதில்லை; தன்னைப் பற்றித் தாழ்வாக மதிப்பீடு செய்ததில்லை.

உள்ளதை உள்ளவாறே அவதானித்து, அனுகூலமான ரீதியில் விமர்சிப்பதும் தன்னைப் பற்றிக் கூடுதலாகப் புழுகாமலும் தன்னைப் பற்றியோ பிறரைப் பற்றியோ அநாவசியமாகக் குறை கூறாமலும் நேரிய நோக்கினை வளர்ப்பதும் நலமான வாழ்க்கைக்கு அவசியமாகும். ஆரோக்கியமான சூழலில் மனித மாண்பினை மதித்து ஒருவர் ஒருவருக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தல் ஆரோக்கியமான ஆளுமையை உருவாக்கும். மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற உயர்ந்த இராகங்களிலிருந்து இனிய கீதத்தை இசைமீட்கும்.

**நாணயமற்ற உறவுப் பரிமாற்றம் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யமாட்டாது. நாணயமான உறவுப் பரிமாற்றம் நியாயமற்ற எதிர்பார்ப்புக் களைவேண்டி நிற்காது.**

## மன்னிப்பு



நீங்கள் கடந்த காலத்தைத் தொட விரும்பினால் ஒரு கட்டடத்தைத் தொடுங்கள். நீங்கள் நிகழ்காலத்தைத் தொட விரும்பினால் ஒரு மலரைத் தொடுங்கள். நீங்கள் எதிர்காலத்தைத் தொட விரும்பினால் மனிதரின் உள்ளத்தைத் தொடுங்கள். அது மன்னிப்பு என்ற மகத்தான செயலால் மட்டுமே நிகழ முடியும்.

மன்னிப்பதற்கு ஒருவரின் முடிவும், மன உறுதியும் மட்டுமே தேவை. மனித்துவிட்டு அது மனத்தில் இல்லாமல் மறப்பது சிறந்தது. மறக்க முடியாத வடு இருந்தாலும் மன்னிப்புத் தெய்வீகமாகும். புனித பவுலின் பரிந்துரைக்கிணங்க செல்வந்தர் பிலமோன் ஒனேசிமுவை மன்னிக்க மனம் வைத்தார். அதனால் வரலாற்றில் மறையாத இடத்தைப் பெற்றார்.

**மன்னிப்போம்! மனக் கல்வெட்டில் இடம்பிடிப்போம்.**

# இன்னொரு இயேசு



சிறுகதை

உ.டிலக்ஷிகா

ஆதவனின் கரம்பட்டு அம்புஜங்கள் தலைவிரிக்க வண்ண மலர்களின் அமுதத்தை அருந்த வண்டுகளும் வலை விரிக்க பூமித்தாயின் புதிய பொழுது ஆரம்பமாகிறது. மரகதம், போரில் கணவனை இழந்த இளம் தாய், போரில் உறவுகளையும் உடமைகளையும் இழந்து காய்ந்து போனா கேசமும், சிரிப்பை மறந்த வதனமும் ஒட்டி உலர்ந்த வயிரும் குழிவிழுந்த கண்களும் சிலுவையைத் தினம் சுமக்கும் இளந்தாய் இவள், மரகதத்தின் ஒரே இருதயம் அவளது மகன் வரதன், தாயின் மனம் கோணாது வளர்கின்ற தன்மகன். பத்தாம் தரத்தில் கல்விக் கற்கின்றான். படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி இவனுக்கு நிகர் இவனே தன் மகனை மண் போற்ற வளர்க்க வேண்டும் என்பதே மரகதத்தின் இலக்கு. மரகதம் சிறு சிறு கூலி வேலைகள் செய்து அன்றாட வாழ்க்கையை கொண்டு சென்றாள். வரதனின் பாடசாலையில் சில புதிய மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வரதனுடன் நட்புறவைப் பாராட்டினார்கள். நல் மனம் கொண்ட வரதனும் எந்தச் சூதும் அறியாதவனாய் அவர்களுடன் நெருங்கிப் பழகினான் ஆனால் அவனுடைய நண்பர்கள் போதைக்கு அடிமையானவர்கள் ஏற்கனவே கற்ற கல்லூரியால் துரத்தப் பட்டவர்கள். பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் தின்னுவது போல வரதனின் பழக்கங்கள் சீர்கெடத் தொடங்கியது. பாடசாலைக்குச் செல்லாது குளத்தில் குளிப்பதும் ஊர்ச்சுற்றுவதும் என்று நண்பர்களுடன் அரட்டையடித்தான். மரகதம் மகனில் மலைபோன்ற நம்பிக்கை வைத்திருந்தமையால் அவள் அதனை அறியவில்லை.

வரதன் ஒரு நாள் வயலில் இருந்து மது அருந்துவதைக் கண்ட பங்குத்தந்தை மரகதத்திடம் சென்று முறையிட்டதோடு வரதனுக்கு நல் அறிவுரை கூறியனுப்பினார். சிறுவயதிலிருந்து தாயின் பாசத்தை மட்டும் அனுபவித்த வரதனுக்கு நண்பர்களுடன் செல்வது மகிழ்ச்சியளிப்பதால் அவன் யாருடைய அறிவுரையையும் கேட்பதாக இல்லை. மரகதமும் மகனில் கொண்ட நம்பிக்கையால் அவள் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

மரகதம் கூலி வேலை செய்து கொண்டிருந்த போது மயங்கி விழுந்து விட்டாள். அருகிலிருப்பவர்களின் உதவியுடன் வீடு வந்து சேர்ந்தாள். வரதன் தன் நிலை கண்டு வேதையுறுவான் என்றெண்ணி அவள் அவனிடம் அதைக்கூறவில்லை. பாடசாலை விட்டு வந்த வரதன் தன் நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பதற்காகப் பணத்தைத் தாயிடம் கேட்டான். அதாவது பாடசாலைக்குப் பரீட்சை வினாத்தாள் புத்தகம் ஒன்று வேண்ட வேண்டுமென்று பொய் கூறித் தாயிடம் கேட்டான். தாயிடம் அவ்வளவு பணம் இன்மையால் நாளை தருவதாகக் கூறி மகனை சமாதானம் செய்தாள்.

மரகதம் மகனின் தேவையை நிறைவேற்ற அடுத்தநாள் காலையிலிருந்து அயலவர்களிடம் கடன் கேட்டாள். ஆனால் ஏற்கனவே பெற்ற கடனை வழங்க முடியாமையால் அவளுக்குக் கிடைத்த பரிசு கண்ணீரே. மரகதம் இவ்வாறு வேதனைப்படுவதைக் கண்ட அவளது அயல் வீட்டுக்காரி நகைக்கடைக்காரர் ஒருவர் கடன் தருவதாகவும் விரும்பினால் அவரிடம் சென்று வினவும்படியும் கூறினாள். வரதனின் கல்விக்காகத் தான் எந்த எல்லைக்கும் செல்வதாகக் கூறிய மரகதம் நகைக்கடைக்காரரின் வீட்டின் குறிப்பைக் கேட்டுக் கொண்டு விரைந்து நடந்தாள். வரதன் பாடசாலை விட்டு வருவதற்குள் அவரிடம் சென்று பணத்தை பெற்று விட வேண்டும். என்று ஓட்டமும் நடையுமாக அவரின் வீட்டை அடைந்தாள்.

நகைக்கடைக்காரரிடம் தனது உயிர்மூச்சே வரதன் என்றும் அவனுடைய கல்விக்காகத்தான் இவ்வளவு கஸ்டப்படுவதாகவும் வினாப்புத்தகத்தை வாங்குவதற்குக் கடன் தந்து உதவும் படி கண்ணீரோடு கையேந்தினாள். மரகதத்தை அறியாத நகைக்கடைக் காரரிற்கு நம்பிக்கையில்லை இதனால் தன் மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்து தரும்படியும் அதற்கு ஊதியமாகக் கேட்ட பணத்தைத் தருவதாகவும் கூறினார்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ மிகுந்த வேகமாக அவர் கூறிய வேலையை செய்து முடித்து வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாக வந்தாள். பாடசாலை முடிந்து வந்த வரதன் வீடு பூட்டி இருந்தமையால் நீண்ட நேரம் காவல் இருந்தான். அருகிலிருந்த கடையில் மரகதம் என்று எல்லோரும் கதைப்பது கேட்டுக் கடையை நோக்கிச் சென்றான். அங்குள்ள கடைக்காரர் மரகதம் வீதியில் மயங்கி விழுந்ததாகவும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்ப்பித்ததாகவும் கூறினார். வீதியில் ஓட்டமும் நடையுமாகச் சென்றவன் வழியில் அவனது நண்பர்களை கண்டு அவர்களை துணைக்கு அழைக்கவும் அவர்கள் வர மறுத்து விட்டனர். மிகுந்த வேதனையுடன் வைத்தியசாலைக்குச் சென்றவனுக்காகக் காத்திருந்தது மரகதத்தின் உயிரற்ற உடல். அவளுடைய சேலை முடிச்சில் அவன் கேட்ட பணம் கட்டப்பட்டிருந்தது. செய்தி கேட்டு வந்த பங்குத்தந்தைக்கு மரகதம் இன்னொரு இயேசுவாய் தெரிந்தாள்.



# இடியின் வியாழன் அன்பின் வியாழன் ஆகியது

## Thor's Day to Maundy Thursday

**அ. வியாழன் கிறிஸ்துவிற்கு முன்:**

புனித வாரத்தின் வியாழன் பெரிய வியாழன் என்றும் கட்டளை வியாழன் என்றும் அழைக்கப்படுவதுண்டு. பரிசுத்த வாரத்தில் வருவதால், பெரிய வியாழன், அதாவது வியாழனுக்கெல்லாம் வியாழன் என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளில், இயேசு அன்புக்கட்டளையைக் கொடுத்து, குருத்துவத்தை உருவாக்கியதால் அது கட்டளை வியாழன் எனவும் அழைக்கப்படுகிறது. வியாழக் கிழமைக்கு பெரிய வரலாறு உண்டு.

வியாழக்கிழமை என்பது, ஆங்கிலத்தில் தேர்ஸ்டே **(Thursday)** என அழைக்கப்படுகிறது. இந்த தேர்ஸ்டே என்ற சொல் பழங்கால ஆங்கிலத்தில் தூரஸ்டாக் **(Thuresdaeg)** என வழங்கப்பட்டது. இந்த தூரஸ்டாக்கிற்கும், முற்கால நோர்வே மக்களின் இடியின் தெய்வமாகிய தூனருக்கும் **(Thunor, Norse god of Thunder)** புராண ரீதியான தொடர்பிருந்திருக்க வேண்டும். இதே தூனர் தெய்வத்தை யேர்மனிம் தொனர் **(Donar)** என அழைக்கிறது, இதிலிருந்துதான் யேர்மனிய சொல்லான டொன்னர்ஸ்டாக் (Donnerstag) என்ற வியாழனைக் குறிக்கும் சொல் வருகிறது. முற்கால ஜேர்மானிய நம்பிக்கையும், வியாழக்கிழமைக்குப் பின்னால், இடியின் தெய்வமாகிய துன்ராட்ஸ் (Thunraz) இருப்பதையும், இது உரோமைய-கிரேக்க தெய்வமாகிய யூபிடருடன் (Jupiter) தொடர்புபடுத்தப்பட்டது என்பதை சொல்லாய்வு செய்தால் கண்டுகொள்ளலாம்.

உரோமைய தெய்வமாகிய யூபிடருடைய பெயரில்தான், பண்டைய இலத்தின் மொழி, இதனை யோவிஸ் தீஸ் (Iovis Dies) என அழைக்கிறது. அதாவது யூபிடருடைய நாள் எனலாம். இதனைப் பின்பற்றியே இலத்தின் மொழிக்குடும்பங்கள், வியாழக் கிழமையை, இத்தாலியம் - யோவேதி (giovedi), இஸ்பானியம் - யூவெஸ ; (jueves), பிரான்சியம் - யூதி (jeudi), சார்தினியம் - யோவியா (jòvia), கத்தலானியம் - தியூஸ் (dijous), கலிசியானியம் - யோவெஸ் (xoves), ரோமானியம் - யோய் (joi) என அழைக்கின்றன.

இந்திய மொழிகளில் இந்த நாள் விஸ்னு தெய்வம், மற்றும் புத்த பகவானுடைய நாள் எனவும் அழைக்கப்படுகிறது. இந்தியாவின் அதிகமான மொழிகள் இந்த நாளை குருவார (Guruvāra) என அழைக்கின்றன. குரு என்பது பிராக்ஸ்பதி (Brhaspati) அல்லது யூபிடர் கிரகத்தைக் குறிக்கும். ஆசிய மதங்கள், இந்த நாளோடு, விஸ்னு தெய்வம், புத்த பகவான், மற்றும் தத்தெரிய தெய்வத்தைத் தொடர்பு படுத்துகின்றன.நம்முடைய சகோதர மொழியான சிங்களம், இதனை பிரகாஸ்பதிந்தா (Brahaspatintha) எனத்தான் அழைக்கிறது. இதனை விட சிலேவேனிய மற்றும் சீன மொழிகள் இந்நாளை 'நான்காம் நாள்' என அழைக்கின்றன. கிரேக்க மற்றும் எபிரேய-செமித்திய மொழிகள் இதனை 'ஐந்தாம் நாள்' என அழைக்கின்றன. எபிரேயத்தின் இது 'யொம் கமிக்ஷி' (Yom Khamishi), என்றும் கத்தோலிக்க நாட்காட்டியில் இது 'ஐந்தாம் விழா' (feria quinta) எனவும் அழைக்கப்படுகிறது. தமிழ் மொழியிலும் கூட வியாழன் என்பது, யூப்பிட்டர் தெய்வம் அல்லது, வியாழன் என்ற கிரகத்தைத்தான் குறித்துக் காட்டியது. வானத்தின் கோள்களில் உள்ள தெய்வங்கள்தான், மண்ணுலகின் மனிதருடைய நாட்களையும், காலங்களையும், அசைவுகளையும் தீர்மானித்தார்கள் என்பதைப் பல காலமாக மனிதர்கள் நம்பினார்கள். தங்கள் சிந்தனையின் தெய்வத்திற்கு நாள்ளொன்றை உண்டாக்கினார்களா, அல்லது, தங்கள் நாளுக்குத் தெய்வம் ஒன்றை உண்டாக்கினார்களா. இரண்டும் ஒன்றுதான்.

> **அன்பு**
>
> **நற்கருணை-குருத்துவம் என்ற இயேசுவின் இனிய முகத்தைக் காட்டும் இந்த அழகான நாளில், வெளி ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், புரியாத சிந்தனைகளையும், கோட்பாடுகளையும், இன்னும் சிக்கலாக்காமல், அன்பைக் கொண்டாடுவோம். அன்பில்லையேல் நற்கருணையும், குருத்துவமும் வெறும் மூட நம்பிக்கையாகவும், சடங்காகவுமே காட்சி கொடுக்கும்.**

**ஆ. வியாழன் கிறிஸ்துவிற்குப் பின்:**

நல்ல ஒரு யூதராக இயேசு ஆண்டவர் வியாழனை, ஐந்தாம் நாளாகக் கண்டிருப்பார் 'யொம் கமிஷி'. இந்த நாளில் அவர் யூத வழிபாடுகளிலும் பங்கேற்றிருப்பார். யூதர்கள் வியாழக் கிழமைகளில் அதிமான உணவுத் தவிர்ப்பு நோன்புகளைக் கடைப்பிடித்தார்கள். இந்த வியாழக்கிழமைகளின் காலைவேளைகளில், தோறா எனப்பட்ட சட்ட நூல்கள் வாசிக்கப்பட்டன, அதனை அவர்கள் தியானித்தார்கள். இந்த அழகான நாளைத் தெரிவு செய்த ஆண்டவர், ஓர் முக்கியமான வியாழன் அன்று, இரண்டு முக்கிய நிகழ்வுகளை ஏற்படுத்துகிறார். அவருடைய சிந்தனையிலே, வெள்ளியிலே தான் மரணிக்க விருப்பதும், ஞாயிறு தினத்தன்று உயிர்க்க இருப்பதும் நிச்சயமாக ஓடிக்கொண்டிருந்திருக்கும்.

பாஸ்கா விழாவின், இந்த இரண்டு மறைநிகழ்வுகளையும் அர்த்தப்படுத்த, அவர் இந்த வியாழனைத் தெரிவு செய்திருக்கிறார். அந்த இரண்டு முக்கிய நிகழ்வுகளாவன:

**அ. இந்த வியாழன்** அன்றுதான் அவர் நற்கருணை என்ற புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார் - இந்த நற்கருணைதான் கிறிஸ்தவத்தின் அடிநாதமும், அர்த்தமுமாகிறது. இந்த நற்கருணையில்தான்அனைத்துத் திருவருட் சாதனங்களிலும் பிறந்து அவற்றின் அர்த்தத்தைப் பெறுகிறது. இந்த நற்கருணை புதிய பாஸ்கா விழாவாகி, வரவிருந்த வெள்ளியையும், ஞாயிறையும் முன்கூட்டியே அறிவிக்கிறது. நற்கருணையை ஏற்படுத்திய ஆண்டவர் இயேசு அதனோடு சேர்த்து, குருத்துவத்தையும் அர்ச்சிக்கிறார்.குருத்துவம் பிறந்த நாள் என்று வெறுமனே இதனைச் சொல்லாமல், ஏற்கனவே வழக்கிலிருந்த உலகம் சார்ந்த, சடங்குகள், சம்பிரதாயங்கள் சார்ந்த குருத்துவத்திற்கு, இன்று ஆண்டவர், உண்மையான குருப்பட்டம் கொடுத்தநாள், என்று இதனைக் குறிக்கலாம். இவ்வளவு காலமும், குருத்துவம் தொழிலாக,கண்ணுக்குத் தெரியாத கடவுளை அனுகுவதாகவே பல மக்கள், கலாசாரங்கள் மத்தியிலிருந்தது, ஆனால் இயேசு ஆண்டவர்தான், இந்த விசேட வியாழன் அன்று, அதனை ஏற்றுக்கொண்டு, அதற்கு அர்த்தம் கொடுத்து, அதனை ஆசீர்வதித்து, உண்மைக் குருத்துவத்தை ஏற்படுத்தினார். அதாவது கடவுள் குருத்துவத்தை ஏற்படுத்திய நாள். மனிதர்களுடைய சடங்குகளிலிருந்து குருத்துவம் விடுவிக்கப்பட்டு, அது பலியின் ஏற்பாடாக மாற்றம் பெறுகிறது. 'குருத்துவத்திற்கு குருத்துவ நாள்'.

அருட்பணி ஜெகன் கூஞ்ஞே

**ஆ. இரண்டாவது** - இன்றைய நாள் அன்புக் கட்டளையின் நாள். அதே வியாழன் அன்று இயேசு ஆண்டவர் ஒரு முக்கியமான கட்டளையைத் தன் சீடர்களுக்குக் கொடுக்கிறார். யூத சமூகம் எற்கனவே அன்பைப் பற்றி அறிந்திருந்தது. 'உன் அடுத்திருப்பவரை அன்பு செய்வாயாக' (இணைச்சட்டம் 6:5, லேவியர் 19:18) என்று ஏற்கனவே லேவியர் புத்தகம், சட்டம் கொடுத்திருக்கிறது. இப்போது அதன் உண்மையான அர்த்தத்தை இயேசு தெளிவுபடுத்துகிறார். இந்த 'அடுத்திருப்பவர்' யார், என்பதை அந்நாள் வரை யூத சமூகம் முழுமையாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் 'அடுத்திருப்பவர்' என்பதை, ஒரு யூதன் இன்னொரு யூதனை அன்பு செய்ய வேண்டும் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் அன்பிற்கு வரையறையோ, ஆளோ, நாளோ கிடையாது, 'அடுத்திருப்பவர்' யூதர் மட்டுமல்ல, அவர் அனைத்து மனிதரும் ஆவார், என்ற உண்மையை இன்றுதான் இயேசு காட்டினார் (யோவான் 13:34- 35, ஒப்பிடுக மத்தேயு 19:19, லூக்கா 10:27, யோவான் 3: 16, 2 யோவான் 5). இப்படியாக சிறையிலிருந்து அல்லது, மட்டுப்படுத்தப்பட்டிருந்த பிறரன்பு, விடுவிக்கப்பட்டு, அது உண்மையன்பாக மாற்றம் பெறுகிறது. நம்முடைய அன்பிற்கு அனைவரும் தகுதியானவர்கள் என்ற நிதர்சனம் புலனாகிறது.

இதனால்தான் யூபிடர் என்ற தோர் தெய்வத்தின் பெயரால் இருந்த வியாழன், அன்புக் கட்டளையின் நாளாகி, பெரிய வியாழன் ஆகிறது. ஆக, பெரிய வியாழன் என்றால், ஒவ்வொரு கிறிஸ்தவரும், நற்கருணையையும், குருத்துவத்தையும் அன்பையும் நினைவு கூர்ந்து வாழவேண்டும். இன்று உலகில் அன்பு என்ற சொல்லும், பண்பும்தான் அதிகமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இச்சை, பிரியம், தேவைகள், காமம், போன்றவை அன்பு என்ற தெய்வீக-மனிதப் பண்பை மழுங்கடிக்கப் பார்க்கின்றன. பெரிய வியாழன் அன்று அன்பு விடுவிக்கப்பட்டது, இருந்தாலும், இன்றும் பல மனித இதயங்களில் அது சிறையில் தான் இருக்கிறது. கிறிஸ்தவம் இயேசு கொடுத்த இந்த அன்பை, இன்னொரு முறை சிறையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டும். இயேசுவின் இந்த அன்பிற்கு, இனம், மதம், குலம், மொழி, நிலம், சாதி, பாலினம், நட்பு வட்டம், உறவினர் கூட்டம், தேசிய அடையாளம், வரையறைகள் எதுவுமே, கிடையாது. ஏனென்றால் இவையனைத்தும் மனிதர்கள் உருவாக்கிய மாய உலக அமைப்புக்கள். இதற்குள் இயேசுவும் இல்லை அவர் அரசும் இல்லை. அவரும் - அதுவும் இவற்றையெல்லாம் கடந்தவர்கள்.

அன்பு-நற்கருணை-குருத்துவம் என்ற இயேசுவின் இனிய முகத்தைக் காட்டும் இந்த அழகான நாளில், வெளிஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், புரியாத சிந்தனைகளையும், கோட்பாடுகளையும், இன்னும் சிக்கலாக்காமல், அன்பைக் கொண்டாடுவோம். அன்பில்லையேல் நற்கருணையும், குருத்துவமும் வெறும் மூட நம்பிக்கையாகவும், சடங்காகவுமே காட்சி கொடுக்கும்.

அன்பை வாழவைக்காத இந்த உலகம், இன்னொரு முறை மனிதர்கள் உருவாக்கிய தோர் தெய்வத்தையும், யூபிடர் தெய்வத்தையும் கொண்டுவந்து விடும். வியாழன் இயேசுவுக்குரியது, வியாழன் அன்பிற்குரியது, அதனால் தான் அது பெரிய வியாழன். உண்மை அன்பினால் உலகை ஆட்சி செய்வோம். 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரிய பிறர்க்கு' குறள் - 72.

**"ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்ற புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன், நான் உங்களுக்கு அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள"**

(யோவான் 13:34)

## ஆசியருளும் உயிரப்பின் நாயகனே

அன்பான தெய்வமே
ஆணிகளில் அறையப்பட்டவரே
இரத்தம் சிந்தி உம் இரக்கத்தை
உலகறிந்து உம்மைப் போற்ற
ஊதாரி மைந்தர்கள்
எண்ணற்ற கணக்கில் உலகில்
ஏன் இந்த நிலையென ஏங்கி
ஐயம் கொண்டு வாழும் எம்மை
ஒன்றாக இணைந்து
ஓராயிரம் ஏக்கங்களைக் களைந்து
ஔடதமாக ஆக்கியருளும் - எம்
உயிர்ப்பின் நாயகனே

சேரூபன் ஷெர்வின்

**புனித இரவில் பாஸ்காத் திருவிழிப்பு**

பரிசுத்த பாப்பரசர் 12ம் பத்திநாதர் அவர்களால், பாஸ்காத் திருவிழிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. (De Solemni Vigilia Paschali Instauranda-1951) புனித வாரத்திற்குரிய புதிய நெறிமுறை கலை-ளயும், குறிப்பாகக் குருத்து ஞாயிறு, புனித வியாழன் மற்றும் புனித வெள்ளி வழி-பாடுகளை புதிதாக மாற்றியமைத்த பெருமை இவரையே சாரும், (Maxima Redemptionis - November 19,1955). புனித வியாழன் வழிபாடு காலையிலி ருந்து மாலை நேரத்திற்கும், புனித வெள்ளி மாலை மூன்று மணிக்கும் மாற்றப்பட்டது.

**பாஸ்காத் திருவிழிப்பு வழிபாட்டை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்:**

***முதல் பகுதி:*** திரு ஒளி வழிபாடுபாஸ்கா திருவிழிப்பிலே கிறிஸ்துவின் ஒளியைக் குறித்து ஆரம்பமாகின்ற இந்த அழகான திருவிழிப்பு வழிபாடு, ஒரு உன்னத வழி-பாடாகும். அனைத்து வழிபாடுக ளிலுமே சிறந்த, உயர்ந்த ஒரு வழிபாடு இது தான். எல்லா கொண்டாட்டங்களி லுமே சிறந்த கொண்டாட்டம் இந்த உயிர்ப்பு விழா. எல்லாப் பெருவிழாக்களி லுமே முதன்மையானது இந்த உயிர்ப் புப் பெருவிழாவாகும். கிறிஸ்துவினு டைய பாஸ்கா மறைபொருளின் உச்சம் இந்த உயிர்ப்பு பெரு விழாவே: 'ஏனெனில் பாஸ்கா விழா இதுவே: இதில் மெய்யான செம்மறியாகிய கிறிஸ்து கொலையுண்டார் அவரது இரத்தத் தால் நம்பிக்கையாளரின் கதவு நிலை கள் அர்ச்சிக்கப்படுகின்றன.' ஆகவே, இந்த இரவைக் குறித்தும், இயேசுவின் வழியாகத் தந்தை வைத்திருந்த தெய் வீக திட்டத்தைக் குறித்தும் இந்த அழ கிய பாடல் அமைகின்றது. ஐந்தாம் நூற் றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக் கும் இடைப்பட்ட காலத்தில் உருவான ஒரு மேலைத்தேய புகழ்ச்சிப் பாடலா கும். பன்னிரெண்டாம் நூற்றாண்டி லேயே முழுமையான ஒரு பாடலாக தோற்றம் பெற்றது. இதற்கு காரண கர்த் தாவாக இருந்தவர் தான் பரிசுத்த பாப் பரசர் 3ம் இன்னசென்ற் (Pope Innocent III). இது அன்றைய திருவிழிப்பு வழிபாட்டின் முதற் பகுதியான திரு ஒளி வழிபாட்டில் இடம்பெறுகின்றது. கிறிஸ்துவே ஒளியானவர். அந்த ஒளியே இருளில் ஒளிர்ந்தது. அந்த ஒளியே இருளை ஒளிர்வித்தது. இதைப் பாஸ்கா அறிவிப்பு பாடல் அல்லது பாஸ்காப் புகழ் கீதம் என்றும் சொல்லலாம்.

கத்தோலிக்க திருச்சபைக்கே உரித்தான ஒரு வழிபாட்டுக் கீதமாகும் அல்லது பாடலாகும். கிறிஸ்துவினு டைய உயிர்ப்பைப் பெருமகிழ்வோடு அறிக்கை யிட்டு, கிறிஸ்துவினுடைய உயிர்ப்பு வரைக்கும் தந்தையாம் கடவுள் கொண்டிருந்த மீட்புப் பாதை தெளிவாகக் காட்டப்படுகின்றது. இரு ளின் மீது ஒளியின் ஆட்சி அது ஒரு வெற்றியாக காட்டப்படுகின்றது. புது நெருப்புக் கிடைக்கப்பெற்று அதிலிருந்து இவ்வுலகமே ஒளி பெறுவதாக காட்டப் படுகின்றது. அந்த ஒளி தான் கிறிஸ்து. புதுஒளி என்பது புதிய படைப்பையும் குறித்துக்காட்டுகின்றது. கடவுள் இந்த உலகைப் படைத்த போது, "ஒளி தோன்றுக!" என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார்", தொநூ: 1:3. தமது படைப்பின் முதற் படைப்பாகிய ஒளியை ஆண்டவர் படைக்கின்ற போது அது படைப்பிலே சிறந்த படைப்பாகின்றது.

அவ்வொளியே புது ஒளியாக சுடரேற்றப்படும் கிறிஸ்துவே இவ்வுல கிற்கு ஒளியாகவும் எம்மை இவ்வொளி யினால் புதுப்படைப்பாக மாற்றவும் வல்லவர் என்பதனைக் காட்டுகின்றது. **'விண்ணகத் தூதர் அணி மகிழ்வதாக...'** என்று ஆரம்பிக்கும் இந்தப் புகழுரை இலத்தின் மொழியிலே வினைச்சொல்லுடன் ஆரம் பிப்பதனால் (Exsultet i am angelica turba caelorum) அந்த வினைச்சொல்லே அப்புகழுரையின் பெயராக மாறுகின்றது - Exsultet. அல்லது "Paschale praeconium" என்றும் அழைக் கலாம். தமிழ் மொழி நடையில் அது அவ் வாறு அமைவதில்லை. இந்தப் புகழுரைய-ின் ஆரம்பம் அழகான விவிலிய இறையிய-லைக் கோடிட்டுக் காட்டுகின்றது. அதாவது கிறிஸ்து பிறந்த பொழுது இந்த விண்ணகத் தூதர் அணிகளே பிறந்த இயேசுவை வாழ்த்திப் பாடுகின்றனர்: 'உடனே விண்ணகத் தூதர் பேரணி அந்தத் தூதருடன் சேர்ந்து, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" என்று கடவுளைப் புகழ்ந் தது', (லூக்: 2:13,14) இதே வாழ்த்தொலி இயேசுவினுடைய உயிர்ப்பிலும் இருக்க வேண்டும் ஏனெனில் தந்தையின் திட்டம் இயேசுவில் இந்தப் பாஸ்கா மறைபொருளி னூடாகவே நிறைவடைகின்றது.

திருச்சபையோடு இணைந்து கொண்டாடும் போது தான் அதன் ஒளி மகிமைபெறுகின்றது: 'இப்பெரும் சுடர்களால் அழகுபெற்று அன்னையாம் திரு அவையும் களிகூர்வதாக'.கிறிஸ்துவினுடைய பிறப்பு விண்ணுலகத்தினருக்கு மகிழ்ச்சி, ஆனால் அவரது இறப்பும் உயிர்ப்பும் மண்ணில் வாழும் மாந்தருக்கு மகிழ்ச்சி. ஆகவே விண்ணகத் தூதர் அணியோடு இணைந்த எமது வெற்றியின் பாடலும் இதுவே. பாவத்தளையி லிருந்து இவ்வுலகிற்கு வெற்றியளித்த மாவீ ரன் இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடும் ஒரு வெற்றிப் பாடல். விண்ணையும் மண்ணையும் அழைக்கும் திருச்சபையின் மகிழ்வில் இணைந்து நிற்க அழைக்கும் ஒரு முகவுரை.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தூய்மையான முறையிலே கொண்டாட ஒளியையும் - இரவையையும், இடத்தையும் - நேரத்தையும், குருவையும் - பங்குபற்றும் மக்களையும் புனிதப்படுத்தும் ஓர் அற்புத சடங்கு. இன்னும் கூறப்போனால், கிறிஸ்துவின் உயிர்ப்பை அடையாள ரீதி யாக பிரதி நிதிப்படுத்துவதே இந்த ஒளி: 'கிறிஸ்துவின் ஒளி இதோ - இறைவா உமக்கு நன்றி' என்று இயேசுவையே அச்சாரமாகக் கொள்கின்றோம். இவ்வழி பாடு ஆலயத்திற்கு வெளியே இடம்பெறு கின்றது. ஏனெனில் இப்பது ஒளி ஆலயத் தின் நுழைவாயினூடாக எடுத்துச் செல்லப் படுகின்றபோது அந்த ஒளியை பின்பற்றியே மக்கள் தங்கள் வாழ்வின் வெளிச்சத்தை தேடவேண்டும். புதுத் தீயை ஆசீர்வதிக்கும் போது, 'இவ்வாறு இப்பாஸ்காத் திருவிழா வழியாக விண்ணகத்தின் மீது கொண்ட ஆவலால் நாங்கள் பற்றியெரிவோமாக' (புதுத்தீயை புனிதப்படுத்தும் செபம்) என்று விண்ணக வாழ்வின் சுவையை இம்மறை நிகழ்வுகளின் கொண்டாட்டத்தால் நிறைவு பெறச் செய்கின்றார் கிறிஸ்து. இதன் பலன், 'சாவின் மீது அவர் கொண்ட வெற்றியில்

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

**22**

*- அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**அத்தியாயம் 9**

**சமாளிக்கும் கிறிஸ்தவத்தைப் புதுப்பிக்கத் தமிழ் விடுதலை இறையியல் தோன்ற வேண்டும்**

**9.2 2ஆம் வத். சங்கத்தில் தென் அமெரிக்க ஆயர்களின் தாக்கமும் விடுதலை இறையியல் தொடக்கமும்.**

ஆனால் புனித பாப்பரசர் 2ஆம் அருளப்ப சின்னப்பர் சங்க காலத்திலே பிற்போக்கான இறையியலாளராக செயற்பட்ட, ஜேர்மன் கருதினால் றாட்சிங்கரை, கத்தோலிக்க விசுவாசக் கோட்பாடுகளுக்கு பொறுப் பானவராக நியமித்தார் (Card. Ratzinger, Prefect of Congregation For Faith & Doctrine). அதனால் இவர் 1983ஆம் ஆண்டில், 2ஆம் வத். சங். முடிந்து 18 ஆண்டுகளுக்கு பின்பும், தென் அமெரிக்க விடுதலை இறையியலாளருக்கு எதிராக, தனது கண்டன அறி விப்பை, (Instruction) வெளிப்படுத்தினார். இந்த விடுதலை இறையியல்கள் மாக்சிய கம்யூனிஸ்ட் போக்கைக் கொண்டதென்று விமர்சித்தார். ஆனால் அதன் தாக்கம் தென் அமெரிக்க திருஅவைகளின் ஆர்வத்தை குறைக்கவில்லை.

சங்கம் முடிந்த உடனேயே, இலத்தீன் அமெரிக்கத் திரு அவைகளின் ஆயர்கள், இறையியலாளர்கள் தமது திருஅவைகளிலே புதிய அடிப்படை குழுமங்களையும், (Basic Christian Communities BCC) சமூக அநீதிகளுக்கெதிரான போராட்டங்களையும் ஊக்கப்படுத்தினர். புஎப்லா, மெடெலீன் (Puebla, Medellin) என்ற நகரங்களில் ஆயர் சங்கங்களை நடாத்தினர். குஸ்ராவோ குற்றி ஏறெஸ், லெயனாடோ பொவ், குலொட் விஸ் பொவ், யோண் சொப்றீனோ ( Gustavo Guttierez, Leonardo Boff, Clodvis Boff, Joan Sobrino) போன்ற இறையியலாளர்களின் விடுதலை இறையியல்களும், அவைக்கு உகந்த கிறிஸ்தவ அடிப்படை குழுமங்களும் முன் எடுத்துச் செல்லப்பட்டன. (தொடரும்...)

## வியாகுலப் பிரசங்கம் (பசாம்) போட்டி

இளவாலை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தினரால் நடாத்தப்பட்ட பிழைதீர்க்கும் மந்திரமும், வியாகுலப் பிர சங்கம் (பசாம்) போட்டி கடந்த 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிய ளவில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி ஜெயக்குமார் அடிகளாரும், இளவாலை மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழக ஆன்மீக இயக்குநர் அருட்பணி A.ஞானப்பிரகாசம் அடிகளாரும் மற்றும் சில்லாலைப் பங்குத்தந்தை அருட் பணி B.பிறாயன் அடிகளாரும் கலந்து சிறப்பித்துள்ளனர். அருட்பணி B.பிறாயன் அடிகளாரினால் போட்டி விதிகள் கூறப் பட்டு, இறைவணக்கத்துடன் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இளவாலை மறைக்கோட்ட பங்குத்தந்தையர்களுக்கும், , அருட்சகோத ரிகளுக்கும், போட்டியாளர்களுக்கும் பாராட் டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


விண்ணக வாழ்வின்
10ம் ஆண்டு நினைவு

மண்ணில்
10
08
1932



விண்ணில்
31
03
2013

அமரர் நீக்கிலஸ் பிலோமினா

பாரினில் உங்கள் கனிவான அன்பால்
எமைவிட்டுப் பிரிந்து சென்று ஆண்டுகள்
பத்து ஆனதம்மா!
கண்ணின் மணிபோல்
எமைக்காத் தாயே - இன்று
அரவணைக்க யாருமின்றி தவிக்கிறோம்
பொங்கி எழும் நினைவுகளோ - புலம்பித்
தீர்த்தாலும் கண்ணீராய்க் கசிந்து
கனவிலும் வலிக்கிறது.
எங்கள் ஆயுட்காலம் வரை
நீங்கள் ஓர் ஆலயமே!
இறைவன் பாதத்தில் சங்கமித்த உங்கள்
ஆன்மா சாந்தியடைவதாக

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்

ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம் (AD/30)



விண்ணக வாழ்வின்
7ம் ஆண்டு நினைவு

மண்ணில்
1955
05
11



விண்ணில்
2016
03
27

அமரர்
திருமதி . கனகராஜா மரியகொறற்றி (நேசராணி)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரித்த பின்னும் என்னை மறவாதீர்கள்"

நாவலர் வீதி
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்

AD-29

என்றும் உங்கள் நினைவில்
பெஞ்சமின் குமாரகுலசிங்கம்
குடும்பத்தினர்

# குருத்துவத் திருநிலைப்படுத்தல்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு திருத்தொண்டர்களும் எதிர்வரும் ஏப்ரல் 15ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாகத் திரு நிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களாகிய **த. ராஜ் டிலக்ஷன், அ. யோண் கனிசியூஸ்** ஆகியோரே யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக் குருக்களாக அருட் பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் த. ராஜ் டிலக்ஷன்** மாகியப்பிட்டிப் பங்கின் புனித செபஸ்ரியார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு.திருமதி. தர்மராஜா பற்றிமாசுகிர்தம் தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை மானிப்பாய் புனித அன்னாள் பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும் மெய்யியல் கற்றை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மற்றும் கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியலை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் அ. யோண் கனிசியூஸ்** மண்டைதீவுப் பங்கின் புனித பேதுருவானவர் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு.திருமதி. அன்ரனி ஜெறால்டின் தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத் திலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும் மெய்யியல் கற்றை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மற்றும் கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியலை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

# திருத்தொண்டர்களாக இரு அமல மரித்தியாகிகள்



யாழ். மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் இரண்டு அருட்சகோதரர்களுக்கான திருத்தொண்டர் திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது.

கொழும்புத்துறையில் அமைந்துள்ள டி மசனட் சிற்றாலயத்தில் நடைபெற்ற இத்திருச்சடங்கில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கித் திருப்பலி ஒப்புக்கொடுத்து அருட்சகோதரர்களான **கிறேசியன் றெமோசன் றெமோ, தர்சன் லம்பேட்** ஆகிய இருவரையும் திருத்தொண்டர்களாகத் திருநிலைப் படுத்தினார்.

# முழு இலங்கை நாட்டினதும் சமாதானத்துக்காக இதயசுத்தியோடு போராடியவர் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை

## நோர்வே நாட்டைச் சேர்ந்த முன்னாள் சமாதானத் தூதுவர் திரு எரிக் சொல்கெயும் புகழாரம்

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் மறைவின் இரண்டாவது நினைவு தினம் கடந்த 30 ஆம் திகதி மன்னாரில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக முன்னாள் சமாதானத் தூதுவரும் தற்போதைய உலகச் சுற்றுச்சூழல் ஆலோசகருமாகிய நோர்வே நாட்டைச் சேர்ந்த திரு எரிக்சொல்கெயும் கலந்து கொண்டார். மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அமைந்துள்ள ஆயர் அவர்களின் கல்லறைக்கு திரு எரிக் சொல்கெயும் அவர்களால் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்யப்பட்டது. பின்னர் மன்னார் நகர மண்டபத்தில் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது.




திரு எரிக் சொல்கெயும் அவர்கள் தனது சிறப்புரையில் மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் தமிழ் மக்களுடைய விடிவுக் காக மட்டுமல்ல இலங்கை நாட்டினுடைய சமாதானத்துக்காக இதய சுத்தியோடு உழைத்தவர் என்று அவரைப் பாராட்டினார். யுத்த காலத்தில் தான் மேற்கொண்ட சமாதான முயற்சிக ளின் பொழுது ஆயர் அவர்களுடைய முழுமையான பங்களிப்பை அவர் நன்றியோடு நினைவு கூர்ந்தார்.

உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் ஆயர் அவர்களுடைய துணிச்சலான பங்களிப்பை அவர் பெருமையோடு நினைவு கூர்ந்து அவருக்கு நன்றி கூறினார். இந்நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர், திருகோணமலை மறை மாவட்ட ஆயர், யாழ்ப்பாணம் மறை மாவட்டக் குரு முதல்வர், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் உட்பட பல குருக்கள், துறவியர், அரச அரச சார்பற்ற அதிகாரிகள், இறைமக்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வைத் தொடர்ந்து மன்னார் மறை மாவட்ட ஆயர், திருகோணமலை மறைமாவட்ட ஆயர், மற்றும் யாழ் மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வர்கள் ஆகியோருடன் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றையும் திரு சொல்கெயும் அவர்கள் நடத்தி தற்காலப் பிரச்சனைகள் பற்றி கேட்டு அறிந்தார்.

# யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்ற திருப்பாடுகளின் ஆற்றுகைகள்



மணற்காடு புனித அந்தோனியார் ஆலய இறைமக்களால் "பலிக்களம்" எனும் திருப்பாடுகளின் ஆற்றுகையானது கடந்த 26.03.2023 அன்று அரங்கேற் றப்பட்டது.

இவ்வாற்றுகைக்குரிய வேட, உடை, ஒப்பனை அரங்க வடிவமைப்பு, என்பவற் றை திரு. அ. அன்றூ யூலியஸ் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார்.

அமரர் அருட்பணி மரிய சேவியர் அடிகளின் எழுத்துருவாக்கத்தில் உரு வான இவ்வாற்றுகையானது பங்குத் தந்தை அருட்பணி யோண் குரூஸ் அடிகளாரின் அயராத முயற்சியிலே அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.





நாரந்தனைப்பங்கில், கடந்த சனிக் கிழமை 01.04.2023 "சித்தம் செய்த இரத்தம்" என்னும் திருப்பாடுகளின் ஆற்றுகை நடைபெற்றது. அருட்பணி. அஜந்தன் அடிகளாரின் தலைமை, எண்ணம், எழுத்து உருவாக்கத்தில், திருவாளர் நோபேட் அவர்களின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டது.

இவ்வாற்றுகை நாரந்தனை பங்குக் கலைஞர்களின் முழுப்பங்களிப்புடன் நடைபெற்றது. இதிலே நூற்றுக்கும் மேற் பட்ட கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர். உள்நாடு மற்றும் வெளிநாடுவாழ் மக் களின் பங்களிப்புடன் அரங்கேற்றப்பட்டுப் பலரது பாராட்டையும் பெற்றது.




புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த 03.04.2023 "பாவம் கழுவிய குருதி" என்னும் திருப்பாடுகளின் ஆற்றுகை புனித பத்திரிசியார் கல்லூரியின் மாண வர்களினால் பெருமையுடன் அரங்கேற்றப் பட்டது.

இவ்வாற்றுகையானது அதிபர். அருட் பணி A. P. திருமகன் அடிகளாரின் தலை மையிலும் மற்றும் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியர் திருவாளர். யேசு தாசன் இக்னேசியஸ் (பிரபா) அவர்களின் எழுத்துருவாக்கம், மற்றும் நெறியாள்கை யில் அரங்கேற்றப் பட்டது. இவ்வாற்றுகை பத்திரிசியார் கல்லூரியின் மாணவக்க லைஞர்களின் முழுப்பங்களிப்புடன் நடை பெற்றது.



திருமறைக் கலாமன்ற தயாரிப்பான "குருதி கழுவிய குவலயம்" திருப்பாடுக ளின் தவக்கால ஆற்றுகை கடந்த 30 ஆம் திகதி முதல் ஏப்பிரல் மாதம் 02 ஆம் திகதி வரை திருமறைக்கலாமன்ற அரங்கில் அரங்கேற்றப்பட்டது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சி யமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இரு நூறுக்கும் அதிகமான கலைஞர்களுடன் மேடை யேற்றப்பட்ட இவ் ஆற்றுகையின் நாடகப் பிரதியை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமாரே எழுதியுள்ளதுடன், அவரே இதற்கான நெறியாள்கையையும், இம் முறை செய்து ள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.